வாழ்க்கை விநோதங்கள்

வ.ரா.



கஸ்தூரிபதிப்பகம்-திருத்தருப்பூண்டி

வாழ்க்கை வினோதங்கள்

வ. ரா.

பிரசுரம்:

கஸ்தூரி பதிப்பகம்

திருத்தருப்பூண்டி—தஞ்சை ஜில்லா

ரூ. 2-0-0.

முதற் பதிப்பு 1947

Printed at the B. N. K. Press, Madras. for P. I. C. No. T. E. 124/D. 1000.

முகவுரை

'பாயிரமல்லது பனுவல் அல்ல' என்று இலக்கணப்பித்தர் வாதம் செய்ய, இந்நூலை இலக்காக்கக்கூடாதென்றே அன்பர் வ. ரா. அவர்களின் இவ்வரிய நூலுக்கு முகவுரை எழுதும் பொருப்பை—கடினம் என்று தெரிந்தே—ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

இப்புத்தகத்தில் இருபது 'வாழ்க்கை விநோதங்கள்' சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. தமிழ் எழுத்தாளர் பலர்பேரில் சர்வ சாதாரணமாய்—நியாயமாயுங்கூட—சுமத்தப் படும் மிகைபடக்கூறல் என்னும் குறை வ. ரா. அவர்களின் எழுத்தில் ஒரு சிறிதும் இல்லை. உள்ளதை உள்ளவாறே கூறும் இப்பெரியார் சமூகத்தின் முதுகெலும்பென அமைந்திருக்கும் இவ்விருபது தினுசு வாழ்க்கைகளை தம்முடைய இயற்கைச் சொற்செட்டு, ஆழ்ந்த கருத்து, உண்மை வாதம் முதலிய பல லட்சணங்கள் ததும்ப, இனிய நடையில் அழகாக எடுத்துரைத் திருக்கிறார்.

உயர் பாரதியாரின் ஒப்பற்ற சீடராகிய இவர் "மோகத் தைக் கொன்று விடு" என்ற அப் பொய்யாமொழிப் புலவரின் புனித வாழ்க்கை இந்நூலில் கையாண்டு காட்டினார் போலும்! இவர் இங்கு எடுத்துச் சித்தரித்திருக்கும் பல்வேறு வாழ்க்கை யிலும் பணப்பேய், பதவி மோகம் பிடித்தவர் எவரும் இல்லை - எல்லோரும் சாமானியர்கள் - மனச் சாட்சியை விற்காதவர்கள்- சமூகமாகிய அழகிய கட்டிடத்திற்கு இன்றியமையாத உறுதி பெற்ற உண்மைக்கற்கள். ஒருகல் குறைந்தாலும் கட்டிடத்தின் சோபைக்கும் பலத்திற்கும் குறை ஏற்படுமல்லவா? அது போல சமூகத்தின் உறுப்புக்களான வாழ்க்கை விநோதங்கள் ஒன்று குறைந்தாலும் அழகும் வலுவும் குறையும் - இதைப் போன்ற இன்னும் பல வாழ்க்கை விநோதங்கள் தேவை - ஒரு பொழுதும் தெவிட்டாது.

ஒவ்வொரு வாழ்க்கை விநோதத்திலும் செறிந்து கிடக்கும் உண்மைதத்துவங்களை வாசகர்களுக்கு முன் கூட்டியே எடுத் துரைப்பது தவறு என்ற கொள்கை கொண்ட நான் அத்துறை யில் இறங்கப் போவதில்லை. எனினும் சமூக வளர்ச்சிக்கு

இன்றியமையாத இந்த வாழ்க்கை விநோதங்களில் எடுத்துக் காட்டப் பட்டிருக்கிற - பொது உண்மைகளை முக்கியமானவை களையாவது - எடுத்துக் கூறுதல் பொறுத்தமாகும்.

பரம்பரையாய் வைதிகர்களாய் இருந்தவர்களும் புகழ், பணம், பதவி மோகத்திற்கு இரையாகி, தங்கள் குறிக்கோளி லிருந்து தவறுகின்றார்கள்—மேலதிகாரிகளால் அவமானம் அடைந்தவர்கள், கடமையாய் அல்லது துரோகமாய் நடத்தப் பட்டவர்கள் வாழ்க்கையில் வெறுப்படைந்து, சமூகத்தொண்டில் ஈடுபட்டு தங்கள் கவலையையும் கஷ்டங்களையும் மாற்றிக்கொள்ள முயல்கின்றனர்—பட்டம் பெற்ற படிப்பிற்கும் சமூகத்தொண் டிற்கும் 'ஸ்நானப்ராப்தி' கூட இல்லை, (வேண்டுவன உபகாரம் செய்யவேண்டும் என்ற நல் மனம், சுறுசுறுப்பு, நகைச் சுவை, தைரியம்) என்பது சந்தைப்பேட்டை செல்லாயியின் வாழ்க்கை யிலிருந்தே விளங்குகின்றது. 'தொழிலில் இல்லை, நடத்தையி லிருக்கிறது ஒருவருடைய மேன்மை' என்ற உண்மையை "பிச்சை எடுத்தாலும் குப்பண்ணா பிரபு" என்ற வாக்கியம் வெகு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. குற்றம் செய்தவர்களை சமுதாயமாய்—குற்றத்தின் அளவு, குற்றம் செய்தவரின் மனப் பான்மை, சூழ்நிலை இவற்றை சிறிதும் பொருட்படுத்தாமல்— அலட்சியம் செய்வது, தண்டிப்பது, தகாது—குற்றம் பார்க்கக் கூடாது. சுற்றத்தை வளர்க்கவேண்டும். இதுபோன்ற அழியாத, அழிக்கமுடியாத பல உண்மைகள் இந் நூலில் சிறந்து ஜ்வலிப் பதை நாம் காண்கின்றோம்.

'நானே சமூகம்' என்றில்லாமல் 'சமூகமே நான்' என்று கொள்ளும் பெரியார்களே வாழ்க்கையில் பெரியவர் சிறியவர் என்ற பேதத்தை வளர்க்காது "இராமனின் சேனையில் அணி லும் ஒரு வீரன்" போல், எல்லோரும் சமூகத்தின் அவசிய உறுப்பினரெனக் கொள்வார்கள்.

வாழ்க்கை விநோதங்களில் லயித்து, மெருகுடன் அவற்றை நமக்குச் சித்தரித்து தந்து உதவியிருக்கும் வ. ரா. அவர்களுக்கு நன்றி செலுத்துவதோடு, தமிழர் அனைவரும் இதை ஊன்றிப் படித்துப் பயன் பெற வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

தியாகராயநகர்.
16—2—47

இலக்கிய ரஸிகன்.

வணக்கம்

'வாழ்க்கை விநோதங்கள்' என்ற இந்தச் சித்திரங்கள் முதன்முதலாக, சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் வெளியாயின. அவைகளே, இப்பொழுது, நூலாக உருவம் பெற்றிருக்கின்றன. சுதேசமித்திரன் ஆசிரியர்: ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் அவர்களுக்கு என்பேரில் இருக்கும் அன்புக்கு, இந்த நூல் வெளியானதே ஒரு அத்தாக்ஷியாகும். அவருக்கு, நான் வெகுவாக கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை இந்த சந்தர்ப்பத்திலும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முகவுரை தந்து உதவிய 'ரசிகருக்கு' என் நன்றி.

பல பிரதிகூலங்களுக்கு இடையே, இந்த நூலை அச்சுக்கு கொண்டுவந்த என் நண்பர் ராதாகிருஷ்ணன் (திருத்தருப்பூண்டி) அவர்களை நான் மிகுதியும் பாராட்டுகிறேன்.

நுங்கம்பாக்கம்
17-2-47

வ. ரா.

பொருளடக்கம்

வாழ்க்கை விநோதங்கள்

1. ஆத்தூர் முத்து

ஆத்தூர் முத்து என்பது சுருக்கமான, செல்லப் பெயர். அவருடைய தீர்க்கமான விலாசத்தைக் கேட்டால், ஒருக்கால், நீங்கள் மூர்ச்சைபோட்டுவிழுந்தாலும் விழுந்து விடலாம். மூர்ச்சையாவது போடவாவது என்று நீங்கள் ஆக்ஷேபித்தால், முழு விலாசத்தையும் சொல்லத் தயார், காகிதப் பஞ்சகாலமா யிருந்த போதிலும்.

பேராத்தூர், நூறு கன்னிகாதான, அஷ்டாவதான முத்துஸ்வாமி தீக்ஷிதர் என்பது அவரது முழுப் பெயர். பேராத்தூர், தீக்ஷிதர் பிறந்த ஊர். நூறு கன்னிகாதான என்பது அவரது குடும்பத்தின் பட்டப்பெயர். அஷ்டாவதான என்பது அவருக்கு சொந்தத்தில் கிடைத்த புகழ் பட்டம்.

கோடி கன்னிகாதானம் என்பதுதான் நாம் பரம் பரையாக கேட்டு வரும் பட்டம். நூறு கன்னிகாதானம் கேள்விப்பட்டதேயில்லை. நூறு அசுவமேத யாகம்போல இதுவும் ஒன்ருக இருக்கலாம். ரிஷி மூலம், நதி மூலம், இவைகளை விசாரிக்கலாகாது என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்; எனவே, நூறு கன்னிகாதானத்தின் மூலத்தை, நாம் ஏன் விசாரிக்க வேண்டும்?

தீக்ஷிதர் என்ருலே நல்ல வைதிகக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லவும் வேண்டுமோ? பேராத்தூர் நூறு....தீக்ஷிதர், எப்படி ஆத்தூர் முத்து ஆனர் என்று கேட்பது பொருத்தமுள்ளதாகும். கழுதை தேய்ந்து, கட்டெறும்பு ஆன கதைபோலிருக்கிறது என்று விஷயம் தெரிந்ததுபோல கூக்குரலிடுவதும் தவருகும்.

தீக்ஷிதரின் பெரியார்கள் காணி நிலத்தைக்கொண்டு, தலைமுறை தலைமுறையாகக் கரையேறினவர்கள். காணி நிலத்தை 'அழியாமல் கொள்ளாமல்' தலைமுறை தலைமுறையாக அந்தக் குடும்பத்தார் எவ்வாறு காப்பாற்றி வந்தார்கள் என்பதற்குக் காரணம் தெரியாது. பழைய காலத்தில், இந்தமாதிரி அற்புதத்தை எத்தனையோ குடும்பங்கள் செய்திருக்கின்றன என்பது மட்டும் குறிப்பிடத் தக்கது.

ஆத்தூர் முத்து பிறந்ததும் குடும்பத்தின் காணி நிலம் மாயமாய்ப் பறந்துபோய்விட்டது. எனவே, அவரது தகப்பனர் முத்துவை 'துடைகாலி' 'துக்கிரி' 'பக்கிரி' என்று பலவாருக அழைக்க ஆரம்பித்துவிட்டார். தாயாருக்கோ முத்து ஏழாவது குழந்தை. எனவே, பெற்ருேர்களின் பேராதரவு இல்லாமல் வளர்ந்த குழந்தை முத்து.

சம்பிரதாயப்படி, முத்துவை ஐந்து வயதில் வாசிக்க வைத்தார்கள். வயது வளர்ந்துகொண்டே போயிற்று. ஆனல், வாசிப்பு இருந்த இடத்திலேயே இருந்தது. குழந்தையென்று சிறிது காலம்தான் பெற்ருேர்கள் பார்த்தார்கள். பிறகு இடித்த புளிமாதிரி, ஏன் உட்கார்ந்திருக்கிருய் என்று தாய் கேட்பாள். மரக்குதிர் வயிறுக்கு யார் சோறுபோட முடியும் என்பார் தகப்பனர்.

எதற்கும் அசையாமல் முத்து மைல் கல்லைப்போல இருந்தார். காலத்தில் முத்துவுக்கு பூநூல் போட்டார்கள். முத்து இதைப் பொறுத்துக் கொண்டிருந்தார் என்றுதான் சொல்லவேண்டும்.

பேராத்தூரில், பைத்தியம் பிடித்தவரைப்போல; முத்து வாழ்ந்து வந்தார். பிழைப்புக்கோ வழியில்லை, பெற்ருேர்களின் கோபத்துக்கோ எல்லை இல்லை; உற்ருேர்களின் அவமதிப்புக்கும் குறைவொன்றுமில்லை. நாள் போவது, யுகம் போவது மாதிரி இருந்தது.

பள்ளியை மிதிக்காத முத்துவுக்கு, இரண்டொரு பாக்கியங்கள்மட்டும் இருந்தன. கவர்ச்சி பொருந்திய குரலும், மலர்ச்சி பொருந்திய முகமும், கலகலப்பான பேச்சும், அந்த பாக்கியங்கள். இவைகள்கூட, அக்கிர காரத்தில் செல்லவில்லை 'இந்த பிள்ளையை பெற்றதற்குப் பதிலாக, ஒரு கூடை பெரண்டையை வைத்துக் கட்டிக் கலாம் காமு' என்று கிழவிகள் சுரம்போட்டுச் சொல்லு வார்கள்.

தன்னை மதிக்காத அக்கிரகாரத்தில் முத்து இருப்ப தில்லை. அவருக்கு குடியானத் தெருவில்தான் வாசம். சாப்பாட்டு நேரம் போக, பாக்கி காலமெல்லாம், முத் துவை குடியானத் தெருவில், பூக்கார கந்தசாமி வீட்டிலே காணலாம்.

பூக்காரர், நன்றாகப் பாடுவார். அநேகமாக, நாடகப் பாட்டுகள்தான். 'நாடகப் பாட்டுப் பாடுகிறவன் வீட் டிலே, முத்து குடியாகக் கிடக்கிறான்' என்று அவர் பேரில் அடுத்த குற்றச்சாட்டு. ஜாதி கெட்டவன் என்று வாழ்த்து. முத்து, பாவம்! என்ன செய்வார்?

அக்கிரகாரத்திலே கௌரவம் இல்லை; குடியானத் தெருவுக்குப் போனால் கோபம். ஆனால் முத்து இதை லக்ஷியம் செய்யவில்லை. பூக்கார கந்தசாமிக்குத் தெரிந்த பாட்டுகளை எப்படியாவது கற்றுக்கொள்ளவேண்டும் என்று முத்து தீர்மானங்கொண்டார். 'முத்தய்யா! நீங்க அற்புதமா பாடுறீங்க. நீங்க ஏன் சினிமாவிலே சேரப்படாது' என்றார் பூக்காரர்.

'யாரு எனக்கு பாக்கு வச்சு அழைக்கிறா' என்று முத்து சிரித்துக்கொண்டு சொல்லுவார். இருந்தாலும், பூக்காரர் சொன்ன யோசனை முத்துவின் மனதில் ரொம்ப ஆழமாகப் பதிந்துவிட்டது. அந்தத் தீர்மானத்துக்குப் பிறகு, முத்து அர்த்தக்ஷவரம் செய்துகொள்ளுவதை

நிறுத்திவிட்டார். தலை முழுவதையும் வளர்த்தார். யாராவது கேட்டால், வெங்கடாசலபதிக்கு பிரார்த்தனை என்பார். 'உன்னுடைய முடிதானு, அந்த திருவேங்கட முடையானுக்கு வேண்டும்' என்று கிழவர் ஒருவர், வாய்த்துடுக்காக கேட்பார்.

'முடிவசூல் செய்கிற பெருமாளிடம் கேட்டு, உங்கள் சந்தேகத்தைத் தெளிந்துகொள்ளுங்கள்' என்று முத்து வும் வாய்த்துடுக்காகவே பதில் சொல்லுவார்.

முடிவைத்துக் கொண்ட முத்து, தனது முகவிலா சத்தை, கண்ணாடியில் பார்ப்பதில் அலுத்துப் போவதே இல்லை. 'எம்பெருமான் அழகுக்கு, என் அழகு நேரா குமோ' என்று அழகு பார்த்த ஆண்டாளைப் போல, முத்து, கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்து, 'சினி மாவில், இந்த முகம் எடுபடுமோ' என்று மனம் ஏங்கு வதைப்போல, தனக்குள்ளாகவே, சொல்லிக் கொள் வார்.

முழுமுடிக்கும் சினிமாவுக்கும் சூக்ஷமமான சம் பந்தம் எனக்குத் தெரியாது. முத்துவுக்கும் ஊரார்க் கும்தான் தெரியும். முத்து முழுமுடி வளர்க்கத் துவக் கியதும், அவர் முகக்ஷவரம் செய்துகொண்டார். நாலு காசு கையாலே சம்பாதிக்க யோக்கியதை இல்லாத இந்த அடிமுட்டாளுக்கு, முகக்ஷவரம் வேறு வேண்டியிருக் கிறது என்று அக்கிரகாரத்தில் பேசிக்கொண்டார்கள்.

'ஒட்டகை முதுகின் பேரில் கடைசி துரும்பு' என்று சொல்லுவதுண்டு. தாங்கும் சுமைக்கு எல்லையை இதன் மூலமாகக் குறிப்பிடுகிறார்களாம்! கையிலே, கால் காசு மில்லாத பக்கிப் பையன் முகக்ஷவரம் செய்துகொண்டு, பரம்பரை தீக்ஷிதர் குடும்பத்தின் பெயரை, நடுச் சந்திக்கு கொண்டு வரவாவது என்று பெற்றோர்கள் மனம் பொங் கிப் போனார்கள்.

'மனப் பொங்கலுக்கு அடையாளமாக, ருசுவாக பெற்ருேர்கள் செய்தது என்ன? 'வீட்டிலே அந்தப் பயலுக்கு, இனிமேல் பிண்டம் போடாதே' என்று தகப்பனுர் தாயாருக்கு தாக்கீது செய்துவிட்டார். எனவே, முத்துவுக்கு சோற்றுக்கு 'லாட்டரி'. வீட்டை விட்டு வெளியேறினுர். அரை வேஷ்டி, ஜுப்பா, துண்டு, முழு முடி சகிதமாக, முத்து, உலகப் பிரயாணத்துக்கு ஆயத்தமானுர்.

பூக்கார கந்தசாமிக்கு மட்டும், முத்துவினிடம் அளவில்லாத நம்பிக்கை. என்றைக்கிருந்தாலும் முத்து, சினிமா நக்ஷத்திரமாவார் என்பதில், கந்தசாமிக்கு சந்தேகமே எழுந்ததில்லை. கந்தசாமிக்கு அதிருஷ்டத்தில் நம்பிக்கை இல்லை. முத்துவின் முகவிலாசத்திலும் குரலிலும் அவருக்குப் பூரணமான நம்பிக்கை.

சினிமாப் படத்தில் எழுதிக் காண்பிப்பதைப் போல, "இவ்வாறு இரண்டு வருஷங்கள் சென்றன. முத்து பழைய ஜுப்பா தலைமுடி முத்துவாகவேதான் விளங்கினுர். எப்படியோ வயிறு வளர்த்து வந்தார். அதன் ரகசியத்தை அவரைக் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

சித்திரை மாதம், வளர்பிறை: ஒருநாள் இரவு. நிலவு பட்டப்பகலைப் போல காய்கிறது. ஆற்று மணலில், முத்து அநாயாசமாகப் பாடிக்கொண்டிருந்தார். இவரைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் இருவர்.

முத்து இருக்குமிடம் தேடி, மறுநாள் ஒரு ஆள் வந்தான். ஆளோடுவந்தது 'அதிருஷ்டமும்.' அழைத்தது சினிமா முதலாளி. அன்றுமுதல், நாளிது வரையில் முத்து மங்காப் புகழோடு விளங்குகிருர்.

இப்பொழுது அவர் பெரிய 'நக்ஷத்திரம்'; இன்னும் 'கிரகம்' ஆகவில்லை. இருந்தாலும் சொந்த ஊரில்,

பெரிய கிரகம் கட்டி, பிரவேசமும் செய்துவிட்டார். சுற்றுக்கு ஐம்பது மைல் தூரத்திலுள்ள பார்ப்பனர்கள் எல்லாரும், முத்து தங்கள் உறவு என்று சொல்லி பெருமை அடித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் முத்து பிராமணரல்லாத பெண்ணை மணந்தது அவர்களுக்குத் தெரியாதா?

தெரியும். அதனால் என்ன? லக்ஷ்மி கடாக்ஷம் இருக்கும் முத்துவிடம் முகத்தைக் காண்பிக்கலாமோ என்கிறார்கள். சரியான சமாதானம்தானா, இல்லையா என்று தீர்ப்பு சொல்லவேண்டியது உங்கள் கடமை.

2. சாவடி சுப்பன்

'எங்கிருந்தோ வந்தான்; என்னன்னமோ ஜாலம் செய்கிறுன். அவன் இல்லாமல் போனுல், ஊரார்க்கு பொழுது போகாது போலிருக்கிறது' என்று கல்லுப் பாறை கிராமத்தில் சொல்லிக் கொள்ளுகிறுர்களே, அந்த ஆசாமி யார் தெரியுமா? அவர்தான் சாவடி சுப்பன்.

சுப்பன் கல்லுப்பாறையில் பிறந்தவர் அல்ல. அவர் அந்த ஊரை வந்து அடைந்தவர். எப்படி வந்து அடைந்தார். எப்பொழுது வந்தடைந்தார் என்பதெல்லாம், அந்த ஊரில் ஒருவருக்கும் சரியாக ஞாபகம் இருக்கவில்லை. வந்த வகை சுப்பனுக்குத்தான் தெரியுமோ என்ருல், அவரும், தனக்குத் தெரியாது என்று கையை விரிக்கிறுர்.

சுப்பனுக்கு, ஜாதி, மதம், தொழில் முதலியவைகள் இன்னதுதான் என்று நிச்சயமாக யாராலும் சொல்லமுடியாது. சுப்பன் எந்தக் கோயிலிலும் இருப்பார்; எந்தக் கூட்டத்திலும் இருப்பார். எந்த வேலையையும் செய்வார்; எவர் கூடவும் இருப்பார். எப்படி சாப்பிடுகிறுர் என்பது மட்டும் தெரியாது. கை சமையல் என்று சொல்லிச் சிரிப்பார். சொந்த சமையல் என்பதற்கு கை சமையல் என்கிறுராம்!

உலகத்தில் இல்லாத புதுமாதிரிப் பேர்வழியாக இருக்கிறுரே என்று பலர் ஆச்சரியப்பட்டிருக்கிறுர்கள். எல்லோரும் செய்கிற காரியத்தை, எல்லோரும் செய்கிற வகையில், சுப்பன் செய்வதில்லை. மடையா என்று ஒருவர் கோபித்தால், சாதாரணமாக உலகத்தில் என்ன செய்கிறுர்கள்?

மடையன் என்ற பட்டம் வாங்கிக் கொள்ளுபவன், ஒன்று திரும்ப கோபிக்கிறுன் அல்லது அந்த அவமானத்

தைப் பெற்றுக்கொண்டு, அதை மடியில் போட்டுக்கொள்கிறான். சுப்பன் இரண்டும் செய்வதில்லை. 'புத்திசாலிகளின் வாயிலே, மடையன் என்ற வார்த்தை வரலாமோ? மடையன் அல்லவா மடையன் என்று சொல்லத் துணிவான்' என்று சொல்லிவிட்டு, சுப்பன் சிரிப்பார்.

'என்ன சுப்பா! இவ்வளவு கந்தலான துணியை கட்டிக்கொள்ளலாமா' என்று கேட்டால், சுப்பன், வெட்கத்தால் தலை குனிவதில்லை.

'கந்தல் துணி காலமாவதற்கு வேளை வரவேண்டாமா? நல்ல வேளையாக, உங்களைப் போல பிரபுவின் தரிசனம் கந்தல் துணிக்குக் கிடைத்தால்தானே, அதன் கலி தீரும்? அரைடஜன் துணிகளுக்கு அவ்விடத்தில் உத்தரவாக வேண்டும்' என்று சுப்பன் அடுக்கிக் கொண்டே போவார்.

கந்தல் துணியைப்பற்றி யாரேனும் பேச்சு எடுத்தால், அந்த ஆள், வெட்கத்தால் ஓடவேண்டியதுதான் பாக்கி. அவ்வளவு சிக்கலான நிலைமையில், சுப்பன் அவரைக் கொண்டுவந்து வைத்து விடுவார். இப்படி நையாண்டி செய்யலாமா என்று சுப்பனைக் கேட்டால், அவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

'வழியிலே போகிற மனிதன், வழியோடு போனால் என்ன? கந்தல் அவருடைய கண்ணைக் குத்தினால், அவர் தன் கண்களை இறுக மூடிக்கொள்ளுகிறது தானே? அதற்காக, என் ஏழ்மையை காற்றில் தூற்றி, என்னை அவமானப் படுத்தவேண்டுமென்பதுண்டா? அவமானப் படுத்த எண்ணமில்லை என்றே வைத்துக் கொள்வோம். அனாவசியமான கேள்வியை, எதற்காகக் கேட்கவேண்டும்? அறிவும் அனுதாபமும்தான் புத்திசாலிகளின் லக்ஷணங்கள்' என்று சுப்பன் சிறிய சொற்பொழிவை நிகழ்த்தி விடுவார்.

'உங்களுக்குக் கலியாணம் ஆகிவிட்டதா? இல்லை யானால், ஏன் இல்லை' 'ஆயிற்று என்றால் மனைவி ஏன் கூட இல்லை' என்று யாராவது சுப்பனைக் கேட்டுவிட்டால், அன்றைக்கு திருவிழாதான். முதலில் அவர் விகடம் செய்வார்.

'என்னுடைய ஸ்தூல தேகத்தைப் பார்த்தால், என்னை ஆண் என்று எண்ணுகிறார்கள். சூக்ஷ்மம் என்னவெனில் என் உள்ளத்தில் பெண்தன்மை நிறைந்து கிடக்கின்றது. அர்த்த நாரீசுரனான எனக்கு கலியாணம் எதற்கு, காதல் எதற்கு, என்று அடுக்கிக்கொண்டே போவார்.

இன்னொரு சமயத்தில் சுப்பன் 'வண்டியை வேறு லயனில் விட்டுவிடுவார்.' 'எனக்கு சுயம்வரத்தில்தான் நம்பிக்கை' என்பார். 'சூத்திரமாகப் பேசாமல், விளக்கிச் சொல்லவேணும்' என்று கேட்பவர்களுக்கு அவர் இப்படி பதில் சொல்லுவார்:—

'சுயம்வரம் என்பது பெண்களின் பிரத்தியேக உரிமை. கலியாணத்துக்கு பாத்தியம் அவர்களுக்குத் தான் உண்டு. ஆண்களுக்குக் கிடையாது, கலியாணம் என்றால் கர்ப்பம் என்றுதான் அர்த்தம். கர்ப்பத்தில் உயிருக்கு ஆபத்து நேருவது இயற்கை. ஆகவே, ஏ! பெண்ணே! நீ சாகத் துணிகிறாயா என்று எந்த ஆண் பிள்ளையாவது பொறுப்பில்லாமல் கேட்க துணியலாமா? இன்பம் அல்லது இயற்கை என்ற மயக்கத்திலே, நான் உயிரைவிடத் தயார் என்று பெண்தான் முதலில் சொல்ல வேண்டும். இதற்குத்தான் 'சுயம் வரம்' என்று பெயர்'.

இவ்வாறு சுப்பன் சொல்லுவதைக் கேட்கும் பொழுது, பெரும்பான்மையோருக்கு கோபம்தான் வரும். 'சுயம் வரம் இல்லாமல் கலியாணம் செய்து கொண்ட நாங்கள் எல்லோரும் பொருப்பில்லாதவர்களா'

என்பதுபோல, சுப்பனைப் பார்த்து விழிக்கத்தான் சொல்லும். 'அநியாய' சுப்பன், இந்த பார்வையைக் கண்டு, பயந்து போகிறவர் அல்ல.

'உலகம் இப்பொழுது தலைகீழ்ப் பாடமாக எதையும் செய்கிறது. அதற்காக, சுப்பனும் தன் சிந்தனை சக்தியையும் நேர்மையையும் இழக்க வேண்டுமென்பதுண்டா? செத்த பிணத்தை, சாகாப் பிணம் பார்த்து நகைத்தால், அது பெரிய காரியமாகுமா? சரியானபடி காரியம் செய்பவர்கள், உலகத்தில் ஓரிரண்டு பேர்கள்கூட இருக்கப் படாதா' என்று தனக்குள்ளாகவே, சந்தோஷப் பூரிப்பு அடைந்துகொண்டு, சுப்பன் சொல்லுவதை, நீங்கள் கேட்கத்தான் வேண்டும்.

சுப்பன் சொல்லுவதை, நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதல்ல. எந்தக் கேள்விக்கும் இரண்டு முகங்கள் உண்டு என்பது சம்பிரதாயம். இரண்டு கக்ஷிகளோடு, மூன்றாவது ஒன்றும் இருக்கிறது என்று சுப்பன் சொல்லி, அதை அவர் ருசுப்படுத்தும்வகை விநோதமாக இருக்கிறதல்லவா?

'உங்களிடம் பணம் இல்லையே! உங்களால் வாழ்க்கையை எவ்வாறு நடத்த முடிகிறது? என்று சுப்பனை கேட்கவேபடாது. 'கஜானாவில் பணம் இருக்கிறபொழுது, கையில் பணம் எதற்காக இருக்கவேண்டும்? அதைப் போல, உங்களிடம் பணம் இருக்கிறதே, அதெல்லாம் என்னுடைய பணம்தான். நான் ஒரு 'பாஷனை'க் கிளப்பி விட்டால், அதற்காக நீங்கள் செலவழிக்கிறீர்கள். பணச் செலவு நான் செய்தால் என்ன? நீங்கள் செய்தால் என்ன? என் எண்ணம் நிறைவேறுகிறதே, அது போதாதா' என்று சுப்பன் முடித்துவிடுவார்.

'அப்படியானால் நீங்கள் பொது உடமைக்காரர் போலிருக்கிறது' என்று நாம் கிண்டல் செய்யலாமல்லவா?

'பொது உடமைக்கொள்கையை, ரஷ்யாவிலிருந்து இந்த தேசத்துக்கு கொண்டுவர வேண்டுமென்பதல்ல. பணம் உள்ளவன், இல்லாதவன் என்று பிரிப்பதே தவறு. ஏழை தேசமா, பணக்கார தேசமா என்று கேட்கலாம். ஏழை ஆசாமியா, பணக்கார ஆசாமியா என்று தனி நபர்களைப்பற்றி கேட்பதே ரொம்ப பிசகாகும். வலியான், மெலிந்தவன் என்று பாகுபாடு செய்து, பிரித்துப் பேசுவதே நாகரிகக் குறைவாகும். தேசத்தில் சகோதரர்கள் என்று பேசுவது பாவனையா, பொய்யா என்று ஆத்திரத்தோடு சுப்பன் பேசுவார்.

சுப்பன் எவ்வளவு வரையில் படித்திருக்கிறுர் என்பது யாருக்கும் தெரியாது. அவரிடம் பேசுகிறவர், எந்த பாஷையிலே பேசுகிறுரோ, அதே பாஷையில், சுப்பன் பதில் சொல்லுவார். எனவே, அவருக்கு எத்தனை பாஷைகள் 'வரும்' என்று சொல்ல முடியாது. ஆனுல் இங்கிலீஷ் பேசும்பொழுது மட்டும், அவருடைய முகம் சின்னதாகப் போய்விடும்.

காரணம் கேட்டால், இதற்குமட்டும் மௌனம் சாதிப்பார்; அல்லது பெருமூச்சு விடுவார். இதன் மர்மம் என்ன? ஒரு நண்பர் சொன்னதைச் சொல்லுகிறேன். அது உண்மையா, பொய்யா என்பது எனக்கு தெரியாது. சுப்பனுக்கு இப்பொழுது வயது முப்பது இருக்கும்.

அவருடைய இளவயதிலேயே அவருக்கு பெரிய உத்தியோகம் கிடைத்ததாம். ஆனுல் அவருக்கு மேலதிகாரியாக இருந்த வெள்ளைக்காரர், இவரிடம் தகாத முறையில் நடந்து கொண்டதால், சுப்பன் வேலையை ராஜிநாமா செய்துவிட்டு, துறவறம் போன்ற இல் வாழ்க்கையை நடத்தத் துணிந்தாராம்! அதாவது, எந்த வீட்டிலும் படுப்பதில்லை. ஊர்ச் சாவடியில்தான் தூங்குவது. எதையும் விரும்புவதில்லை. ஆனுல், ஊரார்க்கு பொது

வாக எது தேவையானாலும், அந்த வேலையில் சுப்பன் ஈடுபட்டு உழைப்பதை எல்லோரும் தினசரி காணலாம்.

வாய்க்கால் வெட்டு, ஊர்ப்பள்ளி, பஞ்சாயத்து, குடி நீர் வசதி, தெருக்கூத்து, உலக சமாசாரங்கள், தேர் திரு விழா, கக்ஷிச் சண்டைகள்—இவைகளில் சுப்பன் முழு மூச்சாக ஈடுபடுவார். சோம்பலே இல்லாதவர். கசப்பும் சோர்வும் கனவில்கூட அவருக்கு தரிசனம் கொடுத்தது கிடையாது.

சாவடி சுப்பன் இல்லாவிட்டால், ஊர் எப்படி இருக்கும் என்று சொல்லும்படியாக, ஒருவர் வாழ்ந்தாராகில், அதைக்காட்டிலும் உயர்ந்த புகழுரையும் வேண்டுமா? சுப்பன், இத்தனைக்கும் 'கட்டைக்குட்டாக'த்தான் இருப்பார். பொலிவு நிறைந்த முகம்; பொல்லாங்கு நினைக்காத மனம்; தாக்ஷிண்யமில்லாத நெஞ்சம்; கபடமும் கவலையுமில்லாத பார்வை, எவருக்கும் அஞ்சாத துணிவு; எதையும் சாதித்து விடலாம் என்ற நம்பிக்கை. எங்கும், எப்பொழுதும் மந்த காசத்துடன் இருக்கும் சுப்பனிடம் மேலே சொன்ன தன்மைகள் குடிகொண்டிருந்தால், அவைகளுக்கு மேலே வேறு என்ன வேண்டும்?

———

3. சந்தைப்பேட்டை செல்லாயி

சந்தைப் பேட்டையில் செல்லாயிதான் ராணி, 'ராணி என்று சொல்லலாமோ; அது இந்தியப் பாது காப்பு சட்டத்துக்கு விரோதமோ, என்னமோ' என்று யாரும் பயப்படவேண்டாம். ராஜ்ய பரிபாலனம் செய் தால்தான் ராஜாவா? ராஜாவைக் கலியாணம் செய்து கொண்டால்தான், ராணியா?

மாக்ஸ்வெல் அவர்களுக்கு கோபம் வந்தாலும் சரி, சந்தைப்பேட்டைக்கு ராணி, செல்லாயிதான். ஆனால் அவளுடைய கையில் செங்கோலும் தலையில் மகுடமும் இருக்காது. அவளுக்கு மந்திரிமார்களோ அல்லது ஆலோசனையாளர்களோ கிடையாது. பாகிஸ்தான் போன்ற பிரச்னையும் சந்தைப் பேட்டையில் இல்லை.

நாளுக்கு ஒரு வேளைதான், செல்லாயிக்கு சாப்பாடு. என்ன ராணித்தனம் வேண்டியிருக்கிறது என்று கோபித் துக் கொண்டு, வேறு புறம் திரும்பிக்கொள்ள வேண் டாம். ராணித்தனம் இவைகளிலா இருக்கிறது என்று சந்தைப் பேட்டையார், ஏளனப் புன்னகையோடு கேட் பார்கள்.

செல்லாயிக்கு, இப்பொழுது ஐம்பது வயது இருக்க லாம். ஊர்க்கோடியில், அவள் ஒரு குடிசையில் வசித்து வருகிறாள். குடிசையைச் சுற்றி, ஒரு சிறு தோட்டம். அந்த தோட்டத்தில், மலர்ச் செடிகள் மட்டுமல்ல, மருந் துச் செடிகளும், மூலிகைகளும் இருக்கின்றன.

குடிசை என்றால் சிறிதல்ல. சற்று விஸ்தாரமானது தான். குடிசையின் மத்தியில், ஒரு மேடை. அதிலே தான், செல்லாயியை அநேகமாக காணலாம். எப்படி ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பது என்பது நமக்குக் கஷ்டமா யிருக்கலாம். செல்லாயிக்கு, அது கஷ்டமாகவே இருந்த தில்லை.

குடிசையில், செல்லாயி தனித்து இருந்ததே இல்லை. ஜனங்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருப்பார்கள். எதற்காக? ஜோசியம் கேட்கவா? இல்லை. மாந்திரீகம் செய்துகொள்ளுவதற்கா? இல்லை. மருந்துக்கா? ஆமாம். யோசனை கேட்கவா? ஆமாம்.

செல்லாயி எந்த வைத்தியக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றிருக்காள்? எழுத்து வாசனையே அவளுக்கு இருக்குமோ என்பது சந்தேகம். இதைப்பற்றி யாரும் விசாரித்ததில்லை. விசாரிக்க தைரியம் இல்லாததே இதற்குக் காரணமாகும்.

செல்லாயி குழந்தை வைத்தியத்தில் கை தேர்ந்தவள் என்று பிரசித்தி. குழந்தையைப் பார்த்ததும், மாந்தம், ஜுரம், ஜலதோஷம், குடல் ஏற்றம், நரம்புப்பிசகு-என்று எப்படியோ, பொறி தட்டினது போல சொல்லிவிடுவாள்.

செல்லாயியின் குழந்தை வைத்தியமே விநோதமானது. அவளுடைய திட்டப்படிக்கு சிகிச்சை எல்லாம் தாய்க்குத்தான், குழந்தைக்கு அல்ல. மாதா பிதாக்களின் பாபம் மக்கள் தலையிலே என்பாள் செல்லாயி. மூன்று நாளைக்கு உனக்கு இன்னது பத்தியம் என்று ஒரு தாய்க்கு சொல்லுவாள். குழந்தைக்கு என்று கேட்டால் 'அழுகிறபொழுது பாலைக்கொடு. குழந்தை அழாமல் பார்த்துக்கொள் மூன்று பொழுதிலே குணமாகி விடும்' என்பாள்.

மண்வெட்டி பட்டகாயம், அரிவாள் வெட்டின காயம், இடறிவிழுந்த காயம், இவைகளோடு வருவார்கள். பச்சிலை ஒன்றைக் கசக்கி, அதைக் காயத்தில் வைத்துக் கட்டுவாள். 'கட்டு ஈரம் காயப்படாது.' 'வெரவெர' என்று பிடித்து இழுக்கிறுப் போல, காயத்தை விட்டு விடாதே. 'கட்டு காய்கிற சமயம் பார்த்து தண்ணீரை ஊற்றுங்கள்' என்பாள் செல்லாயி.

'தண்ணீரை ஊற்றவாவது? சீழ் பிடித்துக்கொள்ளாதா' என்று பயந்து கொண்டு கேட்பார்கள். 'தண்ணீர் ஊற்ருமல்போனுல், சீழ் பிடிக்கும்' என்று செல்லாயி பதட்டமில்லாமல் சொல்வாள். மேலும் அவள் சொல்லுவாள் :—

'தேவலோகத்திலிருந்து வந்த மருந்தில்லை. மக்களுக்கு இரக்கப்பட்டு, பூமித்தாய், தன் மடியிலே கட்டிக்கொண்டிருக்கிற பச்சிலை இது. இதற்கு வெட்டுகாயப் பச்சிலை என்று பெயர். இந்தப் பச்சிலை எப்படிப் பட்டது என்றே வெகுபேர்களுக்குத் தெரியாது. காலத்தின் கொடுமை!'

சிலசமயம் செல்லாயி, சிலரைக் கோபிப்பது உண்டு. 'நான் போய்விட்டால், என்ன செய்வீர்கள்? மருந்துகளின் பெயர்களை தெரிந்துகொள்வதற்குக்கூட சோம்பல் படுகிறீர்களே? உதட்டு வாழைப்பழத்தை பிறத்தியார் உள்ளே தள்ளவேண்டிய சோம்பல் நிலைமைக்கு நீங்கள் வந்து விட்டீர்களே! அழகாக, குடித்தனம் செய்யணும் என்ற ஆத்திரம் உங்களுக்கு இருந்தால் தானே' என்பாள்.

'மாட்டுக்கு, பின்னத்திக்காலில் பூச்சி வைத்திருக்கிறது' என்று சிலர் வருவார்கள். 'இந்த பச்சிலையை துணியில் வைத்து முடிந்து, மாட்டின் கழுத்தில் கட்டுங்கள்' என்பாள் செல்லாயி. பூச்சி வைத்த இடத்தில், பச்சிலையை வைத்துக் கட்டவேண்டும் என்று சொல்லவில்லையே! மறதியாக, கழுத்தில் கட்டு என்று சொல்லிவிட்டாளோ' என்று நினைத்து, ஒரு சிலர், கழுத்திலா காலிலா, என்று கேட்பார்கள்.

செல்லாயிக்கு, சிரிப்பு தாங்கமுடியாது. 'கழுத்து தானுங்க. கால் என்ருல், கால் என்று சொல்லியிருக்க மாட்டேனு? இது வைத்தியமுங்க. வைத்தியத்திலே மறதியும் தவறும் இருக்கப்படாதுங்க. போய் மாட்டுக்

கழுத்திலே, (நான் சொல்வதை நல்லா கேட்டுக்கங்க) மாட்டுக்கழுத்திலே, இதைக் கட்டுங்க' என்று ஒவ்வொரு வார்த்தையாக அவசரமில்லாமல் சொல்லுவாள்.

'மாடு எப்பொழுது பார்த்தாலும் தும்மிக் கொண்டேயிருக்குதுங்க' என்பார் ஒருவர், 'ஒங்க ஊரிலே காடை இறகு ஆப்படுமா' என்று செல்லாயி கேட்பாள். கிடைக்காது என்றால், கொடுக்கரப்பள்ளியில் குருவி விக்றவன் இருந்தான். அவனைக் கேட்டா கொடுப்பான்; சும்மா கேக்காதேயுங்க, அவன் வயிறு வளர்க்கவேண்டாமா? ஏதாச்சும் கொடுங்க' என்று புத்தி சொல்லி விட்டு, காடை இறகை, வைக்கோலுக்குள் வைத்து, மாட்டுக்குக் கொடுக்கும்படியாகச் சொல்லுவாள்.

சிக்கனமாகச் செய்யக்கூடிய சின்ன வைத்தியமெல்லாம், இந்தக் காலத்திலே ஒருத்தருக்கும் தெரியமாட்டேங்குதே! எல்லாத்துக்கும் காசு, காசு என்று அடிச்சுக்கிறாக. காசு கொடுத்தாப்பலே, காசு வாங்கினப்பலே வியாதி தெளிந்துவிடுமா' என்று சில சமயங்களில், தனக்குத்தானே பேசிக்கொள்ளுவதைப்போல, செல்லாயி இறைந்து சொல்லுவாள்.

செல்லாயிக்கு மறதியே கிடையாது. ஒரு முகத்தை ஒரு தடவை பார்த்தால் அது மறந்து போவதே இல்லை. பெயர் ஊர் முதலியவைகளும் அப்படியே. யாருக்கு யார் எந்த வகையில் உறவு என்பது அவளுக்கு சந்தேகமில்லாமலே தெரியும். 'பார்த்திபனூர் பிள்ளை' என்று பேச்சை எடுத்தால் 'வைரந் தோப்பு பெரிய பண்ணை நடேச பிள்ளைக்கு மச்சினன்தானே' என்று தொடர்ந்து பேச்சைப் பேசுவாள்.

மறதி இல்லாத செல்லாயியோடு பேசும்பொழுது எல்லாரும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவளிடம் யாரும் பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. யாராவது பொய் சொல்லிவிட்டால் 'பொய் பேசறது

ஒங்க பாட்டனோடு போச்சு என்று எண்ணிக்கொண்டிருந் தேனே' என்று பொய்பேசினவரின் முகத்தை வெறித் துப் பார்ப்பாள்; அவனுக்கு ரோஷம் இருந்தால், அந்த பார்வையிலேயே, அவன் செத்துப் போய்விடவேண் டியதுதான்.

'என்னமோ மின்னுதுங்களே! மழை வருமா? கலப் பையை தச்சனிடம் செப்பனிட்டுக்கொண்டு வரலாங்களா' என்று கேட்டால், செல்லாயிக்கு அடங்காத கோபம் வந்துவிடும்.

'மழை வருகிறபொழுதுதான் கலப்பையை செப்ப னிடப் போறீங்களோ? நல்லாத்தான் இருக்கு பேச்சு. சரியான வெள்ளாமை இல்லே, பூமித்தாய்க்கு கிருபை இல்லேன்று சொல்லலாமா? சோம்பலுக்குக் கூலியா; உழைப்புக்கு கூலியா; உங்களுக்குக் கலப்பை, என்னத் துங்க? கையாலேயே உழலாமுங்க' என்று கேலியாக வும் கோபத்தோடும் செல்லாயி பேசும்பொழுது, ஆவேசம் வந்ததுமாதிரி இருக்கும்.

கலியாண விஷயத்தில், பலர் செல்லாயியை யோசனை கேட்பார்கள். 'இந்த வருஷம் வேண்டாம்; பெண்ணுக்கு வளர்ச்சி போதாது' என்று செல்லாயி உடனே சொல்லி விடுவாள். 'நம்ம மகளை நீங்க எப்போ பாத்தீங்க' என்றுமட்டும் கேக்கப்படாது. கேட்டால் செல்லாயி என்ன சொல்லுவாள் தெரியுமா?

'கலியாணம் பண்றப்பலே, ஒங்க பெண் வளந்துகுச் சுன்னு, என்னையா யோசனை கேட்பீங்க! மாப்பிள்ளை பார்க்க ஒங்களைச் சேர்ந்தவங்ககிட்ட சொல்லி பறந்து கிட்டு இருக்கமாட்டீங்களா, என்று செல்லாயி, இக்ஷிணி யைப்போல பதில் சொல்லுவாள். ஆனால், முகதாக்ஷிண் யத்துக்காக எதையும் சொல்லமாட்டாள்.

குடும்பங்களில் சச்சரவு நேர்ந்தால், அதை வெறு அழகாக செல்லாயி தீர்த்துவைப்பாள். 'கோபம் வரு

கிறது சகஜம்தான். கோபத்திலே கன்னுபின்னு என்று பேசிக்கிறதும் சகஜம்தான், இந்த இரண்டையும் எல்லாரும் புத்திசாலிகளாக ஒப்புக்கிறாக. ஆனால், சச்சரவுக்கு அப்புறம் சமாதானம் என்பதை உடனே ஒப்புக்கிறது இல்லே. தகப்பன் பிள்ளை உறவு போய்டுமா? புருஷன் பெண்சாதி, ஒருத்தர் முகத்திலேதான் இன்னொருத்தர் முழிக்கணும்? வீட்டிலே கலகலப்பாய் இருக்கணும்னு, சண்டை போட்டுக்கலாமா' என்று வினயமாகப் பேசுவாள்.

சச்சரவு செய்தவர்கள் வெட்கிப் போவார்கள். சண்டை போட்டுக்கொண்ட இரண்டு கக்ஷிகளுக்கும் வருத்தமும் அவமானமும் நேராதபடிக்கு, செல்லாயி மத்தியஸ்தம் செய்வது அற்புதமாயிருக்கும். 'என்னமோ போங்க! உலகம் இன்னு அப்படித்தான் இருக்கும். பொறுத்துக்கொண்டவங்கதான் புத்திசாலிங்க என்று இங்கிதத்தோடு செல்லாயி சொல்லும்பொழுது, அதைத் தட்டிப் பேச, யாருக்கும் மனம் வருவதில்லை.

'ஒங்க மகனுக்கு, அந்த வீட்டிலே பொண் எடுக்க வேண்டாம்' என்று செல்லாயி, யாருக்கேனும் யோசனை சொன்னால், அது பிரிவி கௌன்ஸில் தீர்ப்பைப் போலத்தான். எதற்காக என்று காரணம் கேட்காமலே, அதை ஒப்புக் கொள்ளுவார்கள்.

'தோது, பொருத்தம் பார்த்துத்தான் சொல்லியிருப்பாங்க' என்று முனகிக்கொண்டே போவார்கள்.

எல்லா வகைகளிலும் சந்தைப் பேட்டையார்களின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் செல்லாயியை, ராணி என்று சொல்லக்கூடாதா? ஜனங்களின் க்ஷேம லாபம் தான் ராஜாவின் கவனத்தில் இருக்கவேண்டியதாகும். அத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, வாழ்க்கை நடத்தும் செல்லாயியை, சந்தைப் பேட்டைக்குப்போய், ஒருமுறை பார்த்துவிட்டு வாருங்களேன்! சந்தைப் பேட்டை சமீபத்தில்தான் இருக்கிறது.

4. குப்பண்ணு

குப்பண்ணுவை நீங்கள் பார்த்தால் அவர் என்ன தொழில் செய்கிறார் என்று உங்களாலே சொல்ல முடியாது. ரொம்பவும் 'டாப்பு சிறப்பாக' இருப்பார். உயர்ந்த ரகமான துணியைத்தான் அவர் உடுத்துவார். தேகத்தில் சட்டை இராது. தெருவழியாக அவர் சம்ஸ்கிருத சுலோகம் சொல்லிக்கொண்டு போகும்பொழுது, அவர் எதையோ பாராயணம் செய்துகொண்டு, வேலை இடத்துக்கு போவதாக தோன்றும். தெருப்பிச்சை எடுப்பவர் குப்பண்ணு என்று நீங்கள் சந்தேகிக்கவே முடியாது.

குப்பண்ணு இந்த கதிக்கு ஏன் வரவேண்டும்? அவர் படித்தவரல்லவா? வேண்டுமென்றே இந்த தொழிலை மேற்கொண்டாரா? அல்லது காலத்தின் கொடுமையினலா? பழைய காலத்திலே ராஜா இருந்து பிராமணனைக் காப்பாற்றிக்கொண்டிருந்தார். தொழில் இல்லாத இந்தக் காலத்து பிராமணனுக்கு பிச்சை எடுப்பதுதான் மிச்சம் என்று நொந்து கொள்ளுவதைப் போல குப்பண்ணு பேசுவார்.

காரணம் என்னவாயிருந்தாலும், குப்பண்ணுவின் வயிறு பட்டினி கிடந்ததே இல்லை. அவருடைய குடும்பத்தாரும் பட்டினி கிடக்கவில்லை. இந்த தொழில் கேவலமானது என்று சொன்னாலும் குப்பண்ணு கேட்கவும் மாட்டார். நாள் ஒன்றுக்கு அவருக்கு எப்படியோ பட்டணம் படியால் இரண்டு படி அரிசி கிடைத்துவிடும்.

குப்பண்ணு தெருப்பக்கம் போனால், குழந்தைகள் அவரைத் தொடர்ந்து கொண்டே போகும். குழந்தைகள் பின்னே வந்தால், அவர் சுலோகத்தை அடியோடு விட்டுவிடுவார். மிகப் புதிதான சினிமாப் பாட்டுகளை தாழ்ந்த குரலில் வெகு அற்புதமாகப் பாடுவார்.

கண்ணே, பாப்பா' என்று ஒரு குழந்தையை முத்தம் இடுவார். குழந்தைகளுக்கு கொண்டாட்டம் தாங்கமுடியாது. வீட்டுக்குள்ளே ஓடி படியிலே அரிசி சகிதமாக அவைகள் வெளியே வந்துவிடும்.

'அம்மாவுக்கு தெரிஞ்சு தானே, அம்மாவை கேட்டுத்தானே, கண்ணே, நீ அரிசி கொண்டு வந்தே என்று குப்பண்ணு கொஞ்சுகிறுப்போல கேட்பார். படியிலிருந்த அரிசியை வாங்கி பையில் போட்டுக்கொள்ள மாட்டார். பெரியவர்கள் வந்து சொன்னுலொழிய அரிசி பைக்குள் போகவே போகாது. யாருக்கும் தெரியாமல் ஒரு சாமானை எடுப்பது திருட்டு என்று குப்பண்ணு குழந்தைகளுக்கு உபதேசம் செய்வார்.

'குப்பண்ணு' என்னைப்பார்த்து திருடன் என்று சொல்லலாமா என்று குழந்தை யொன்று கோபமாயும் அழுது கொண்டும் கேட்டால் குப்பண்ணு அந்த இடத்தை விட்டு நகரவே மாட்டார். அழுகிற குழந்தைக்கு ஏதாவது கொடுத்து சமாதானம் சொல்லி, அழுகையை நிறுத்திவிடுவார். குழந்தையை குப்பண்ணு என்னிக்காவது திருடன் என்று சொல்லுவானு என்று அவர் கேட்கும்பொழுது குழந்தைகள் எல்லாம் குதூகலமடைந்துவிடும்.

பை நிறைந்து போனுலும் குப்பண்ணு உடனே வீட்டுக்கு போய்விடமாட்டார். குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் கைபார்த்து, ஜோசியம் சொல்லுவார். குப்பண்ணு ஜோசியம் என்ருல் பெண்கள் எப்படியோ வேதவாக்காக நம்பிவிடுவார்கள். பொய் மாதிரி அவர் எதையும் பேசவேமாட்டார். நம்பிக்கை வரக்கூடாதவைகளை அவர் சொல்லுவதுமில்லை. புராணக்கதையொன்றை, அவர் ஜோசியம் மாதிரி சொல்லுவார்.

'அனுமான் சீதாப்பிராட்டியை அசோகவனத்தில் கண்டு கணையாழி கொடுத்தது போல, உன் யோகம் இருக்-

கிறது' என்று குப்பண்ணு சொன்னால் கண யாழியைப் போல பெருஞ்செல்வமும் சிறப்பும் வரப்போகின்றன என்று தான் பெண்கள் நினைத்துக்கொள்வார்கள். சிதாப் பிராட்டி சிறையில் இருந்தாள் என்ற எண்ணமே அவர் களுக்கு வந்தது இல்லை.

கையைப் பார்த்து 'சஞ்சீவி பருவத ரேகை' ஓடு கிறது, என்பார். அதென்ன என்று பெண்கள் கேட் பார்கள். 'லக்ஷ்மணன் இந்திரஜித்தால் கொல்லப்பட்ட கதையை வெகு அழகாகச் சொல்லி, லக்ஷ்மணன் மறுபடியும் பிழைத்து எழுந்து துஷ்டன் இந்திரஜித்தை அழித்தார், அவர் பிழைத்தது சஞ்சீவி பருவதத்தின் பச்சிலையாலே' என்று கதையை முடித்துவிட்டு, 'உன் கையிலே எல்லாரும் உபகாரம் அடைந்து பெரிய மனுஷாளாக ஆகப்போகிறார்கள்' என்று சொல்லி அந்தக் கையை கண்ணில் ஒத்திக்கொள்ளுவார்.

சஞ்சீவி பச்சிலையை கையில் வைத்துக்கொண்டிருக் கும் குழந்தை பெண்ணுக்கு குதூகலம் உண்டாகாமல் இருக்குமா? லக்ஷ்மணன் செத்துப் பிழைத்தான் என் பதை மறந்துபோய், சஞ்சீவிப் பச்சிலையையே அவர்கள் மனதில் எண்ணிக்கொண்டிருப்பார்கள். தங்களால் மற்ற வர்களுக்குச் சௌகரியம் ஏற்படப்போகிறது என்பதை நினைத்துக் கொண்டால், யாருக்குத்தான் இன்பமும் சந் தோஷமும் ஏற்படமாட்டா?

குப்பண்ணுவை, குழந்தைகள் குப்பண்ணு என்று தான் கூப்பிடுவார்கள். மாமா என்ற முறைபோல, ஏதே னும் முறை வைத்துக் கூப்பிடவேமாட்டார்கள். நரை காணும் பருவத்தில் இருக்கும் குப்பண்ணுவை, குழந்தை கள் ஏன் அப்படிக் கூப்பிடவேண்டும்? தங்கள் வயதுத் தோழன் என்று குப்பண்ணுவை அவர்கள் எண்ணுவ தால்தான் என்று காரணம் சொன்னால் போதுமா?

போதாது என்பீர்கள். தோழன் என்று ஏன் எண்ணிக் கொள்ளவேண்டும் என்று அடுத்த கேள்வியை கேட்பீர்கள்.

செடி முதலா, வித்து முதலா என்ற சந்தேகம் எப்பொழுது திருகிறதோ அப்பொழுதுதான் உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியும் என்று சொன்னால் உங்களுக்கு கோபம் வராதே? சிலருடைய முகங்களைப் பார்த்தால், கிட்டநெருங்கிப் பேசலாம் என்று தோன்றும். சிலருடைய குரலைக் கேட்டால், அவர்களோடு ஒட்டிக்கொள்ள வேண்டும் என்று ஆசை உண்டாகும். இவைகளுக்கு எல்லாம் காரணம் பிரத்தியக்ஷமாகத் தெரிவதே இல்லை என்பது உங்களுக்கு தெரியும்.

குப்பண்ணாவின், பிச்சை அரிசிப்பை நிறைந்துவிட்டால், அதற்குப் பிறகு, அவர் ஒரு அடி எடுத்துவைக்க மாட்டார். 'ஆண்டவன் இன்றைக்கு மாமூல் படியை அளந்துவிட்டார்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு ஆனந்தம் அடைவார். ஆண்டவனுக்கு குப்பண்ணாவிடம் தனியான பிரியமோ என்னமோ, அவர் தினமும் வெகு சிக்கிரத்தில் குப்பண்ணாவுக்கு படியை அளந்துவிடுவார்.

பிச்சை எடுக்கும் குப்பண்ணாவிடம் சில விநோத நெறிகள் உண்டு. அழைக்கப்படாமல் அவர் எவர் வீட்டிலும் சாப்பிடப் போகமாட்டார். கலியாண காலங்களில், பூரி தக்ஷிணைகளை வாங்குவதே இல்லை. யாரையும் கை நீட்டி ஒரு காசும் கேட்பதில்லை. கோவிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்யாமல் சாப்பிடுவதே இல்லை. வழியிலே காணும் அன்பர்களிடம் ஏதாவது ஒரு உபசார வார்த்தை சொல்லாமல் மேலே செல்லுவதில்லை.

வீட்டுக்குப் போய்விட்டால், அவரை திண்ணையிலேயே எப்பொழுதும் காணலாம். படாடோபமாக சுவடிகள் எதையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர் படிப்ப

தில்லை. குப்பண்ணாவுக்கு படிப்பு அதிகம் கிடையாது என்பதே பலருடைய எண்ணம். என்றாலும், கதைகளையும் புராணங்களையும் கேட்பதற்கு அவரிடம்தான் எல்லோரும் செல்லுவார்கள்.

குப்பண்ணாவின் இனத்தில், அவர்தான் கடைசிப் பேர்வழி. நகர நாகரிகம் மேலோங்கிவரும் இந்நாளில் குப்பண்ணாவைப் போன்றவர்களுக்கு பசி ஜீவனத்துக்கு வழிகிடையாது. ஆனால், குப்பண்ணாவிடம் இதற்கு விலக்கு. அவரோடு இந்த இனம் போய்விடும் என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம். குப்பண்ணாவின் தொழில் பிச்சைத் தொழிலாக இருக்கலாம். ஆனால், அவருக்கு இருக்கும் மனசாந்தியைப் போல, எத்தனை பேர்களுக்கு இருக்கும் என்று சொல்லமுடியாது.

பிச்சை எடுத்தாலும், குப்பண்ணா பிரபு என்று சொல்லவும் வேண்டுமா?

5. மெய்க்காவல் சிங்காரம்

மெய் காவல் சிங்காரம் பக்தி சிரத்தை நிறைந்த பேர்வழி. சிங்காரம், கவர்னருக்கு மெய் காவலா, அல்லது வைசிராய்க்கா என்று கேட்டுவிடாதீர்கள். நகரத்திலேயே பிறந்து வளர்ந்து வாழும் மனிதர்களுக்கு பயிர்ச் செலவு இன்னது என்று தெரியாமல், நெல் காய்ச்சி மரத்தை, பார்த்தீர்களா என்று ஆச்சரியத்துடன் கேட்பது உங்களில் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

பயிர்ச் செலவைப்பற்றி மட்டுமா அவர்களுடைய அறியாமை! கட்டிடம் கட்டுவதற்கு இன்னின்ன சாமான்கள் தேவை என்பதே அவர்களுக்குத் தெரியாது. வீடு கட்டிக் கொடுக்கும் கண்டிராக்டருக்கு தெரிந்தாலே போதும் என்பது அவர்களுடைய எண்ணம் போலும்! பழைய உலகத்திலிருந்து புதிய உலகத்துக்குப் பாய்கிற இந்தத் தருணத்தில், எல்லாம் தலை கீழ்ப்பாடமாக இருப்பதில் வியப்பு ஒன்றுமே இல்லை.

சிங்காரம் கவர்னருக்கோ, வைசிராய்க்கோ மெய் காவல் அல்ல. அனுதி காலந்தொட்டு, சுயம்பு லிங்கமாக விளங்குகிற பாப்பூர் என்ற திவ்விய க்ஷேத்திரத்தில் மூர்த்தி கரத்தோடு சோபித்து நிற்கும் சிவபெருமானுடைய திருக்கோயிலில் சிங்காரத்துக்கு மெய் காவல் வேலை. மெய்காவல் வேலை என்றால் என்ன என்று கேட்கிறீர்களோ?

மனிதனுக்குத்தான் ஆடை ஆபரண அலங்காரம் என்பது இல்லை. இதைப்போலவே; கடவுள்களுக்கும் உண்டு. அவர்களும் இரண்டு பெண்சாதிக்காரர்களாக விளங்குவதையும் கோயில்களில் காணலாம். இன்னொரு விசித்திரம்கூட. திருவாதிரைத் திருநாளில், மட்டை

அடி உற்சவம் நடக்கும். உற்சவத்தின் உட்கருத்து இதுதான்.

சுவாமி எப்படியோ நெறிதவறிப் போய்விட்டாராம். அம்மனுக்கு இதைப் பார்த்து அடங்காத கோபம். லீலைக்காக வெளியே சென்றிருந்த சுவாமி கோவிலுக்கு வருமுன் அம்மன் கோயில் கதவைத் தாளிட்டுவிடுகிருள். சுவாமி கதவைத் தட்டிப் பார்க்கிருர். கெஞ்சிப் பார்க்கிருர். கொஞ்சிப் பார்க்கிருர் ஒன்றும் பலிப்பதில்லை. கதவைத் திறப்பதற்கு அம்மன் இணங்குவதில்லை.

சுவாமியின் பரிதாப திருக்கோலத்தைக் கண்டு மனம் கசியும் பக்தன், அம்மனை வேண்டிக்கொள்ளுகிருன். இனிமேல் இந்தமாதிரி சுவாமி நடந்துகொள்ளமாட்டார் என்று சுவாமியின் சார்பாக பக்தன் ஜாமீன் கொடுக்கிருர். பதியின் சொல்லை அலக்ஷியம் செய்த அம்மன் பக்தனுடைய வேண்டுகோளுக்கு இணங்குகிருள்.

ஊடலுக்குப்பின் கூடல் என்பது இயற்கை விதி அல்லவா? கதவு திறக்கப்படுகிறது. பிழைத்தேன் என்று சுவாமி கோயிலுக்குள் செல்லுகின்ருர். தனக்குள்ள அத்தனை சேஷ்டைகளையும் கடவுளுக்கும் சேர்த்து கற்பிக்கும் மனிதன் புத்திசாலி அல்ல என்று யார் சொல்ல முடியும்.

சிங்காரத்தை மறந்து விட்டோமே! அவர் கோயிலின் மெய் காவல் அல்லவா? அவரை அலக்ஷியம் செய்யலாமா? சுவாமியின், அம்மனின் திரு ஆபரணங்களையும் ஆடைகளையும் பத்திரமாக காத்து ஒப்புவிக்கும் வேலைக்கு மெய்காவல் என்று பெயர். இது உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும்.

இன்னின்ன திருநாளுக்கு, சுவாமிக்கு என்ன அலங்காரம் என்பது சிங்காரத்துக்கு தலைகிழாய்த் தெரியும். ஆடிப்பூரத்துக்கு, இன்னின்ன திரு ஆபரணங்கள் தேவை

என்பது அவருக்குத் தெரியும். அன்னபிஷேகத்துக்கு, என்ன உடை உடுத்துகிறது என்று அவருக்கு நன்றாகத் தெரியும். குதிரைமேலேறி, அம்பு போடுகிற சமயத்தில், சுவாமி எந்த திருக்கோலத்துடன் வெளியே செல்லுவார் என்பதும் சிங்காரத்துக்கு நன்றாகத் தெரியும்.

கோயிலில் குருக்கள்மார்கள் மாறலாம்; சமையல் காரர்கள் மாறலாம். மற்ற எல்லா சிப்பந்திகளும் மாற லாம். கோயிலில் எப்படியாவது தர்மத்தை நிலை நாட்டி விட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக் கும் மலைபோன்ற தர்மகர்த்தாக்கள்கூட மாறலாம். ஆனால் மெய்காவல் வேலைமட்டும், சிங்காரத்தின் குடும் பத்தை விட்டு வெளியே போனதே இல்லை.

வாழையடி வாழையாக அந்த வேலை, அந்தக் குடும் பத்தில் இருந்துவருகிறது. சிங்காரத்தின் குடும்பத்தைப் பற்றி பேசும்பொழுது, மெய்காவல் வீடு என்று தனித்து கௌரவமாக, ஊரில் சொல்லுவார்கள். சிங்காரத்தின் பெருமைக்கு எப்படி குறைச்சல் ஏற்படமுடியும்?

ஆதி அந்தமில்லாத பராபர வஸ்துவே கடவுள் என்ற உண்மை சிங்காரத்தின் மனதைவிட்டு ஒரு நிமிஷங் கூட அகன்றதேயில்லை. பராபர வஸ்துவுக்கு, இத்தனை படாடோபங்கள் எதற்கு என்று யாராவது வாய்த்துடுக் காகக் கேட்டுவிட்டால், சிங்காரத்தினிடம் அவர் தக்க சன்மானத்தை அடைந்துவிடுவார்.

மூலம் முடிவு இல்லாத கடவுளுக்கு எல்லைகோலி, இன்னதுதான் செய்யவேணும் என்று கட்டளை இடு வதற்கு, நீர் யார் என்று சிங்காரம் ஆத்திரத்தோடு கேட்டால், மற்றவர் நடுங்கிப் போவார். முழத்துண்டும் கால்படி அரிசியும்போதுமான அற்ப மனிதன் கடவுளின் லீலைகளுக்கு வரம்பு கோலி வம்பு பேசவாவது என்று சிங்காரம் கனீர் என்று கேட்பார். துடுக்காக கேள்வி

கேட்டவர் அப்படியே பஸ்பமாகப் போவது போல இருக்கும்.

'கல்தூணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும் நல் துணையாவது நமச்சிவாயமே, என்றுபாடி முடித்து, சிவா, திருச்சிற்றம்பலம் என்று சிங்காரம் சொல்லும்பொழுது, அவரைப் படம் பிடிக்கலாம்போல இருக்கும். நல்துணை யாவது நமச்சிவாயமே என்னும்பொழுது, சிங்காரம் தமது கண்களை இறுக மூடிக்கொள்ளுவார். வேறு எந்தத் துணையும் தம் கண்களில் படக்கூடாது என்பதற்காகவோ என்னவோ !

சிங்காரத்துக்கு வீட்டிலே அவ்வளவாக இன்பம் இருப்பதில்லை, 'நல்லாத்தான் பேசுறீங்க ! பெரிய கோவிலிலே மகாப் பெரிய மெய்காவல் வேலை பார்க் கிறீங்க ! வருஷம் பிறந்து வருஷம் முடிகிறதுக்குள்ளே எத்தனை திருநாள்கள் ; ஒரு முடிப்பூ, நீங்க கோயிலி லிருந்து கொண்டுவந்தா, நீங்க சேவிக்கிற சாமி ஒங்க கண்ணை குத்தி விடுமா' என்று சிங்காரத்தின் மனைவி பேச ஆரம்பித்துவிட்டால் விடமாட்டாள்.

சிவ சொத்து குலை நாசம் என்று சுருக்கமாக சிங்கா ரம் பதில் சொல்லுவார். ஆனால், மனைவி சும்மா இருக்க மாட்டாள். 'தனக்கு சேவிக்கிற ஆளையே நாசம் செய் யும் சாமி ஒரு சாமியாக்கும். தேன் எடுக்கிறவன் புறங் கையையும் ருசி பார்ப்பான் என்பது அந்தச் சாமிக்குக் கூடத் தெரியும். பந்து பந்தாக குருக்கள் அய்யா வீட் டுக்கு பூவை எடுத்துக்கிட்டுப் போறாங்க ! அவுங்க குலை, நாசமாய்ப்போய்டுத்தா" என்று மீண்டும் தாக்குதலில் குதித்துவிடுவாள்.

'அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல் லும்' என்பார் சிங்காரம். 'பொம்மனாட்டிக்கு பூ வேணும்னு, பக்தர்களுக்கு தெரிஞ்சாத்தானே' என்று

மனைவி, தனக்குள்ளாகவே முணுமுணுப்பாள். ‘கோயில் சாமான் வீட்டுக்குக் கொண்டுவருகிறமாதிரி எங்க பெரியவங்க நடந்துகொண்டிருந்தால் மெய்காவல் வேலை, தலைமுறை தலைமுறையாக எங்களுக்கு வந்துகொண்டிருக் காது’ என்பார் சிங்காரம்.

‘ஒங்க குடும்பத்திலே, என் ஆம்பிள்ளைகள் கலியா ணம் பண்ணிக்கணும்? ஆண்டவனுடைய திருப்பணியிலே ஈடுபட்டு, அவுங்க எல்லாரும் பிரம்மசாரிகளாக இருக்க லாமே’ என்று மனைவி குத்தலாகக் கேட்பாள். ‘உன் னைப்போல உத்தமி எங்க வீட்டுக்கு வருவா என்று எங்க பெரியவங்களுக்கு இச்சினி சொல்லி இருந்தா, அவுங்க கலியாணம் கட்டிக்காமே இருப்பாங்க’ என்று சொல்லி விட்டு, சாப்பிட வீட்டுக்கு வந்த சிங்காரம் சாப்பிடா மலே கோவிலுக்குப் போய்விடுவார்.

‘ஒரு பட்டைச் சோறுக்கு இரண்டு அடி’ என்று சொல்லுவதுபோல, இவன் சிவன் கோயிலில் தவுல்காரர். தவுல் வாசிப்பார் என்று கேலி செய்வார்கள் சிலர். மெய்காவல் வேலைக்கு தினமும் மூன்று பட்டை சாதம் தான் சம்பளம். ஏறுபடி நாட்களில் கொஞ்சம் கூட கிடைக்கலாம். ஆனல், திட்டம் இவ்வளவுதான். எனவே இன்பம் அனுபவிக்க என்னும் மனைவிக்கும் சாமிக்கு சேவை செய்ய கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் சிங்கா ரத்துக்கும் வீட்டில் எப்படி ஒற்றுமை இருக்க முடியும்.

‘கடவுள் விட்ட வழி!’ என்று ஜபித்துக்கொண்டி ருக்கும் சிங்காரத்துக்கு, யார் உபதேசம் செய்தாலும் காதில் ஏறுது.

---

6. மாட்டுத் தரகு மாணிக்கம்

சீலத்த கல்லூரில் வருஷம் தோறும் மாட்டுச் சந்தை கூடும். மாடு வகைகளை கண்குளிரப் பார்க்க வேண்டுமானல், சிலத்த கல்லூரில்தான் பார்க்கமுடியும். ஆனல் சந்தைக்கு விற்பனைக்காக, கறவை மாடுகள் மட்டும் வராது. பொதிமாடு, உழவுமாடு, வண்டிக்காளை கள், மொட்டை மாடுகள், மைசூர் பூர்ணியன் ஜோடிகள் இவைகள் அணி அணியாக, வரிசை வரிசையாக தொழு வில் இருப்பதைப் பார்க்கும்பொழுது மனதுக்கு மிகவும் சந்தோஷமாய் இருக்கும்.

மாட்டுச் சந்தை என்று பெயர் இருந்தாலும் செம் மறி ஆட்டுக்கடாக்களும் வரும். இவைகள் அநேகமாக சண்டைக்கடா ரகமாகவே இருக்கும். கொம்புகளில் பத்துப்பன்னிரண்டு பித்தளைத் தகடுகள் (சிறுசாக) தொங் கும். ஆடுகள் கொம்புகளை ஆட்டும்பொழுது (கொம்பை ஆட்டுவது என்பது சம்பிரதாயச் சொற்கள்; முகத்தை, தலையைத்தான் ஆட்டமுடியும்) இந்த பித்தளை தகடுகளும் பனை மட்டையில் காற்று உரசும் சத்தத்தைப்போல சத்தம் போடும். கழுத்திலே சிறு கம்பிளிக் கயிறுகளை அலங்காரமாக கட்டியிருப்பார்கள்.

சண்டைக் கடா முதல் பூர்ணியன் (மாட்டு) ஜோடி வரையில், மாணிக்கம் தரகு வேலை செய்வார். சந்தை யில் மாணிக்கத்துக்கு என்று தனிப் பந்தல் போட்டிருக் கும். நாடகத்தில் மந்திரி பிரதானி, கொத்தவால் சேகவர் கள் புடைசூழ அரசன் கொலு வீற்றிருப்பதைப்போல மாணிக்கம், வாங்குகிறவர்கள் விற்கிறவர்கள் புடைசூழ, தனது சிறு பந்தலில் வீற்றிருப்பார். சிறிய வெற்றிலைத் தட்டு, அவர்முன் இருக்கும். நாலு கவளி வெற்றிலைக்கு குறையாமல் இருக்கும். தட்டு நிறைய, வெட்டுப் பிளவு

(பாக்கு) குவிந்து கிடைக்கும். ஓரத்தில் வாட்டசாட்டமாக, புகையிலை (போட்டுக் கொள்ளும் இனம்) படுத்துக் கொண்டிருக்கும்.

தனது இருப்பிடத்துக்கு வருபவர்களை 'வாங்க, வாங்க' என்று உபசரிப்பதில், மாணிக்கம் அலுக்கவே மாட்டார். அடுத்தப்படியாக வெற்றிலை போட்டுக்கொள்ளுங்கள் என்பார். 'இந்த வருஷம் சந்தை கூடியிருப்பதைப்போல நான் எந்த வருஷமும் பார்த்ததேயில்லை' என்று சந்தையை வர்ணிக்கத் துவக்கிவிடுவார். சுவாரஸ்யம் என்னவெனில், சந்தையில் கூடியிருக்கும் ஆயிரக் கணக்கான உருப்படிகளும் எப்படியோ மாணிக்கத்தின் ஞாபகத்தில் வந்து நின்றுவிடும். சின்ன ஆட்டுக்கடா முதல் பெரிய பூர்ணியன் ஜோடி வரையில், மந்தையில் இருப்பவைகளை இவர் எவ்வாறு நினைவு வைத்துக் கொள்ளுகிறாரோ அதன் ரகசியம் எனக்கு தெரியாது.

ஐந்நூறு ஆடுகள் இருக்கும் ஒரு மந்தையில், ஆயிரம் மாடுகள் கூடிக்கொண்டிருக்கும் ஒரு மந்தையில் உருப்படி வித்தியாசமே நம் கண்களில் படுவதில்லை. பர்மாக் காரர்களையும், ஜப்பானியர்களையும், வெள்ளைக்காரர்களையும் நம்மவர்கள் கண்டால், அவர்களுக்குள் யார் யார் என்று சொல்லத் தெரிவதில்லை. ஜெர்மன்காரன், பட்ரென்று சகோதர ஜெர்மானியனை அடையாளம் கண்டு பிடித்துக் கொள்ளுவான். ஆனால், நமக்கு முடிவதில்லை. இதைப்போலவே, மந்தையை மேய்க்கும் கோனார்களுக்கு, தனித்தனி ஆடாக தெளிவாகத் தெரியும்.

மாணிக்கத்துக்கும் இப்படித்தானோ என்னவோ? அவர் மூலமாக மாடு வாங்குபவர்களை அவர் மறப்பதே இல்லை. இன்ன ரக மாடுகள் வாங்கினார்கள் என்பதையும் மறப்பதே இல்லை. 'போன வருஷம், பில்லைக்காளை ஜோடி வாங்கித் தந்தேனே,' அது எப்படி உழைச்சுதுங்க'

என்று பொறி தட்டினது மாதிரி, மாணிக்கம் வந்தவரைக் கேட்பார். ஆயிரம் பேர்வழிகளில் ஆயிரம் உருப்படிகளில் இதை அவர் எப்படி நினைவுவைத்துக் கொண்டிருந்தார் என்று வந்தவர் திகைத்துப் போவார். இப்படியே ஒவ்வொருவரும்.

மாடு வேணுமே என்று ஒருவர் சொல்லுவார். ‘மந்தையைக் கோலிப் பாத்துட்டீங்களா? இல்லாட்டி, போய் சுற்றிப் பார்த்துட்டு வாங்க. பிடிச்ச உருப்படியை வந்து சொல்லுங்க. கட்டாயம் வாங்கிப்பிடுவம். ஆனா, போன வருஷம் மாதிரி, விலை அவ்வளவு சல்லிசாய் இருக்கும்னு தோணல்லே’ என்று சிறிது பொடிவைத்துப் பேசிவிடுவார்.

மாணிக்கம் சொல்லுவார்:—“தரகு தொழிலே ரொம்ப தொல்லை பிடித்த தொழிலுங்க. கோர்ட்டிலே தீர்ப்பை இரண்டு கக்ஷியும் ஒப்புக்கிராங்களா? அந்த மாதிரிதான் தரகன் தீர்ப்பும். வந்த மாடுகளை விலைபேசி வாங்கலாம் அல்லது விக்கலாம். வாங்குகிறவங்க மனதுக்குப் பிடிச்ச மாதிரி, மாட்டை உண்டாக்க முடியுமுங்களா? மந்தையிலே நல்ல மாடும் இருக்கும்; பழுதான லங்கடாவும் இருக்கும். நல்ல மாட்டை விக்க, மாணிக்கத்தின் தயவு யாருக்கும் வேண்டாம். லங்கடாவை வித்துக் கொடுக்கிறதுக்குத்தான் மாணிக்கம் வேணும். அப்படியானால், மாணிக்கத்துக்கு எப்படி நல்ல பெயர் கிடைக்குங்க?”

‘மாடு கொஞ்சம் மதனமாயிருக்கும் போலிருக்கே’ என்று யாராவது ஒரு மாட்டைப்பற்றி சொன்னால், ‘வண்டியிலே பூட்டிப் பார்க்கணுமா’ என்று மாணிக்கம் வாய் நிறையக் கேட்பார். ஆமாம் என்றால், மாட்டை வண்டியில் பூட்டி காண்பிப்பார் மாணிக்கம். ‘ராஸ் கயிறை’ பிடித்தால், மாடு ஏதோ கொல்லி வைத்தால்

போல, நடை சரியானபடி போடும். வாங்குகிறவருக்கு சந்தோஷம். ஆனல், மாடு அவருடைய வீட்டுக்குப் போன பிறகுதான், அதன் மந்தத்தனம் நன்றாக அவருக்குத் தெரியும்.

இதற்காக, அவர் மாணிக்கத்தை ஏசமாட்டார். 'மாணிக்கத்தின் கையிலே இருக்கிறவித்தை நம்ம கையிலே ஏன் இல்லே? அவன் மாட்டை அதட்டல்லே; தாரால் குத்தவில்லே; சாட்டையால் அடிக்கவும் இல்லே. ஏறி உட்கார்ந்துகொண்டார். போடா ராஜா என்று ஒரு கனை கனைத்தார். அது ஓடித்து. மாடு, ஏன் அவன் கையிலே ஓடணும்? நம்ம கையிலே வந்ததும், அது ஏன் சண்டித்தனம் பண்ணணும்' என்று அவர் தன்னைத் தானே, தேற்றிக் கொள்ளுவார்.

'இது பட்டயம் கட்டின கடாவுங்க. சண்டையிலே இதை வெல்றதுக்கு கடா கிடையாதீங்க' என்று ஒரு ஆட்டுக் கடாவை மாணிக்கம் வர்ணிப்பார். 'அப்பேர்ப் பட்ட ஜெயம் அடைந்துவரும் கடாவை உடையவர் ஏன் விற்கவேணும்' என்று யாரும் வாய்த் துடுக்காக மாணிக்கத்தை கேட்டுவிடலாகாது. 'நல்ல கடா என்றால் நாற்பது ஊருக்கு தெரியவாண்டாங்களா? நீங்க புத்திசாலி இன்னு ஒங்க ஊரிலேயே அடஞ்சுகிடக்க முடியுமா? நாலு ஊரிலேபோய் ஒங்க சாமர்த்தியத்தைக் காண்பிச்சாத்தான், ஒங்களுக்கு சந்தோஷம் வருங்க, இல்லிங்களா' என்பார் மாணிக்கம்.

'ஆமாம்' என்று ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அப்படி ஒப்புக்கொண்டால், 'ஒங்கமாதிரிதான், இந்த கடாவும் நாலு ஊரிலே போய் நல்ல பெயர் வாங்கணும். உடையவன், உடமை பெரிசு இன்று சொல்லிக்கிட்டே இருக்கிறதிலே புண்ணியம் இல்லீங்க. மாடும் ஆடும் கை மாறிக்கொண்டே இருக்கிறதுதான் அழகுங்க' என்று

மாணிக்கம் ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்திவிடுவார். மாடுகள் கைமாறிக்கொண்டே இருந்தால்தான், மாணிக்கத்தைப்போன்ற தரகர்களுக்குத் தொழில் நடக்கும் என்பதை மற்றவர்கள் நினைப்பதில்லை. கைமாறிக்கொண்டிருப்பதுதான் அழகு என்று மாணிக்கம் சொல்லும்பொழுது, அவருடைய வாயைப் பார்த்தபடிக்கே மற்றவர்கள் ஆமாம் போடுவார்கள். மாணிக்கத்தின் தரகு சாதுர்யம் இதிலேதான் அடங்கியிருக்கிறது.

மைசூர் பூர்ணியன் ஜோடியை வாங்குகிறவர்கள் பிரபுக்களாகத்தான் இருப்பார்கள். சாதாரணப் பேர்வழி ஐந்நூறும் ஆயிரமும் போட்டு, ஜோடி மாடுவாங்க முடியுமா? பிரபுக்களும் இப்பேர்ப்பட்ட மாடுகளை வேலைக்காக வாங்குவதில்லை. மாட்டு ரசிகத்தனம்தான் அவர்கள் வாங்குவதற்கு முக்கியமான காரணம். பிரபுக்களிடம், மாணிக்கம் பேசும்பொழுது, அவர் சிறிய கவியாக மாறிவிடுவார்.

'எஜமான் அந்த ஜோடியைப் பார்க்காமல் இருப்பாங்களா? இந்த வருசத்து மந்தையிலே, அதுதானே குறி? சீரான கொம்பு; குளம்பு என்ன பக்குவமா அமைஞ்சு இருக்கு! என்ன பண்ணினாலும், சோடு தட்டவே தட்டாது. இப்போதான், கடை விழுந்து, முளைக்குதுங்க. அங்க அடையாளம், முகம், ஜாடை, கொம்பு அசைப்பு, லாயக்கா நடை போடறது—இதிலே இந்த மாதிரி ஜோடியை எஜமான் ஒரு நாளும் பார்த்திருக்க மாட்டாங்க. எஜமானுக்கு இன்னிக்கு நேத்திக்கு மாட்டு பழக்கமா? வமிச பரம்பரையாக அவுங்களுக்கு இந்தப் பழக்கம் வந்துகிட்டு இருக்கு. மாணிக்கம் சொன்னப்பலே அவுங்க கேட்டுவிடுவாங்களோ' என்று சன்னம் சன்னமாக பிரபுவின் மனதை மாணிக்கம் சீர்படுத்தி விடுவார்.

இவ்வளவு அபாரமாக தரகுவேலை செய்யும் மாணிக்கத்துக்கு கையிலே மடியிலே ஏதேனும் உண்டா என்று கேட்கவேண்டாம். 'செப்பிடு வித்தை சம்பாத்தியம், தரகு வரும்படி இதெல்லாம் உருப்படாதுங்க' என்று மாணிக்கம் ஒரேயடியாக சாதிக்கும்பொழுது, அவர் ஊதாரி என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

7. குறுக்குத்தோப்பு காசி பிள்ளை

சில பெயர்களுக்குத்தான் அதிருஷ்டம். அவைகளை, உருச் சிதைக்காமல், அப்படியே ஜனங்கள் உச்சரிக்கிருர்கள். மற்றும் பல பெயர்களை, ஜனங்கள் சித்திரவதை செய்தே தீர்த்து விடுகிருர்கள். ஸ்ரீநிவாசன் என்ற பெயர் முதலிலே சீமாச்சன் ஆகிவிடுகிறது. பிறகு, அதுவே, சீமாச்சு; கடைசியாக, சீச்சு (பைத்தியக்கான்) என்று முடிந்து விடுகிறது. இதைப்போலவே, கோமளம் என்ற அருமையான பெயரும், கோமளம், கோம்பளமாகமாறி, கோம்பிளி ஆகி, கடைசியாக, கோம்பா என்று ஜன்மம் எடுக்கிறது.

இலக்கணமும் தர்ம சாஸ்திரமும் 'பொதுஜன'த்து முன் பெயர் சொல்லவே முடியாது. அருமருந்து அன்ன (தேவாமிருதத்துக்கு ஒப்பான) என்று இலக்கணம் கண்டிப்பாய் சொல்லிற்று. ஆனுல், பொது ஜனமோ, அதை ஏற்றுக்கொள்ளாமல், சுருக்கமாக 'அருமந்த' என்று முடித்துவிட்டது. லாகிரி வஸ்துக்களை உபயோகப்படுத்தக்கூடாது என்று தர்ம சாஸ்திரம் கரடியாக கத்திப் பார்த்தது. அது பலிக்கிற விஷயமா? நாடு முழுதும் புகையிலை சாகுபடிதான். தர்ம சாஸ்திரமும் இலக்கணமும் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

குறுக்குத் தோப்பு காசி பிள்ளையின் கதியும் அநேகமாக இப்படித்தான். குறுக்குத் தோப்பு என்பது எப்படியோ குடுக்கை தொப்பை ஆகிவிட்டது. காசி பிள்ளை, என்ன மாயமாயோ, காசுப்புள்ளே ஆகிவிட்டார். மொத்தத்தில் சேர்த்து சொன்னுல், குறுக்குத் தோப்பு காசி பிள்ளை, குடுக்குத் தொப்பை காசுப்புள்ளே ஆகிவிட்டார். இப்படி சொல் கொலை செய்யலாமா என்று என்னைப் பார்த்துக் கேட்டுப் பயன் என்ன? பொதுஜனம் என்பது சர்வாதிகாரியைக் காட்டிலும், கொடுங்கோலனைக்

காட்டிலும் பிடிவாதமும் இறுமாப்பும் கொண்டதாகும். தான் 'மகாத்மா' இல்லை என்று காந்தி ஆயிரம் தடவைகள் சொல்லியாகிவிட்டது. பொதுஜனம் கேட்டால் தானே? மகாத்மாதான் என்று பிடிவாதமாக, பொது ஜனம் காந்தியைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்து, அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டது.

குறுக்குத்தோப்பு காசிபிள்ளை என்பவர் யார்? அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவரைப்பற்றி ஏன் இப்பொழுது பிரஸ்தாபம் செய்யவேண்டும்? இந்தமாதிரி கேட்டுக்கொண்டே போகலாமல்லவா? குறுக்குத்தோப்பு என்பது ஊர் அல்ல. ஊரின் ஒரு பகுதிக்கு, குறுக்குத் தோப்பு என்று பெயர். குறுக்குத் தோப்பிலே, மாமரங்களும், கொய்யா மரங்களும் அதிகம். இந்தத் தோப்பு, ஆதியில் சர்க்காருக்குச் சொந்தமாயிருந்தது. அதை அவர்கள் ஏலத்தில் விலைக்கு விற்கவே காசிப் பிள்ளை வாங்கிக்கொண்டார். அன்றுமுதல் பிள்ளைக்கு, வீட்டிலே வாசம் கிடையாது. குறுக்குத் தோப்பிலேதான் குடியிருப்பு.

பிள்ளைக்கு, இப்பொழுது, 'காடு வா வா' என்று அழைக்கிற காலம். வீட்டிலிருந்து காட்டுக்குப் போகுமுன், ஒரு அஞ்சலாக, குறுக்கு தோப்பிலே இப்பொழுது வந்து தங்கியிருக்கிறார். பிள்ளை பால்யமுதல் விவசாயி. பயிர்ச்செலவில் மிகவும் சாமர்த்தியசாலி என்று பெயர் வாங்கியவர். பருவம் அறிந்து பயிர்ச் செலவு செய்வார். ஊருக்கு முந்தி, பயிர்செய்வார்; ஊருக்கு முந்தியே அறுவடையும் செய்து விடுவார். அவ்வளவு குறி, விவசாயத்திலே. இவர் பயிர்செய்யும் பண்டங்கள் எப்படியோ நல்ல விலைக்குப் போய்விடும். சந்தைக்கு, முதலிலே வருகிறது இவருடைய சரக்குத்தானே?

விவசாயம்தான் இவருக்கு முக்கிய ஜோலி. என்றும், தினசரி, இவர், ஏதாவது ஒலைச் சுவடியை வைத்துப்

படிக்காமல் இருப்பதில்லை. இவருடைய மூக்குக்கண்ணாடி, எந்தக் காலத்தில் வாங்கினதோ! அதற்கு காதுபிடி இருக்காது. கயிறு கட்டியிருக்கும். இந்தக் கயிற்றை காது வழியாகக் கொண்டுபோய் தலையைச் சுற்றிக் கொண்டு முறுக்கி விட்டுவிடுவார். இவருக்கு வெள்ளெழுத்து மாத்திரமல்ல, கண்ணும் சிறிது பார்வை குறைச்சல்தான். எனவே, எப்பொழுதும் இவரை மூக்குக் கண்ணாடி சகிதமாகத்தான் தரிசனம் காண முடியும்.

இவர் குறுக்குத் தோப்பு ஏலம் கேட்க போகையில், விநோத சம்பவம் ஒன்று நேர்ந்தது. ஏல அதிகாரி, ஏலம் போடத் தயாராக இருந்தார். ஏலம் கேட்பவர்கள், குறிப்பிட்ட தொகையை, டிபாசிட்டு கட்டவேண்டும் என்பது மாமூல். இந்த மாமூல், அநேகமாக நடைமுதலில் இருந்ததில்லை. காசிபிள்ளை, ஏலம் கேட்க முன்வரவே, ஏல அதிகாரி, இவரை ஏற இறங்கப்பார்த்தார். 'நீ யாருங் காணும்? வேடிக்கை பார்க்க வந்திருக்கிறீரா' என்று கேட்டார். ஏலம் கேட்க வந்திருக்கிறேன் என்று பிள்ளை பதட்டமில்லாமல் பதில் சொன்னார்.

ஆளைப் பார்த்தால், அதிகாரிக்கு, மதிப்பு ஏற்படவில்லை. டிபாசிட் கட்டினீரா என்றார் அதிகாரி. என்னை ஒருத்தரும் கேட்கவில்லையே என்றார் பிள்ளை. 'சரிதாங் காணும்! சட்டம் பேசாதேயும்! போய், குமாஸ்தாவினிடம் மூவாயிரம் ரூபாய் டிபாசிட் கட்டிவிட்டு வாரும்' என்று அதிகாரி படாடோபமாகச் சொன்னார். பாக்கு கடிக்கிற நேரத்துக்குள், பிள்ளை, தொகையைக்கட்டிவிட்டு, ஏல அதிகாரிக்கு முன்னே வந்து நின்றார். 'பணம் கட்டி யாச்சா' என்று அதிகாரி அதட்டினார். 'ஆமாங்க' என்று பிள்ளை சாவதானமாகச் சொன்னார்.

பிள்ளை, விடாமல் ஏலம் கேட்டுக்கொண்டே வந்தார். இருபதினாயிரம் என்று ஒருவர் கேட்டார். 21,000 என்று

பிள்ளை, உடனே ஆயிரம் ரூபாய் உயர்த்திக் கேட்டார். அதிகாரி திகைத்துப்போனார். மறுபடியும் ஒருவர் 21,500 என்று கேட்டார். பிள்ளையோ 24,000 என்று சொன்னார். மீண்டும் கேட்பவர் இல்லை. பிள்ளைக்கு ஏலம் விடப்பட்டது. மூவாயிரம் டிபாசிட் போக, பாக்கி தொகையை, 21 நோட்டுகளாக (ஆயிரம் ரூ.) மடியிலிருந்து பிள்ளை எடுத்து அதிகாரியினிடம் கொடுத்தார். அதிகாரியின் உயிர் அப்படியே போய்விட்டது என்று சொல்லலாம். இவ்வாறு அவர் எதிர்பார்க்கவே இல்லை. பிள்ளை யாரோ ஒரு கிராமத்து சண்டைக்கார சண்டிப் பேர்வழி என்று அவர் நினைத்தார். உழைத்து, படாடோபமில்லாமல் பணக்காரன் ஆனவர் பிள்ளை என்பது அதிகாரிக்கு உதயமாகவே இல்லை.

குறுக்குத் தோப்பை ஏலம் எடுத்து பத்து வருஷத்துக்குள், பிள்ளை போட்ட முதலை எடுத்துவிட்டார். மாம்பழ விற்பனை, கொய்யா விற்பனை, புகையிலை சாகுபடி, காய்க்காத மரங்களை வெட்டி விறகாக விற்பது,— இவ்வாறாகச் செய்து, 24,000 ரூபாயைப் பத்து வருஷத்துக்குள் ஒப்பேற்றி விட்டார். அவர் இருக்கும் குறுக்குத் தோப்புக் குடிசைக்கு, வீட்டிலிருந்து சாப்பாடு வந்துவிடும். அமாவாசையன்றைக்கு மட்டும், வீட்டுக்குப் போய், குடும்பத்தாரோடு போஜனம் செய்வார். அன்றைக்கு சாப்பிடுகிற நேரம்தான் வீட்டிலே இருப்பார்.

அருணாசலக் கவிராயர் எழுதிய ராமநாடகம் படிப்பதில், பிள்ளைக்கு சலிப்பே ஏற்படுவதில்லை. ஏதாவது ஒரு காரியம் செய்ய எண்ணினால், பிள்ளை, ராமாயணத்தில் கயிறு போட்டுப் பார்ப்பார். கயிறு போட்டு கண்ட பாட்டுக்கும் இவர் நினைத்துக்கொண்டிருந்ததிற்கும், எப்படியோ சம்பந்தம் உண்டாக்கி விடுவார். சூர்ப்பனகை மூக்கு அறுபட்ட பாட்டு அகப்பட்டால், காரியம் பலிக்காது என்று தீர்மானம் கொள்ளுவார். அனுமான்

சீதாபிராட்டியை தேடிச்சென்றார் என்ற கட்டம் கிடைத்தால், காரியம் தாமதமாகப் பலிக்கும் என்று முடிவு கட்டிக் கொள்ளுவார். வாலி வதைப்படலம் அகப்பட்டால், அவருக்குக் குதூகலம். காரியம் உடனே சாயும் என்பார்.

யாராவது இவரோடு பேசவந்தால், வசனத்தில் பேச மாட்டார். ராமாயண பாடல் களிலிருந்து பொருத்த மானதைப் பாடி அதையே கேள்வியாகக் கேட்பார். கேட்டதற்கு ராமாயணக் கதையிலே அவர் பதில் சொல்வார். பிள்ளை சைவர்; என்றாலும் ராமனிடத்தில் அவருக்கு அபாரமான பக்தி. ராமன்தான் ஏழை பங்காளி என்பார். எவருக்கும் மனக்கசப்பில்லாமல் நடந்து கொண்டது ராமனைத் தவிர யார் என்று பிள்ளை வேகத்தோடு கேட்பார். குகனோடு பேசும்பொழுது, வாலியோடு தர்க்கம் செய்யும்பொழுது, ராவணனோடு போர் புரியும்பொழுது, ராமன் படாடோபமில்லாத மனிதனாகவே நடந்துகொண்டார். இவ்வாறு, பிள்ளை ராமனைப் பற்றி வர்ணிக்கத் துவக்கிவிடுவார்.

சிவராத்திரி தினமும் ஸ்ரீ ராமநவமி தினமும் பிள்ளைக்கு பூரண பட்டினி நாட்கள். அதிகாலையில் எழுந்திருந்து, நீராட்டம் செய்துவிடுவார். குடிசையின் கதவைத்தாள் போட்டுக்கொள்ளுவார். தியானத்தில் அமர்ந்துவிடுவார். ஸ்ரீராமநவமி தினத்தன்று மட்டும் அவர் கண்ணீர் உகுத்தபடியே இருப்பார். வாய்விட்டு, அருணாசலக் கவிராயரின் பாடல்களைப் படிப்பார். 'ஏ! ராமா! உன்பெருமை யாருக்குத்தெரியும், அப்பா' என்று அடிக்கொருதரம் சொல்லுவார். கடைசியாக தனக்குத் தானே பேசிக்கொள்ளுவார்.

'ஏ! ராமா! நான் சொல்றேன்னு வருத்தப்பட்டுக் காதே! நீ சிதாபிராட்டியை காட்டுக்கு கர்ப்ப சமயத்தில், அனுப்பியிருக்கக்கூடாது. அன்னையை லங்கையி

லிருந்து அழைத்து வரும்பொழுது, அக்கினிப் பிரவேசம் செய் என்று ராமா! நீ சொன்னதும் தவறு. வருத்தப் பட்டுக்காதே! என் ராமனிடம் நான் முறையிட்டுக்காமல் வேறு யார் முறையிட்டுக்கிறது' என்று அங்கலாய்த்துக் கொண்டே பேசிக்கொண்டிருப்பார்.

காசிப் பிள்ளை மறைந்துபோய் விட்டால், அவருக் குப்பின் அவரைப்போன்ற சிலாக்கியமான மனுஷனைப் பார்க்க முடியுமா? முடியவே முடியாது.

8. குறிப்பறியும் குமரவேல்

குமரவேலின் மூர்த்தி சிறிது, ஐந்தடி திட்டத்துக்கே மட்டமான உயரமானவன். எத்தனை ஜன்மம் எடுத்தாலும், அவனுக்கு போலீசிலே வேலை கிடைக்காது. குமரவேலின் நிறம், அழகான கறுப்பு. கிருஷ்ணன் என்றால் அவன் பெயர் என்று பலருடைய நினைப்பு. கிருஷ்ணன் என்றால் கறுப்பு நிறத்தான் என்றுதான் அர்த்தம். நமது நாட்டில் செல்வாக்குப் படைத்த நிறம் கறுப்பு: எனவே, கிருஷ்ணனுக்கு மதிப்பு. குமரவேலுக்கு, அவனுடையநிறத்தினால் மட்டும் மதிப்பில்லை, குணத்தினாலும்.

கறுப்புக் குமரவேல் வாயைத் திறந்துவிட்டால், வரிசை கோணாத, பாலிஷ் உதிர்ந்து போகாத வெள்ளைப் பற்களை காணலாம். கடிப்பதற்கல்ல; கடித்து தின்னுவதற்காக ஏற்பட்டதோஎன்று எண்ணும்படியான பற்கள் என்று பாரதிபார் வர்ணித்திருப்பது, குமரவேலுக்கும் பொருந்தும். ஆனால் குமரவேல் தனது முப்பத்திரண்டு பற்களையும் வெளியே தெரியும்படியாகக் காண்பித்து, தனது திக்கற்ற நிலைமையைக் குறிப்பிட்டு, காரியத்தைச் சாதித்துக் கொள்ளுபவன் அல்ல.

நேர்த்தியான பற்கள் நாச, பரிகாச வேலைகளுக்காக மட்டுமல்ல, அழகைப் பெரிதுபடுத்தி ஆனந்தத்தை அனுவிப்பதற்காகவும் அவைகளைத் தாராளமாக உபயோகப் படுத்தலாம் என்பது போல குமரவேல் சிரிப்பான். சிரிக்கும்பொழுது, "என்ன வேணும் சொல்லுங்கள். முடிந்த காரியமானால் உடனே செய்கிறேன்" என்று அவன் சொல்வதுபோல இருக்கும். குமரவேலினால் என்ன காரியம் ஆகப்போகிறது என்று யாரும் அலக்ஷியம் செய்யவேண்டாம்.

அப்படியானால், குமரவேல் யார் என்று கேட்கிறீர்கள்? அவசரப்படவேண்டாம்; சொல்லுகிறேன். ஒரு பொருளை நிர்ணயிக்கும்பொழுது, அதற்குப் பொருத்தமில்லாதவைகளை ஒதுக்கித் தள்ளினால், மிகுந்து நிற்பது அந்தப்பொருளைக் குறிப்பிடும் என்று தர்க்கசாஸ்திரத்தில் ஒரு விதி இருக்கிறது. எனவே, அப்படி செய்து பார்ப்போமா?

குமரவேல், வள்ளிமணாளன் அல்ல. எனவே, மனிதன்தான். குமரவேல் முதலாளி அல்ல; எனவே, கூலிக்கு உழைப்பவன்தான் குமரவேல் மிக்க படிப்பாளி அல்ல. எனவே, தமிழில் கொடுத்ததை, தட்டாமல் வாசிக்கக் கூடியவன் என்று சொல்லிவிடலாம்.

அற்பப் படிப்புள்ள குமரவேல், சேவகம் செய்கிறான் என்பது ஒதுக்கத்தினால், நமக்கு கிடைத்ததாகும்.

ஆமாம்! குமரவேல் சேவகன்தான். அவனுடைய எஜமானனுக்கு, அவன் மெய் காப்பாளனைப்போல. இன்னும் சிறிது அதிகமாகக்கூட சொல்லலாம். குமரவேல, அவனுடைய எஜமானனுடைய நிழல்ப்போல. குமரவேலின் எஜமானன், மிகப் பெரிய முதலாளி. இங்கிதம் தெரிந்து தொழில் நடத்தும் எஜமானன் பக்கத்தில் சதா இருக்கும் குமரவேல், பார்ப்போர் திகைக்கும்படியாக அவ்வளவு வினயத்தோடு நடந்துகொள்ளுவான்.

மகா கவிகளையும் பெரிய தத்துவ சாஸ்திரிகளையும், அவர்களுடைய சொற்களுக்கு இன்னதுதான் அர்த்தம் என்று வியாக்கியானம் செய்து, விளம்பரப்படுத்துவதற்கு பாஷ்யக்காரர்கள், விமர்சனக்காரர்கள் தேவை என்பார்கள். குமரவேலின் எஜமானன் எந்த மனோநிலைமையில் இருக்கிறார் என்பதைக் கண்டு சொல்வதற்கு, குமரவேலினால்தான் முடியும்.

முதலாளி சிரித்துக் கொண்டிருப்பார். வந்தவர் இதை சந்தோஷத்துக்கு அடையாளமாக எடுத்துக்

கொள்ளக் கூடாது. குமரவேலின் வியாக்கியானம் இதற்கு அலாதியானது. 'கேளுங்க! எசமான் இப்போ சிரிச்சுக்கிட்டு இருக்காரு என்று நினைக்காதீங்க. அவ்வள வும் கோபம். வந்தவனிடம் அதைக் காண்பிக்காமல், சிரிக்கிறார். மேற்கொண்டு அவனிடம் என்ன சரக்கு இருக்கிறது என்று துப்பு அறிவதற்குப் போல, அவர் சிரித்து, அவனுக்கு தைரியம் கொடுத்து, வாயைப் பிடுங்கப் பார்க்கிறார். நாளைக்கு வாங்க; ஒங்க காரியம் பலிக்கும்' என்று குமரவேல் சொல்லுவான்.

குமரவேல் சொல்லுவதைக் கேட்கவாவது என்று கர்வத்தோடு முதலாளியை பார்க்கப்போகிறவன் பாடு அநேகமாக திண்டாட்டத்திலே முடிந்துவிடும். சிறித்து முடிந்த முதலாளி, கோபத்தைக் காண்பிப்பார். வந்தவ னுக்கு வழி தெரியாமல், அவன் விழிக்கவேண்டியது தான். 'காரியத்தைச் சொல்லும்'என்று முதலாளி கண்டிப் பாய் ஆரம்பிக்கும் பொழுதே, காற்று இன்ன திசையில் இன்னவிதமாக வீசுகிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

முதலாளியின் ஒவ்வொரு அங்க சேஷ்டைக்கும், குமரவேல் ஒன்றை நிர்ணயித்து வைத்துக்கொண்டிருக்கி றான். கனைத்தால், அவருக்கு என்னவேணும்! நாற் காலியை, சீச்சு என்று சத்தம் செய்தால், எதைக் கேட்கிறார்! சின்னமணிச் சத்தத்துக்கு என்ன அர்த்தம்? கைகளை சுபாவமாக தட்டினால் என்ன பொருள்? வலது பக்கம் திரும்பினால், அவர் என்ன வேண்டுகிறார்? பையா என்று கூப்பிட்டால் என்ன அர்த்தம்! குமரவேல் என்றால் என்ன ஆபத்து? இவ்வளவும் குமர வேலுக்குத் தலைகீழ் பாடமாகத் தெரியும்.

குமரவேல் விதம்விதமாக உடுப்பான். ஆபீஸ் நேரத்துக்கு ஒரு உடுப்பு; அந்த நேரம் கழிந்துபோனால், வேறு உடுப்பு. எஜமானனோடு மோட்டார் காரில் போனால், வேறுவகை உடுப்பு. எஜமானன் காரியாலயத்

துக்கு வராமல் போனால், ஒரு வகை உடுப்பு. அவனுடைய உடுப்புக்களிலிருந்து, அவன் அவ்வப்பொழுது செய்யப் போகும் வேலையைத் தெரிந்து கொள்ளலாம்.

எஜமானனிடம் இன்னார் வந்தார், இன்ன காரியத் துக்காக வந்தார், முடிவு என்ன ஆயிற்று என்பது குமர வேலுக்கு எப்படியோ தெரிந்துவிடும். வந்தவர்கள் பெரும்பாலும் முதலாளியிடம் இங்கிலீஷ்தான் பேசுவார் கள். குமரவேலுக்கு இங்கிலீஷ் சுட்டுப்போட்டால்கூட தெரியாது. அப்படி இருந்தும், அவனுக்கு எப்படித் தெரிகிறது? நடந்தது என்ன என்று வந்தவர்களையோ, அல்லது மற்றவர்களையோ கேட்பானா? கேட்கவேமாட் டான். கழுகுக்கு மூக்கில் வியர்ப்பதுபோல, குமர வேலுக்கு எப்படியோ தெரிந்துவிடும்!

எஜமானனுடைய ரகசியங்கள் அனைத்தும் பொக்கிஷ மாகக் குமரவேலின் மனதில் குவிந்துகிடக்கின்றன. அது தன்னுடைய சொத்து அல்ல. ஆதலின், அதன்பேரில் விரல்கூட வைக்கமாட்டான் குமரவேல்; அதாவது இதைப்பற்றி அவன் யாரிடமும் பேசமாட்டான். அவ னிடத்திலிருந்து எந்த ரகசியத்தையும் தெரிந்துகொள்ள வும் முடியாது. இந்தமாதிரி அழகாக நடக்க அவனால் எப்படி முடிகிறது?

குமரவேல் பரமரசிகன்; எல்லையில்லாத எஜமான விசுவாசம் கொண்டவன். படாடோபமில்லாத சுயமரி யாதை உள்ளவன். பாலைப் பெரிதாக கொள்ளுவதா அல்லது பானையை பெரிதாகக் கொள்ளுவதா என்று கேட்டால், இரண்டும் பெரிதுதான் என்று அவன் தயங் காமல் சொல்லுவான். எனவே, தன் நலததுக்காக, எஜ மானனைக் காண்பித்துக்கொடுக்க விலை பேசும் அற்பன் குமரவேல் அல்ல.

குமரவேலுக்குக் கிடைக்கும் சம்பளம் இருபது ரூபாய்தான். அதனால் என்ன? புரோகிதர்கள் சொல்லு

வதுபோல அந்த இருபது ரூபாய்களையும் அவன் இருபது லக்ஷம் கட்டிவராகனாக மதிக்கிறான். திறமைசாலியும் யோக்கியருமான முதலாளியிடம் வேலை பார்ப்பதற்கு 'நாமல்லவா அவர்களுக்கு பாதகாணிக்கை வச்சு கும்பிட வேணும்?' என்று குமரவேல் சொன்னால், அவனுடைய பைத்தியக்காரத்தனத்திலிருந்து, அவனை யார் மீட்க முடியும்?

9. நெல்மண்டி ஏழுமலை

எத்தனையோ ஜன்மம் எடுத்து, பிறகு மனிதனாகப் பிறக்க வேண்டும் என்பார்கள். மேலும் தேவர்கள் கூட தப்பிதம் செய்தால், அவர்கள் மனிதர்களாகப் பிறந்து, தவறுக்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டு, மீண்டும் தேவர்கள் ஆகிறார்களாம். எப்படிப் பார்த்தாலும், மனித ஜன்மம் மிகவும் உயர்ந்தது என்று பெரியவர்கள் சொல்லுவதில் என்ன சந்தேகமிருக்கிறது?

மனிதன் என்ற அந்தஸ்தைப்போலவே, நெல் மண்டித்தொழிலும். சிறிய சிறிய தொழில்களை செய்து, பணம் சம்பாதித்து, கடைசியில் நெல்மண்டித்தொழிலில் ஈடுபடுவது க்ராமத்திலே வழக்கம். பெரிய பெரிய மிராசுதார்கள், தங்கள் பூமியை விற்றுவிற்று, ஒட்டாண்டிகளாகப் போனால், அவர்களால் என்ன செய்ய முடியும்? ஒரு தொழிலிலும் பயிற்சி இல்லாத காரணத்தால், நெல் விற்ற முதலாளியாக இருந்தவர் நெல் வியாபாரம் செய்யும் வர்த்தகராக மாறினால்தான், பிழைப்புக்கு ஏதேனும் வழி உண்டு.

நெல் மண்டி ஏழுமலை எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று கேட்கிறீர்களோ? அவர் இரண்டையும் சேர்ந்தவர். அதிபால்யத்தில், அவர் ஒரு கடையிலே வேலை பார்த்தார். 'கை கட்டிச் சேவகம்' அவருக்குப் பிடிக்கவில்லை. ஏதோ, நாலு இரண்டு காசு மீத்ததை கையில் வைத்துக்கொண்டு, பஜார் வீதியில், 'சுடச்சுட பக்ஷணம்' விற்கும் ஹோட்டலின் வாசலுக்குப் பக்கத்தில், வெற்றிலை பாக்கு, பீடி, சுருட்டு, சோடாக் கடை ஒன்றைத் திறந்து வைத்தார்.

பழைய காலத்து ராஜாக்களுக்கெல்லாம், வெற்றிலை பாக்குக் கடை என்றால், ரொம்பவும் அலக்ஷியம். ஒரு

ராஜா மந்திரியோடு புறப்பட்டாராம். எதற்காக? எந்தத் தொழிலுக்கு, எந்த வியாபாரத்துக்கு வரி போடலாம் என்பதை நேரிலே பார்த்துத் தெரிந்து கொள்ளுவதற்காக. நூற்றுக்கு என்ன லாபம் கிடைக்கும் என்பது அவரது மாமூல் கேள்வி. இருபது, முப்பது, பதினைந்து, முப்பத்தைந்து என்று வர்த்தகர்கள் சொன்னால், 'கொள்ளை லாபம்; போடு வரி' என்று சொல்லிவிட்டு ராஜா அப்புறம் அகல்வார்.

ஆனால் சூதுகார வெற்றிலை பாக்குக் கடைக்காரனிடம் ராஜாவின் ஆக்கினை பலிக்கவில்லை என்ன லாபம் என்று ராஜா அதட்டினார்.

"மகாராஜா! வெற்றிலைபாக்குக் கடையிலே என்ன மிச்சம் இருக்கப் போறதுங்க? மளிகைக் கடையா, நெல் மண்டியா, கண்டிராக்ட் வேலையா" என்று அடுக்கிக் கொண்டே போனான் வெற்றிலை பாக்கு கடைக்காரன். "அதையெல்லாம் உன்னை யார் கேட்டது? உன் சங்கதியைச் சொல்லு" என்று ராஜா குறுக்கிட்டார். தம்பிடிக்கு தம்பிடி லாபம் கிடைக்கும் என்றான். தரித்திர வியாபாரம் என்று சோல்லிவிட்டு, ராஜா போய்விட்டார். தம்பிடிக்கு தம்பிடி என்றால் நூற்றுக்கு நூறு என்பது ராஜாவின் கனமான மூளையில் படவில்லை.

தம்பிடிக்குத்தம்பிடி லாபம் என்பது பழைய காலத்து வெற்றிலை பாக்கு கடைக்கு. இப்பொழுதோ, தம்பிடிக்கு இரண்டுதம்பிடி லாபம்என்று கூசாமல் சொல்லிவிடலாம். அதுவும் காபி ஹோட்டலுக்கு பக்கத்திலிருக்கிற வெற்றிலை பாக்குக் கடைக்கு, அமோகமான லாபம் என்று சொல்லவும் வேண்டுமா? ஹோட்டலுக்கு கொடுத்து மிகுந்த செப்புக் காசுகள் எல்லாம் வெற்றிலை பாக்குக் கடையைத் தாண்டிப் போகவே போகாது.

இந்த லாபகரமான தொழிலில், எழுமலை அமர்ந்தார். புகையிலை போடாதவர்களைக் கூடப் புகையிலை போடப்

பழக்கி வைத்தார். வயிறு என்னமோ போலயிருக்கு என்று யாரேனும் சொன்னால் போதும். 'மணி மார்க்கு சோடா எல்லா வயிற்றுக் கோளாறுகளையும் அரை நிமிஷத்தில் கண்டித்து விடும்' என்று ஏழுமலை பிரசாரம் செய்வார். பீடி குடிக்கிற சின்னப் பையன்களை, ஏழுமலை கண்டிக்க மாட்டார். ரகசியமாகச் சில வீட்டுக் கிழவிமார்களுக்கு, கட்டுக் கட்டாய் சுருட்டு அனுப்புவார். பல துளி பெரு வெள்ளம்போல, அவருடைய லாபம், கணக்குக்கு அகப்படவில்லை.

புராணிகர்கள் சொல்லுவதுபோல, இந்தமாதிரி சிறிது காலம் சென்றது. மிச்சமான பணத்தை, ஏழுமலை எண்ணிப் பார்த்தார். ஆயிரத்துக்கு அதிகமாக யிருந்தது. அவருக்கு உற்சாகம். நூற்றுக்குமேலே ஊற்றுயிருந்தால், ஆயிரத்துக்குமேலே, அண்டாத வெள்ளமாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர் தீர்மானம் கொண்டார்.

மாட்டு வண்டி வாங்கினார். ஒரு வண்டியை வைத்துக்கொண்டு, நெல் வியாபாரம். இரண்டொரு வருஷங்களுக்குள், பத்து வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி, நெல் வியாபாரத்தை விரிவாகச் செய்தார். சீக்கிரத்தில், பதினாயிரம் ரூபாயைக் கண்ணால் கண்டார். ஏழுமலைக்கு இருப்புக்கொள்ளவில்லை. நெல் தரகு வியாபாரம் செய்யாமல், தாமே சொந்தத்தில் நெல் மண்டியை நடத்தத் துணிந்தார். பதினாயிரக் கணக்கில், வரவு செலவு. பாட்டிமார்கள் சொல்வதுபோல, ஆசை யாரை விடும்? ஏழுமலை பேராசைக்குப் பலியானார்.

நவநாகரிக முறையில், மாமிச பக்ஷணங்கள் செய்து, ஐரோப்பிய பாணியில் ஹோட்டலை நடத்தினால், கட்டிப் பிடிக்க முடியாதபடிக்கு லாபம் வரும் என்று யாரோ ஒருவர் அவர் மூளையிலே ஏற்றிவிட்டார். மேற்கத்தி நாடுகளில் இந்தமாதிரி ஹோட்டல் வைத்து, விரைவில் லக்ஷப் பிரபு ஆனவர்களின் கதைகளையும் அவர் எடுத்துச் சொன்

ஞர். அன்றுமுதல் எழுமலைக்கு வெறிதான். யாரும் இதுவரையில் செய்யாத தொழிலைச் செய்து, தமது சாமர்த்தியத்தை உலகத்தாருக்கு வெளிக் காண்பிக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டார்.

நெல்மண்டியிலிருந்து, சிறிது சிறிதாகத் தமது கவனத்தைக் குறைததுக் கொண்டார். பிரியானி, புலாவ் என்று ஜபம் பண்ணிக்கொண்டே இருந்தார். சீக்கிரத்தில், மிலிடரி ஹோட்டல் ஒன்றை ஸ்தாபனம் செய்தார். மிலிடரி ஹோட்டல் என்ருல் யுத்தப்பயிற்சி சொல்லிக் கொடுக்கப்படும் ஹோட்டல் அல்ல. மாமிச பக்ஷணங்கள் செய்துகொடுக்கும் ஹோட்டல் என்று சொல்லவும் வேண்டுமா ?

மிலிடரி ஹோட்டலுக்கு, தமக்கு ஆலோசனை சொன்னவரையே மானேஜராக அமர்த்தினுர். அந்த மானேஜருக்கு, உணவில் ருசிப்பழக்கம் உண்டேயல்லாமல், தொழில் நடத்தும் திறனும் பழக்கமும் கிடையாது. பெருச்சாளி அறுக்கிற வீடு, எத்தனை நாள் கெட்டிக் கட்டிடமாயிருக்கும்? மானேஜர் தன் பாட்டை மட்டும் பார்த்துக் கொண்டார். நாள் ஒன்றுக்கு தனக்காக ஐந்திலிருந்து பத்து ரூபாய் வரையிலும் இன்ஷூர் செய்து கொண்டார்.

பண்டங்கள் சேதமாவது அவருக்குத் தெரியவே இல்லை. தொழிலில் பழக்கம் இருந்தால் தானே ? மேலும் ஊரான் வீட்டு முதல்தானே? அதைப்பற்றி, மானேஜருக்கு என்ன கவலை? தமக்குத் தெரிந்த பழைய நண்பர்களுக்கும்புதிதாகவந்து சேர்ந்தநண்பர்களுக்கும், மிலிடரி ஹோட்டலில் தினசரி விருந்துகள்! காசு வாங்காத விருந்கள்! வருஷக் கடைசியில் கணக்குப் பார்த்தால், பதினுயிரத்துக்குமேல் நஷ்டம். எழுமலைக்கு மனக் கலக்கம் ஏற்பட்டது.

நெல் மண்டியை, வேறொருவரிடம் ஒப்படைத்து விட்டு, தாமே ஹோட்டலை நடத்தினர். இந்த ஏற்பாட்டினல், இரண்டு தொழில்களிலும் ஏராளமாக நஷ்டம். ஆனல், ஏழுமலைக்கு பிடிவாதம் மட்டும் போகவில்லை. 'இன்ஸால்வெண்ட்' நிலைக்கு வந்துவிடுவார் போலிருந்தது. ஹோட்டலை மூடினர். ஒடிந்த நாற்காலிகளும், மேஜைகளும் திராவகம் இழந்த கண்ணடிகளும், ஓட்டைப் பாத்திரங்களும் இருபதினயிரம் ரூபாய் கடனும் மிச்சம். நெல் மண்டியிலும் வியாபாரம் மந்தம்.

கடனைக்கட்டி, கௌரவ மனிதனக வெளி வரவேண்டுமே என்ற ரோஷம் ஒன்றுதான் அவர் மார்பில் கெட்டியாக இப்பொழுது அடித்துக்கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் நெல் மண்டியை வைத்துக்கொண்டிருக்கிறர். தொழிலின் நுட்பத்தை அறிந்துகொள்ளாமல், பேராசை கொண்டு ஒன்றைச் செய்யப்பார்ப்பது முழு முட்டாள் தனம் என்று வந்தவர்களிடம் எல்லாம், அவர் வாயைப் போக்கிக்கொண்டு வருகிறர்.

10. நந்தி மதகு நடன பண்டாரம்

கூள்ளியூர் நந்தி மதகு மிகவும் பிரசித்தமானது. நந்தி மதகில், மூன்று வாய்க்கால்கள் பிரிகின்றன. மதகுக்குள் தண்ணீர் ஓடி வரும்பொழுது டமாரம் அடித்தது மாதிரி இருக்கும். அதுவும் ஒன்று இரண்டு டமாரம் அல்ல. விட்டு விட்டு ஆறு ஏழு டமாரங்களை தாளத்தோடு அடித்தது மாதிரியே இருக்கும். மதகின் ஒரு புறத்தில் ஒரு மடம்; மற்றொரு பக்கத்தில் கள்ளுக்கடை; மடத்துக்கு பக்கத்தில், சிறுவெற்றிலை பாக்கு கடை ஒன்று.

நந்தி மதகு கள்ளுக்கடையை ஏலம் எடுப்பதற்கு, தஞ்சாவூர் ஜில்லாவின் பல பகுதிகளிலிருந்து ஏலதார்கள் நூறுக்குக் குறையாமல் வருவார்கள். பண மூட்டையுடன் தான். இந்தக் கடைக்குமட்டும் ஏன் இவ்வளவு கிராக்கி இருக்கவேண்டும்? குடிக்கிறவர்களை கேட்டால்தான், உண்மையான காரணம் தெரியும். ஆனால் வதந்தி என்னவென்றால், நந்தி மதகு கடையில், புளித்த கள் ஊற்றுவதில்லை என்பதுதான். சுமார் பத்து மைல் சுற்று வட்டாரத்திலிருந்து இந்தக் கடையின் போஷகர்கள் வருவார்கள்.

வரும்பொழுது விறுவிறுப்பான நடைதான். போகும்பொழுது, நர்த்தனம் செய்துகொண்டு போவார்கள். இது கள்ளின் மகிமையா என்று கேட்கிறீர்களோ? அது சிறிது இருக்கலாம். ஆனால், நர்த்தனத்துக்கு, பெரும் பகுதி காரணம் மடத்தில் வசிக்கும் பண்டாரம் தான். இந்த பண்டாரத்துக்கு நடன பண்டாரம் என்று பெயர். இவர் யார், எங்கிருந்து வந்தார், சாப்பாட்டுக்கு என்ன செய்கிறார் என்பதெல்லாம் மூடு மந்திரம். பகல் முழுதும் நடனம்; பண்டாரம் மடத்தில் இருப்பார். இரவு பத்து மணிக்கு, அதைப் பூட்டிக்கொண்டு எங்கேயோ மாயமாய்ப் பறந்து விடுவார். காலையில், அருணோதயத்துக்குமுன் மீண்டும் பண்டாரம் மடத்தில் ஆஜர்.

பண்டாரத்தின் வயது இவ்வளவுதான் என்று நிச்சயமாய் சொல்ல முடியாது. நல்ல கட்டுமஸ்தான தேகம். கடைந்து எடுத்தமாதிரி இருக்கும் கைகளும் கால்களும் பண்டாரம் வெள்ளை வேஷ்டி பண்டாரம். நெற்றியில் கால் அங்குல கனத்துக்கு குறையாமல் விபூதி; கையில் ஒரு ஜபமாலை. தலையோ முழு மொட்டை. பல் வரிசைகள் நேர்த்தியானவை. பாலிஷ் துளிக்கூட போகாத பற்கள். அவருடைய வாய் வெற்றிலை பாக்கை பார்த்திருக்குமா என்பது சந்தேகம்.

ஜபமாலையைக் கையில் வைத்து உருட்டிக்கொண்டு, பண்டாரம், மடத்தில், அநேகமாக நர்த்தனம் செய்து கொண்டிருப்பார். பேச்சு ரொம்பவும் குறைவு. கள்ளுக் கடைக்கு வரும் பக்தர்கள் அனைவரும் பண்டாரத்தைத் தரிசனம் செய்யாமல்போவதே இல்லை. அவர் நர்த்தனம் செய்வதைப் பார்த்து, போதை மயக்கத்தால் இவர்களும் ஆட ஆரம்பித்து விடுவார்கள். மடத்தில் பிடித்த நடனம் இவர்கள் வீடு போய்ச் சேரும்வரையில், இவர்களை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும்.

பண்டாரம் ஒரே மாதிரியாகத்தான் நர்த்தனம் செய்வாரா? இல்லை. ஒவ்வொரு நாளும் தனித்தனி நடனம். சிலசமயங்களில், ஒரே நாளில், இரண்டு மூன்று வகை நர்த்தனம் செய்வார். ஒற்றைக்கால் நடனம், சக்கர நடனம், மோது நடனம், பறக்கும் நடனம். காதல் நடனம் இவ்வாறு, பலவகை நர்த்தனங்கள் நடைபெறும். இவைகளில் மோது நடனம்தான் முக்கியமானது. இந்த நர்த்தனத்தில், பண்டாரம் ஆடிக்கொண்டேபோய், நருக்கு நருக்கென்று சுவரில் வலுவாய் தலையை மோதிக்கொள்வார். சுவர் இடிந்தாலும் இடியுமேயல்லாமல், இவர் மண்டை உடையாது.

இந்த மோது நடனத்தைக் கண்டுதான், போதை பக்தர்கள் பிரமித்துப் போவார்கள். பண்டாரத்தின்

யோகசக்தி அபாரமாகத்தான் இருக்கவேண்டும் என்று இவர்கள் முடிவு செய்துகொண்டால்; அது தவரு? சாதாரணமாக, எந்த மனிதனுவது இரண்டொரு தடவைக்கு மேல், மண்டையை கெட்டிச்சுவரில் மோதிக்கொள்ள முடியுமா? மோது நடனம் பயிலும்நாளன்றைக்கு, சுமார் லக்ஷம் தடவைகள் பண்டாரம் மோதிக்கொள்வார் என்று கணக்கு எடுத்ததுபோல,பக்தர்கள் பேசிக்கொள்வார்கள்.

பண்டாரத்தின் மண்டையிலே ஒரு வடு இருக்காது. வீக்கம் இருக்காது. மயிர்த்தலேயா, மோதையைத் தாங்குவதற்கு? அதுவும் மொட்டைத் தலே. எனவே, பக்தர்கள், பிரமை தட்டிப்போவதில் என்ன தடை இருக்கிறது? எத்தனேயோ படித்த பேர்கள், பண்டாரத்தின் மோது சக்தியின் மர்மத்தை கண்டுபிடிக்க பிரயத்தனப்பட்டிருக்கிருர்கள். மோது நடன பண்டாரமும் மற்ற நடன பண்டாரமும் ஒன்றுதான என்றுகூட அவர்கள் சந்தேகப்பட்டிருக்கிருர்கள். பண்டாரம், சுவரில் ஒரே ஒரு இடத்தில் தான் மோதிக்கொள்ளுகிருர் என்பது வாஸ்தவம்தான். ஆனல், தாளமும் போக்கும் அந்த இடத்துக்குத்தான் கொண்டுபோய் விடமுடியும் என்று நிச்சயம் செய்துகொண்டார்கள்.

எனவே, பண்டாரத்தின் குட்டு வெளிப்படவே இல்லே. பண்டாரம் யோகசித்தி அடைந்த பெரியவர் என்று முடிவாகிவிட்டது. மோது நடன காலத்தில், சில்லறைப் பணங்கள், காசுகள் குவிந்துபோகும், அவைகளேப் பண்டாரம் கண் எடுத்து பார்ப்பதே இல்லே. நடனம், நடனம் ஒரே நடனம். மோது நடனத்தன்று, சுமார் பத்து ரூபாய்வரையில் சேரும் என்பார்கள். வாரத்துக்கு மூன்று தடவைகள் மோது நடனம் நடக்கும். எனவே, மாதம் நூறு ரூபாய்க்குமேல் சேரும். கலெக்டர் கச்சேரி சிரஸ்தார் சம்பளம் என்று சொல்லிக்கொள்ளுவார்கள்.

பண்டாரம் நடனம் முடிந்து உட்காரும் சமயங்கள் மிகச் சிலவே. உட்காரும்பொழுது, களைத்துப் போன தாகக் காண்பித்துக் கொள்ளவேமாட்டார். உட்கார்ந்த தும், அவர் யாரையும் பார்ப்பதுமில்லை. கைகளை விரித் துக்கொண்டிருப்பார். ஏதோ மூர்த்தியின் தரிசனத்தை ஆனந்தத்தோடு அனுபவித்துக்கொண்டிருக்கிறது மாதிரி, கைகள் குவிந்தும் விரிந்தும் இருக்கும். சில சமயங்களில், முகத்தில் புன்சிரிப்பும் தவழும். இரவு பத்து மணிக்கு மேல், அவர் எப்படி மடத்தைவிட்டுப் போகிறார் என்று மட்டும் யாருக்கும் தெரியவில்லை.

இந்த மாதிரி, பல வருஷங்கள் நடந்திருக்கும். திடீ ரென்று, பண்டாரம் மறைந்து போய்விட்டார். மடத் துக்கு இரண்டு வருஷமாக வருவதே இல்லை. ஆனால், ஒரு வதந்திமட்டும் உலவி வந்தது. சாத்தங்குடி தாசி முத்து மீனாட்சியைக் கொலை செய்தவன் என்று காவலில் வைக் கப்பட்டிருக்கும் பேர்வழி, பண்டாரத்தைப்போல இருக் கிறார் என்பது வதந்தி. ஆனால், பேர்வழி தலைமொட்டை யாக இருக்கவில்லையே! தலையிலே அருமையான கிராப்பு அல்லவா இருக்கிறது? நெற்றியில் விபூதியே இல்லை. நல்ல குங்குமப்பொட்டு துலங்குகிறது. நல்ல அழகான மீசை. இப்படியிருக்க, பண்டாரம்தான் என்று எப்படிச் சொல்லுகிறது?

ஆனால் விசாரணை காலத்தில், நந்திமதகு பண்டாரம் தான் என்பது ருசுவாகிவிட்டது. இவர் எப்படி மோதிக் கொண்டார் என்பதும் வெட்ட வெளியாகிவிட்டது. அவர் மோதிக்கொண்ட இடத்தில், இரண்டு அடி சதுரத் துக்கு, அரையடி கனமுள்ள ரப்பர் திணித்து வைக்கப் பட்டிருந்ததாம். அவர் மோதும்பொழுது உண்டான சப்தம், அவர் கையினால் சுவரில் செய்த சத்தமாம். அதி விரைவில் செய்ததால், மோதினது மண்டையா, அல்லது சத்தம் செய்தது கையா என்று யாராலும் கண்டுபிடிக்க

முடியவில்லையாம்! அவ்வளவு ஜாலக்காக, அதைச் செய்து வந்தாராம்!

நடனமெல்லாம் எதற்காக? சாத்தங்குடி தாசி முத்து மீனாக்ஷியின் பாதத்தில் பணத்தைக் காணிக்கையாக செலுத்துவதற்காகத்தானாம்! உலகத்தை ஏய்த்த பண்டாரத்தை, முத்து மீனாக்ஷி ஏய்த்தாள். அவளுக்கு ஆசை நாயகன் வேறு. தனது ஏய்ப்பு நியாயம் என்பது பண்டாரத்தின் எண்ணம். தாசி ஏய்க்கவாவது? பண்டாரத்துக்கு ஆத்திரம். அரிவாளை உபயோகப்படுத்தி, மீனாக்ஷியை வேலை முடித்துவிட்டார். பண்டாரமும் தூக்கில் ஏறிவிட்டார். ஆனால் அப்பொழுது, விபூதியும் ஜபமாலையும் இல்லை.

11. புல்லூர் கண்ணன்

"பரம்பரையாம் பூர்வ ஜன்மபலனும்! எல்லாம் சுத்தப் புளுகுங்க! பரம்பரை எங்கிறது நிசமாயிருந்தா, நான் இப்படி இருப்பேனுங்களா? பூர்வ ஜன்மத்தை யார் கண்டார்? வரப்போற பிறப்பை யார்கண்டா? இப்போ காண்கிறதுதான் நிசமுங்க! கற்பனை செய்யறதெல்லாம் வெறும் பொய்யுங்க!" என்று நொந்துகொண்டு புலம்புகிற பேர்வழியை உங்களுக்குத் தெரியுமா? அவர்தான் புல்லூர் கண்ணன்.

"காந்தி, ஹிட்லர், ரூஸ்வெல்ட், ஸ்டாலினைப்போல உலகப் பிரசித்திபெற்ற மனிதனைப்போல, அவரைப்பற்றி நீங்கள் பேசுகிறீர்களே! யாரோ அனாமதேயப் பேர்வழியை சந்தியிலே இழுத்து, அவனுக்கு முடிசூட்டப் பார்க்கிறீர்களே! சாத்தியமான உண்மையை ஏற்றுக்கொள்ளலாம். சாத்தியமில்லாத பொய்யை எப்படி மூட்டை தூக்கமுடியும்" என்று ஆத்திரத்தோடு, நீங்கள் என்னைக்கேட்கிறுப் போலத் தோன்றுகிறது. அப்படியானால் கண்ணன் நொந்துகொள்வது இயற்கையானதுதான்.

அநியாயமான வார்ஸேல்ஸ் உடன்படிக்கை ஏற்படாவிடின், ஹிட்லர் தோன்றியிருக்கமாட்டார் என்று உத்தமமான இங்கிலீஷ்காரர்கள் சொல்லுகிறார்கள். ரஷ்யப் புரக்ஷி இல்லாவிட்டால், ஸ்டாலினைப் பற்றி எங்கே கேள்விப்படப்போகிறோம் என்கிறார்கள் அறிவாளிகள். இந்தியா, பரம்பரை என்ற கொடுமைக்கும் பராதீனம் என்ற அடிமைத் தனத்துக்கும் ஆள்பட்டுக் கிடப்பதாலேதான், காந்தி பிறப்பது சாத்தியமாயிற்று என்று சிந்தனையாளர்கள் சொல்லுகிறார்கள். இதைப்போலவே, இன்னொரு காரணத்தை ரூஸ்வெல்டைப்பற்றி கேட்கலாம்.

அதாவது இந்தக் காரணங்களெல்லாம் எந்த உண்மையை நிலைநாட்டப் பார்க்கின்றன? சந்தர்ப்பமே, மனி

தனை உருவாக்குகிறது என்றும் நெருக்கடியைச் சமாளிக்க வல்ல தலைவன் தோன்றுகின்றான் என்றும் குறிப்பிடுவதற்காகவே, மேலே சொன்ன காரணங்களை எடுத்துக் காட்டுகிறார்கள். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் தனக்கு வாய்க்கவில்லை என்றும் பரம்பரையால் தனது குடும்பத்துக்கு கிடைத்துவந்த கீர்த்தியும் தொலைந்துபோயிற்று என்றும் நினைத்து நினைத்து, புல்லூர் கண்ணன் உள்ளம் உருகுகிறார்.

அவருடைய பரம்பரை தான் என்ன? அவர் தான் சொல்லட்டுமே! கண்ணன் சொல்லுகிறார் :—' எங்கள் குடும்பத்தின் பரம்பரை உங்களுக்குத் தெரியாதே! சொல்லுகிறேன். நாங்கள் சூரிய வமிசம், சந்திர வமிசம், நக்ஷத்திர வமிசம் எதையும் சேர்ந்தவர்களல்ல. 'வாள் எடுத்து வரும் தமிழர் முன்னர், மாற்றலர் எதிர் நிற்க மாட்டார்கள்' என்று பாரதியார் பாடி இருக்கிறாரே, அந்த வீரத் தமிழன் வமிசத்தைச் சேர்ந்தவன் நான். எங்கள் பெரியவர்கள் பெரியபாளைய பட்டுக்கு உடையவர்கள். அவர்களுடைய செல்வாக்கு, நான்கு திசைகளிலும், எட்டுக் கண் விட்டு அடித்தது. புல்லூர் மிட்டா, என்றால், அழுத பிள்ளையும் வாய் மூடும்'

'என்ன! நான் சொல்லுகிறதைக் கேட்டு வரீங்களா? சும்மா பேசாமே இருக்கீங்களோ! தற்பெருமைபேசறது எல்லாருக்கும் இயற்கைதான் என்று மன்னிப்பதைப் போல, எங்கள் குடும்பக் கதையை நீங்கள் கேட்கலாகாது. கொஞ்சம் கவனமாய்க் கேளுங்கள்' என்றார் கண்ணன். அவர் சொல்லுவதில் எனக்கு அதிகமாக சிரத்தை இல்லை என்பதை அவர் தெரிந்து கொண்டது ஆச்சரியம் தான். எனவே மிக்க கவனத்துடன் கேட்டேன். அவர் சொல்லுகிறார் :—

" எங்கள் குடும்பம் பெரிய பாளையபட்டுக் குடும்பம். எங்கள் பெயர் கேட்கும் ஐம்பது மைல் சுற்று வட்டாரத்தில், ஒரு திருட்டுப் போனதில்லை. தெருச்சண்டை, கிரா

மங்களுள் சண்டை என்கிற சங்கதியே பேசப்படாது. பச்சைப் பிள்ளைக்கு பசும்பால் ஊர் ஊராய்க் கொடுக்க, எங்க பெரியவங்க ஏற்பாடு செய்திருந்தாங்க. வழி நடந்து க்ஷேத்திராடனம் செய்யும் யாத்ரீகர்களுக்கு, தேசாந்திரி கட்டளைகளை, கோயில்களில் ஏற்படுத்தியிருந்தாங்க. புல்லூர் சத்திரத்தைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அது இருந்த இடம் புல் முளைச்சுத்தான் போச்சுதே''

கன்னான் கனைத்து, தொண்டையைச் சரி செய்து கொண்டு மீண்டும் சொல்லுகிறார்;—இப்ப வங்காளத்திலே, நித்த நித்தம் நூற்றுக்கணக்கில் சாப்பாட்டுக் கில்லாமே, பட்டினி கிடந்து சாகிறார்களாமே! அவர்களை சரியானபடி அடக்கம் செய்யக்கூட வசதி இல்லையாமே! இந்த மாதிரி, எங்கள் பெரியவங்க காலத்திலே நடந்திருக்குமா? உங்களுக்குத்தான் காட்டூர் தெரியுமே! புல்லூரிலிருந்து காட்டூர் முந்நூறு மைலுங்க, அங்கே நூறு வருசத்துக்கு முந்தி பஞ்சம் வந்துதாம். மனுசாளுக்கு ஆகாரம் இல்லே. மாட்டுக்கு தீனி இல்லே! எங்க பெரியவங்க என்ன செய்தாங்க தெரியுமா?''

'சொல்லுங்கள்' என்று நான் கருத்தாகக் கேட்டேன். கன்னான் என் கவனத்தைப் பார்த்தோ அல்லது அவருடைய பெரியவர்களைப் பற்றி நினைத்தோ, கண் கலங்கினார். அவர் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு சொல்லுகிறார்.

'ஆயிரம் வண்டி அரிசி சேத்தாங்க. வைக்கல் வண்டி ஆயிரம் சேத்தாங்க. முன்னாலே தம்பட்டம் அடிச்சு கொம்பு ஊத, பெரிய பட்டாளம் போறது மாதிரி, இந்த வண்டிகள் எல்லாம் புறப்பட்டன. முந்நூறு மைலும் பத்து நாளிலே போய்ச் சேர்ந்தாங்க. என்ன அசுர வேலை பாருங்க. எங்க பெரிய பாட்டனார் காட்டூரிலேயே ஒருமாதம் தங்கியிருந்து, எல்லாத்தையும் கவனிச்சுண்டு வந்தாருங்க. நல்ல வேளையா மழை பேஞ்சுதுங்க.

பஞ்சமும் பறந்து போச்சுங்க. புல்லூர் மிட்டாதாரை புகழாதவங்க இல்லே. மைசூர் மகாராஜா, எங்க பெரிய பாட்டனுரைப் புகழ்ந்து, கடுதாசு அனுப்பிவிச்சாருங்க! அந்தக் கடுதாசு இன்னும் எங்ககிட்ட இருக்குங்க!

'இருக்கவேண்டியதுதானே? மகாராஜாவின் அபிமானம் என்பது லேசாக் கிடைக்கக்கூடியதா' என்று நான் இடைமறித்தேன்.

'அப்படிச் சொல்லுங்க! செஞ்ச நல்ல காரியத்துக்கு, சபாஷ் என்று சொல்லாமே போனல், குஷி இருக்காதுங்க. அந்தக் காலத்திலே கும்பெனி ராஜ்யங்க. யாரோ கோள் சொல்லி, போய், வெள்ளைக்கார துரையினிடம் சொல்லியிருக்கான். என்னுங்கரீங்க? கும்பெனி ராஜ்யத்துக்கு எதிர்க்கொடி போட, புல்லூர் பாளையபட்டுக்காரர் பார்க்கிறுங்க என்று. வெறும் வாயை மெல்ற கும்பெனி துரைங்க சும்மா இருப்பாங்களா? வேவுகாரனை அனுப்பிப் பார்க்கசொன்னுங்க. அவன், வந்த வேலையை நாணயமாய்ப் பார்த்தாத்தானே? அவன், பெரிய பொய் மூட்டையை கட்டிக்கொண்டுபோய், துரையின் முன்னலே வச்சான்—'

'அடப் பாவி! நல்லவங்களை பொல்லாதவங்க காட்டிக் கொடுக்கிறது என்கிறது இந்த நாட்டு தர்மம்போலிருக்கிறது' என்று எனக்குள்ளாகவே முணுமுணுத்துக்கொண்டேன். ஆனல், அது கண்ணன் காதில் எப்படியோ விழுந்தது. 'அப்படி சொல்லுங்க ராசா! அதுதான் சரி' என்று கண்ணன் ஒப்பம் வைத்தார்.

மேலும் அவர் சொல்லுகிறுர்:—கும்பெனி துரை, இதைக் கேட்டவுடனே, ஆத்திரத்திலெ துடிச்சார். ஏன் துடிக்கமாட்டார்? கும்பெனி ராஜ்யத்துக்கு எதிரி என்ருல் சும்மாயிருப்பாரா? சின்னப்பட்டாளத்தை அனுப்பினுர். புல்லூரிலே, எங்கள் கோட்டையையும் அரண்மனையையும் தரைமட்டப் படுத்தினுர். எங்க மிட்டாவை,

துரோகம் செய்த பங்காளிகள் சிலருக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். நாங்களோ, நடுத்தெருவிலே நிக்கவேண்டியதாச்சு. எங்க பெரிய பாட்டனாரை, அலக்காக எங்கேயோ கொண்டுபோய் வச்சுட்டாங்க. அவுங்க என்ன கதியானாங்க எங்கிறதுகூட தெரியலேங்க—"

'உங்கள் பெரிய பாட்டனாருக்கு என்ன நேர்ந்தது என்பதுகூட உங்களுக்குத் தெரியாதா' என்று நான் கேட்டேன்.

"ஒன்னுமே தகவல் கிடைக்கலிங்க. எங்களைச் சேர்ந்தவர்களை யெல்லாம் 'மாடு பிடிக்கி' இனத்திலே சேர்த்து விட்டாங்க. எங்களை சீர்திருத்தம் செய்கிறாங்களாம்! நான், இந்த யுத்தம் வந்தவுடனே, பட்டாளத்திலே சேருகிறேன் என்று சொன்னேன். அதிகாரிகளுக்கு, எங்கள் குடும்பத்தாரின் பேரிலே அவநம்பிக்கை! என்ன செய்யறதுங்க! கும்பெனி அவசரப் பட்டு காரியம் செய்யப்போக, நல்லமுறையா, நாங்க கௌரவமில்லாமல் வாழவேண்டியிருக்குங்க! பட்டினி கிடக்கிற ஏழைங்களுக்கு கஞ்சி வார்த்து ஊத்தினா, அது கும்பெனி ராஜ்யத்துக்கு விரோதமாகுங்களா? அப்படியே குத்தம்னுவச்சுக்குங்க. அதுக்காக நூறு வருசத்துக்கு பிந்திக்கூட, எங்க குடும்பத்தாரிடம் இவ்வளவு அவநம்பிக்கை இருக்கணுங்களா?"

'பரம்பரை' என்று சொல்லிச் சிரித்தேன். 'உங்களுக்கு சிரிப்பு வருகிறது. எனக்கு ஆத்திரம் துடிக்கிறது. நல்லவங்களை யெல்லாம் விரோதிச்சுட்டு ராஜாங்கம் நடத்துவது புத்திசாலித்தனமாகுமா' என்று கண்ணன் என்னைக் கேட்டார்.

'என்னுடைய பதிலினால், உங்கள் மனக்கொதிப்பு அடங்கப் போகிறதா' என்று பேச்சை முடித்தேன். கண்ணன் பெருமூச்சு விட்டார்.

---

12. மாட்டுக்கார மருதன்

'நெல்லுக்காச்சிமரம்' என்று பலர் சொன்ன காலமும் உண்டு. நெல் எப்படி பயிர் ஆகிறது என்பதே தெரியாத அப்பாவிகள்! கிராம வாழ்க்கை இன்னது என்று தெரியாத அரண்மனைச் சிப்பந்திகள், பண்டைக் காலத்தில் 'நெல்லுக்காச்சி மரம்' என்பார்களாம். அவர்களுக்குச் சளைத்தவர்களல்ல, இப்பொழுது நகரத்தில் வசிப்பவர்கள்.

இவர்களுக்கு, கொட்டில், பண்ணை, மாட்டுக்காரன், கருக்காய், போரடி, பிரம்படித்தல், நாற்றங்கால், களை எடுத்தல் முதலியவைகள் என்ன என்பதே அநேகமாகத் தெரியாது என்று சொல்லி விடலாம். வயலை மடக்கி மடக்கி எத்தனை தடவை உழுதாய் என்று கேட்பதற்குப் பதிலாக, எத்தனை 'சால் ஓட்டினாய்' என்று கிராமத்தில் கேட்பார்கள் என்றும் இவர்களுக்குத் தெரியாது.

கொட்டில் என்றால் தொட்டில் என்பதைப் பிழையாகச் சொல்லுகிறார்கள் என்று இவர்கள் அழுத்திப் பேசவும் கூடும். மாட்டுக்காரன் என்றால் மாட்டுக்கு உடையவன் என்று தவறாக அர்த்தம் செய்துகொள்ளவும் செய்வார்கள். மாடு மேய்ப்பவனை மாட்டுக்காரன் என்றும் மாடுகள் தங்கும் இடத்துக்குக் கொட்டில் என்றும் கிராமத்தில் சொல்லுவார்கள் என நகரவாசிகளுக்கு இப்பொழுது கட்டாயம் தெரியபடுத்தித்தான் ஆகவேண்டும்.

மாட்டுக்கார மருதன் மாடு மேய்க்கும் மருதன் என்று இன்னமும் தெளிவுபடுத்த வேண்டுமா? மருதனுக்கு, இப்பொழுது வயது பதினான்கு இருக்கும். அவன் ஹரிஜன் என்று சொல்லத் தேவையில்லை. காய் கறிகளைக் கண்ணால் கண்டறியாத கூட்டத்தில் பிறந்த மருதனுக்கு நண்டுதான் பலகாலும் ஆகாரம். மைசூர்

பாகும் ஹல்வாவும் அவனுக்குத் தெரியுமா? சர்க்கரைப் பண்டங்களை, கிழக்கோடி அளவுக்குமேல் அவனால் சாப் பிடமுடியாது. அதற்குள், தித்திப்பு தெகட்டிப்போகும்.

உப்புப் பண்டங்களை அதுவும் கொஞ்சம் காரம் அதிக மாக இருந்தால், விடவேமாட்டான். 'அதற்காச்சு, எனக்காச்சு' என்று சொல்லிக்கொண்டே ஒரு கை பார்த்துவிடுவான். வலது கையில் ஒரு கவளச் சோற் றையும் இன்னொரு கையில் ஈர வெங்காயத்தையும், பச்சை மிளகாயையும் ஊறுகாய்களாக வைத்துக்கொண்டு, அவன் ருசியுடன் உண்பதைப் பார்த்து தேவர்கள்தான் புஷ்பமாரி பெய்யவேண்டும். நீராகாரத்தைக் கண்டால், மருதனுக்குப் பிரம்மானந்தம்!

இரண்டாம் கோழி கூவினால் போதும்; மருதன் படுக்கையில் இருக்கமாட்டான். படுக்கை என்பது உப சார வார்த்தை. மருதனுக்குப் படுக்கை ஏது? படுக்கை எதற்காக? உடல் வருந்தி உழைக்காதவர்களுக்கல லவா, மெத்தையும் அடுக்கு அடுக்காக தலையணையும் வேண்டும்? மருதனுக்கு மெத்தை பூமிதான்; தலையணை, அவனது இடது கை. குளிர்ந்தால், போர்த்துக்கொள்ள துப்பட்டியும் போர்வையும் கிடையாது. அவனுடைய இடுப்பிலே இருக்கும் துண்டுதான் இதற்கு உபயோகப் படவேண்டும்.

கோழி கூவினதும், அவன் கால்களை நீட்டிக் கொண்டு படுத்துக் கொண்டிருக்கமாட்டான். எழுந் திருந்து உட்கார்ந்து கொண்டு, கண்களைச் சுத்தமாக துடைத்துக் கொண்டு, இடுப்பில் துண்டைக் கட்டிக் கொள்ளுவான். கிழிந்த கைக்குட்டை போன்ற ஒரு துணியை தலையில் கட்டிக்கொள்ளுவான். பக்கத்தில் கம்பு இருக்கிறதா என்று ஆஜர் பார்ப்பான். பரமசிவம் என்று தன் வாய்க்குள்ளாகவே, ஒருதரம் சொல்லிக் கொள்ளுவான்.

நன்ருக, நிலம் தெளிந்ததும், ஆண்டை வீட்டுக்குப் புறப்படுவான் கோல்சகிதமாக. "ஆத்தா! போய்த்து வாரேன்" என்று தாயாரிடம் சொல்லிக்கொள்ளுவான். வழியில் பராக்குப் பார்க்கமாட்டான். நேரே, ஆண்டை வீட்டுப் புழக்கடைக்கு வருவான். புழக்கடையிலிருக்கும் மாட்டுக் கொட்டிலில் நுழைந்து, ஒவ்வொரு மாடாகத் தடவிக் கொடுப்பான். கோதாணியிலே வைக்கோல் இருக்கிறதா என்று கவனித்துப் பார்ப்பான். வைக்கோல் இல்லாமலிருந்தால்தான், சந்தோஷப்படுவான்.

எந்த மாட்டுக்கு முன்னேயாவது, கோதாணியில் வைக்கோல் இருப்பதைப் பார்த்தால், அவன் உடல் பதறிப் போவான். 'ஏ! வெள்ளேச்சி (ஒரு பசுவுக்கு அவன் வைத்திருக்கும் பெயர்) நீ ஏன் சரியாக தீனி எடுக்கல்லே? உனக்கு வயிற்றுப் பொறுமலா? இல்லாட்டி, உன் பக்கத்திலிருக்கிற கோணக் கொம்பன் (காளே மாட்டுக்குப் பெயர்) உன்னேத் தீனி தின்ன விடாமல், கொம்பை ஆட்டிக்கிட்டே இருந்தாஞ' என்று வெள்ளச்சியோடு, அந்தரங்கம் பேசுவான்.

மாடுகளேயெல்லாம் அவிழ்த்து, புண்ணுக்கு போட்டிருக்கும் தொட்டியில் தண்ணீர் காட்டுவான். 'ஏ! சாமி! மாடுவளே, மேச்சத் தரைக்கு ஒட்டிட்டுப் போறேன். போய்ட்டு வாரேனுங்க' என்று ஆண்டையின் வீட்டாருக்கு தெரியும்படியாக, உரக்கச் சொல்லி விட்டுப் போவான்.

காலேயில், மேய்ச்சல் தரையில் முதன் முதலில், மருதன்தான் ஆஜராக இருப்பான். பட்டி மேய்ச்சலுக்கு ஆசைப்படும் மாடுகளுக்கு காலில் முட்டி போட்டுவிடுவான். மாடுகளேச் சிதருமல் பார்த்துக்கொண்டு,

அரச மரத்துக்கிளி, ஆசாரம் பேசும் கிளி
நான் வளர்த்த பச்சக்கிளி, நாளைவரும் கச்சேரிக்கு
தில்லாத்தான் டாங்கு ராசா தில்லாலே

என்று கானத்தில் வீழ்ந்து விடுவான்.

கொண்டித்தனம் செய்துகொண்டு, தானும் மேயாமல், மற்ற மாடுகளை மேயவிடாமல், 'ஹூட்டி' அடிக்கும் மாட்டுக்கு, கிட்டப் போய், புத்தி சொல்லுவான். 'ஏ! பாவி! ஏன் உனக்கு கெடு புத்தி! நல்ல வங்க வீட்டிலே வளர்ர நீ, மருதன் மேய்க்கிற மாடு நீ, நீகூட ஊர்ப் பயங்க மாடு மாலி (மாதிரி) சேட்டை பண்றயே! புத்தியோடு இருந்தே, புளச்சே, இல்லேன்னு, நல்லா, உன்னை, நாலு வாங்கு வாங்கிடுவேன். புத்தியோடு புளே! முதுகுத் தோலை எரவல் கொடுத்துடாதே' என்பான்.

அது நல்ல தனமாக நடந்துகொண்டால், மருதன் சும்மா இருப்பான். இல்லாவிட்டால், 'அடியாத மாடு படியாது இன்னு உனக்காகத்தான் சுலவம் (சுலோகம் - பழமொழி) சொல்லுகிறுக' என்று அவன் பாஷைப் படிக்கு, 'நாலு வாங்கு வாங்கி' மாட்டின் முதுகுத் தோலை, 'எரவலாக'ச் செய்துவிடுவான்.

மாடுகளை, காலை மேய்ச்சல் ஆனதும், வீட்டுக்குத் திருப்பிக் கொண்டு வரும்பொழுது, தெருக் காடுகளில், ஏதாவது காயப் போட்டிருக்கிறார்களா அல்லது குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கிறார்களா என்பதைக் கவனித்துப் பார்த்து, மாடுகளை ஒரு பக்கமாக ஒதுக்கி ஒட்டிக்கொண்டு போவான்.

ஆண்டை வீட்டுக்கு மாடுகள் வந்ததும், அம்மா என்று பதட்டமில்லாமல், மிக்க மரியாதையோடு கூப்பிடுவான். மாடுகளை, அதன் அதன் இடத்தில் கட்டிக் 'கோதாரியில் நிறைய வைக்கோலை அடைந்துவிட்டு,' மீண்டும் அம்மா என்று குரல் கொடுப்பான். இரண்டா

வது அம்மாவுக்கு, சன்மானமாக, அவனுக்கு அரிசி நொய் கிடைக்கும். அதை வாயில் போட்டு மென்று கொண்டே வீட்டுக்குப் போவான்.

வீட்டிலே, தாயார் இருக்க மாட்டாள். அவளும் வீட்டுக்கு வெளியே வேலைக்குச் சென்றாலொழிய, அவர்களுடைய குடும்பத்தின் ஜீவனம் நடக்க வழியில்லை. ஐந்தாறு குழந்தைகள்! அவர்களிலே மருதன் தான் மூத்தவன். அவனுடைய பங்கு ஆகாரம் - குடிக்கக் கூடியது-சட்டியிலே வைத்து மூடப்பட்டிருக்கும். அதாவது நீர் ஆகாரம். ஆறு குழந்தைகளின் நடுவே, அவ்வளவு தானே கிடைக்கும்.

மருதன் சேரிச் சாவடியில்—சாவடி பாதிக்கூரை போன இடம் - படுத்துக்கொண்டு, தனக்குத் தெரிந்த பாட்டுகளை யெல்லாம், கண்காணு கடவுளுக்கு முன், அரங்கேற்றுவான். சிறிது நேரம் அங்கேயே கண் அயர்வான்; அல்லது மற்ற பையன்களோடு விளையாடுவான். அல்லது வீட்டிலே தங்கை பாப்பா அழுதால், அதைத் தூக்கி வைத்துக்கொண்டு, விளையாட்டு காண்பிப்பான்.

பிற்பகலில் மணி இரண்டு அடிப்பது அவனுக்கு எப்படியோ தெரிந்துவிடும். மறுபடியும் மாடு அவிழ்க்கப் போய்விடுவான். இப்பவும் அம்மா என்ற குரல்தான். பிற்பகலில் வேறு மேய்ச்சல் தரை. சரியாக நான்கு மணி அடிப்பதும், அவனை மாடுகளோடு ஆற்றில் பார்க்கலாம். மாடுகளைச் சுத்தமாகத் தேய்த்துக் குளிப்பாட்டுவான்.

மயிலைக் காளையைத் தேய்க்கும்பொழுது 'அடே; அசடே! உனக்கு எத்தனை நாள் புத்தி சொன்னாலும் உனக்குத் தெரிகிறதில்லை. ஊரான் கொல்லையிலே போய் வாய் வைக்காதேன்னு எத்தனைநாள் உனக்கு இடிச்சு இடிச்சுச் சொல்றது. அடப்பாவி! அவன், உன் முதுகுத் தோலிலே, பட்டை வாங்கிபிட்டானே! அவனைச் சொல்லி என்ன பண்றது? உனக்குன்னு ரோஷம் இருக்கணும்?

ஊரான் கையாலே அடிவாங்கறது அவமானம்னு உனக்குன்னு இருக்கணும். இனிமே, பட்டி மேச்சல் மேயாதே' என்று தடவிக் கொடுத்துக்கொண்டே தேய்ப்பான்.

மருதனுடைய மான உபதேசம் மயிலைக்காளையின் காதில் விழப்போகிறதா?

தீபாவளியும் பொங்கலும் மருதனுக்கு, குதூகலமான நாட்கள். 'சாமி! இந்த வாட்டி தீவிளிக்கு எனக்கு காந்தி வேட்டி எடுத்துக் குடுங்க, ஏன் சாமி! மகா காந்தி (மகாத்மா காந்தி என்று மருதனுக்கு சொல்லவராது) சயிலிலேயா (ஜெயிலிலா) இருக்கா? நல்லவங்களைப் பெரியவங்களை, இப்படியெல்லாம் செய்யலாமுங்களா? நம்ம ராசாவுக்கு, மகா காந்தி சயிலிலே இருக்காருன்னு தெரியாதுங்களோ' என்று சொல்லிக்கொண்டே போவான்.

பொங்கலுக்கு பத்து நாள் முன்னமேயே, மாடுகளுக்கெல்லாம், சல்லிகள் தயார்ப் பண்ணுவதில், மருதன் ஈடுபட்டிருப்பான். "சாமி! இந்த வாட்டி நொம்ப (ரொம்ப) சல்லி பண்ணியிருக்கேனுங்க. கோணக்கொம்பனுக்கு தாட்டு சல்லி, வெள்ளச்சிக்கு நெத்திப்பட்டை, மயிலைக் காளைக்கு கொம்புச் சல்லி, தாட்டுச் சல்லி, நெத்திப் பட்டை, காதுக்கு குஞ்சுச்சல்லி, எல்லாம் திரிச்சுருக் கேனுங்க. நம்ம மயிலைக் காளையை, இந்திரன் சந்திரன் வந்தாக்கூட பிடிக்க முடியாதுங்க. கொம்பாலே ஒரு குத்து குத்தி எரிஞ்சுடுங்க. சாமி! கொம்பிலே, புது வேட்டி கட்டிவிட்டா, என்னுங்க" என்பான்.

பொங்கலுக்காக மருதனுக்குக் கிடைப்பது ஒரு புதுப் பானை, இரண்டு படி அரிசி, மூன்று வெல்ல அச்சுகள், இரண்டு முழத்தில் ஒரு கரும்புத்துண்டு, ஒரு அணா காசு. இவைகளை மிக்க சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு, மருதன் ஆண்டையைக் கால்கும்பிடும்பொழுது, என் கண்களில் நீர் பெருகும். மகாத்மா மருதன் என்று என் வாய் தானாகவே சொல்லும்.

13. தாசி மனோகரம்

சிற்றின்பத்தை வெறுத்து, பேரின்பத்தை நாடவேண்டும் என்று நிமிஷம்கூடத் தவறாமல் உபதேசம் நடைபெற்றுவரும் இந்த நாட்டிலே, தாசி மனோகரமும் அவளைப்போன்றவர்களும் வாழ்வதுமட்டுமல்ல, செழிப்பாக வாழ்வதென்றால், அதைக்காட்டிலும் அக்கிரமமானது வேறென்று இருக்கமுடியுமா என்று சிலர் கேட்கலாம். 'பெரிய பெரிய பாரிஸ்டர்கள், டாக்டர்கள், இவர்களுக்குக்கூட மனோகரத்தின் மாத வருமானம் வரவில்லையே' என்று பொருளாதாரத்தில் கவலை கொண்டவர்கள் வருத்தப்படலாம்.

எது கூடாது என்று பகிரங்கமாகப் பிரசாரம் நடைபெறுகின்றதோ, அதுவே, அந்தரங்கத்தில், வெகு செண்டிப்பாக நடக்கும். இது விசித்திரமான மனோதர்ம விதி அல்ல. இது மிகச் சாதாரணமான இயற்கை விதி. கடிக்கிற நாய் குரைப்பதில்லை என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? கடிக்கத் தைரியமும் தென்பும் இல்லாத நாய்தான், இரவு முழுதும் குரைத்துத் தீர்த்துவிடும். குரைத்துக் குரைத்து, அது தனது கபோதித்தனத்தை, செயலிழந்த தன்மையை மூடப் பார்க்கிறது.

ஆச்சாரியர்களும் அதிகாரிகளும் ஒன்றைச் செய்ய வேண்டாம் என்றால் அதைச் செய்யத்தான் பெரும்பான்மையானவர்களின் உள்ளம் துடிக்கும். இதுவும் இயற்கையின் கொடுமை. சுதந்திரம்தான் படைப்பின் தர்மம் ஆகும். அதைத் தடுத்து, சுதந்திரத்தைப்பறிமுதல் செய்யப் பார்த்தால், அந்தத் தடையினால் பயன் ஏற்படுவதில்லை. தடையை மீறிய செயல்தான் அதிகரிக்கும். அந்தச் செயல், குற்றம் என்று கருதப்படலாம். குற்றம் செய்யவாவது என்று ஆத்திரத்தோடு கேட்கலாம்.

அவ்வாறு கேட்பது தவறு. அந்தச் செயலைக் குற்றமாகச் செய்வது அதைவிடப் பெரும் தவறு.

தாசி மனோகரத்துக்கும் அவளுடைய இல்லம் புகும் மாந்தர்களுக்கும் நீங்கள் 'வக்காலத்து' வாங்கிக்கொண்டிருக்கிறீர்களோ என்று உங்களில் சிலர், என்னை ஆத்திரத்தோடு கேட்கவேண்டாம். உண்மையைச் சொன்னேன். அதை ஏற்றுக்கொள்ள மனம் இருந்தால், ஏற்றுக் கொள்ளுங்கள். மனம் இல்லாவிட்டால், அதற்காக, எச்சில் விழுந்துவிட வேண்டாம்.

தங்கமான புள்ளியான கோவலன், பச்சைக் கிளியைப்போன்ற கண்ணகி, வீட்டில் இருக்க, விலைமாது மாதவி வீட்டுக்கு ஏன் ஓடினான்? ஏன் என்று உங்களால் சொல்லமுடியுமா? முன்னை வினைப்பயன் என்று முக்காலமும் உணர்ந்த ஞானிகளைப்போல, எந்த முட்டாளும் சொல்லிவிடலாம். சம்பவத்தின் காரணத்தை ஆராயாமலும் ஆராய மனமில்லாமலும், 'சோம்பலுக்கு ராஜா தோலோடு பழத்தை சாப்பிடுவதைப் போல' கண்டதை உளறலாம்.

'பஞ்சமும் நோயும் கடவுளின் கோபத்துக்கு அடையாளங்கள்' என்று பிதற்றும் மனிதர்கள் இல்லையா? பஞ்சம் இந்தியாவுக்கு சகஜமானது என்று அலக்ஷியமாக உளறும் இந்தியா மந்திரி அமெரிப்பெரியார் இல்லையா? இவர்களைப்போலவே, கோவலனுடைய செயலுக்கு சமாதானம் சொல்லிவிடலாம். ஆனால், அது உண்மையைக் காணும் முயற்சி ஆகாது. அது எப்படிப் போனாலும் போகட்டும்.

தாசி மனோகரத்தின் இல்லத்துக்குப் போகிறவர்களின் எண்ணிக்கை அதிகம்; அவர்களின் மூலமாக, மாதம் ஆயிரக்கணக்கில், அவளுக்கு வருமானம் கிடைக்கிறது. இவை இரண்டும் மறுக்கமுடியாத உண்மைகள்.

தாசி மனோகரம், தனி பங்களா கட்டிக்கொண்டு வாழவில்லை. குடித்தனக்காரர்கள் குடியிருக்கும் வீதியிலே தான் வாழ்கிறாள். ஆனால் அவள் வீடு இரண்டு மெத்தை வீடு. வீட்டின் நீளமும் அகலமும் ஜாஸ்தி. எனவே, வீடு விஸ்தாரமானது. முன்கட்டிலிருந்து கூப்பிட்டால், பின்கட்டில் காது கேட்காது என்று அங்கே போய் வந்தவர்கள் சொல்லுகிறார்கள். சின்ன மைனர் கமலநாதன் சொல்லுவதைக் கேளுங்கள்.

"முதன் முதலில் நான் மனோகரத்தின் வீட்டுக்குப் போனதும், அவள் என்னை மரியாதையோடு வரவேற்றாள். தாம்பூலம் கொடுத்தாள், வாசனை புகையிலை சகிதமாக. அவள் குரலே, கானத்துக்காக ஏற்பட்டதுபோலத் தோன்றிற்று. குரலில் பிரமிக்கத்தக்க காந்தம் இருந்தது. பேச்சிலோ நயமும் நகைச்சுவையும் குடிகொண்டிருந்தன. சிரிக்கத் தெரியாதவர்களுக்குக் கற்றுகொடுப்பதைப் போல அவள் சிரித்தாள். அழகான குரலை வைத்துக் கொண்டு, அவள் ஏன் வீணை வாசிக்கவேண்டும் என்று கேட்டேன்.

'வாய்ப்பாட்டு எளிது; வீணை வாசிப்பது ரொம்பக் கடினம். மேலும் வாய்ப்பாட்டுக்கு சமமாகவும் அதற்கு மேலாகவும் வீணை கானத்தைச் சொல்லலாம். வீணை ஸரஸ்வதிக்கு உகந்த வாத்தியம் அல்லவா? ஸரஸ்வதியை, ஏன் வாய்ப்பாட்டு அப்பியாசம் செய்யவில்லை என்று நீங்கள் கேட்பீர்களா?' இவ்வாறு அவள் கம்பீரமான குரலில் பதில் சொன்னாள். 'ஸரஸ்வதியை இப்பொழுது தான் நேரில் காணமுடிந்ததால், நான் கேட்டேன்' என்று சொன்னேன். இந்தப் பதிலைக் கேட்டு, அவள் ரசித்து, சிரிப்பாள் என்று எண்ணினேன். ஆனால் ஏமாந்து போனேன்.

அவள் கோபத்தோடு சொன்னாள் :—' நீங்கள் எல்லாரும் மகா மாயாவிகள். இங்கே வந்தால் ஸரஸ்வதி

என்றும் இசைவாணி என்றும் நிதானமில்லாமல் புகழ்கிறது! எங்கள் இலாகாவை விட்டு, உங்கள் கோட்டைக்குள் போய்விட்டால், தேவடியாச் சிறுக்கி என்று வரம்பில்லாமல் நாக்கில் நரம்பில்லாமல் ஏசுகிறது! உங்கள் பேச்சுக்கு ஏதேனும் வரன்முறை யுண்டா?'

நான் அயர்ந்து போனேன். மேலும் அவள் சொன்னாள் :—' எங்கள் வீட்டு அசடை, அந்த தேவடியா முண்டை கெடுத்துவிட்டாள் என்று அந்த அசட்டின் மனைவி, எங்கள் பேரில் அபாண்டமான பழியைப் போடுகிறாள். நாங்களா, உங்கள் வீட்டுக்கு வந்து, உங்களை தாம்பூலம் வைத்து அழைத்தது? நீங்கள் தானே, எங்கள் வீடு தேடி வருகிறீர்கள்? உங்கள் மதியீனத்துக்கும் பலவீனத்துக்கும் சேர்த்து நாங்கள் பழியை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. என்ன அநியாயம்!

இவ்வாறு மனோகரம் பேசிக்கொண்டு போகையில், எனக்கு சந்தோஷமும் துக்கமும் சேர்ந்து வந்தன. அவள் சொன்னதெல்லாம் சரிதான். ஆனால் அவள் சொன்ன உண்மையை விழுங்குவது கசப்பாக இருந்தது. மேலும் அவள் சொன்னாள்: 'பொதுக் குடும்ப வாழ்க்கையில், புருஷன் தன் சம்சாரத்தோடு பேசுவதற்கே வசதிகள் கிடையாது. அப்படியிருக்க, இல்வாழ்க்கையின் இன்பங்களை அவன் எப்படி அனுபவிக்க முடியும்? சமைத்து சாப்பிடுவதுதானா இல்வாழ்க்கை? நன்றாக உடுத்து, நகைகளால் உடலை அலங்காரம் செய்துகொள்ளுவதுதானா இல்வாழ்க்கை?

அவள் பேசிக்கொண்டு போகையில், அது வெள்ளப்பிரவாகம் போல இருந்தது. ஏது, நீண்ட பிரசங்கம் செய்கிறாயே என்று கேட்டேன். 'கலைகளில் ரொம்ப பற்று இருப்பதாக, இப்பொழுது, நீங்கள் எல்லோரும் பிரமாதமாகப் பேசிக்கொள்ளுகிறீர்கள். ஆனால் அபிநயம் பிடித்து நர்த்தனம் செய்வது குடித்தனக்காரர்களுக்கு

இழிவு என்று ஒதுக்கித் தள்ளிவிட்டீர்கள். தாசிகள் அந்தக் கலையை போற்றி வளர்க்காவிட்டால், அது செத்து மடிந்துபோயிருக்கும். இப்பொழுது, குடித்தனக்காரர்களில் சிலர் ‘தம் திம்’ என்று குதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்’ என்று மனோகரம் ஒரு போடு போட்டாள்.

அவள் சொன்னதில் நூற்றுக்கு நூறு உண்மை இருக்கிறது என்பதை உணர்ந்து, வாயை மூடிக்கொண்டிருந்தேன். என் மௌனத்தை அவள் பூரணமாக உபயோகப் படுத்திக்கொண்டாள். அவள் சொன்னாள்:— ‘உங்கள் வீட்டுக்குள்ளே இப்பொழுது நுழைந்திருக்கிற நாகரிகம் எங்கள் நாகரிகம். எங்களைப்பார்த்து, குடித்தனப் பெண்டுகள், அநேக வழிகளில் பழக்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாதிரி செய்யத் துவக்கியிருக்கிறார்கள்’.

மனோகரம் இவ்வாறு சொன்னதைக் கேட்டு, எனக்கு ஆத்திரம் பொங்கிவழிந்தது. நான் சொன்னேன்:—‘மனோகரம்! நீ சொன்னதை இதுவரையில் ஆக்ஷேபிக்காமல் கேட்டுக்கொண்டிருந்ததற்காக, கண்டதையெல்லாம் நீ உளற ஆரம்பித்துவிட்டாயா? உங்கள் மாதிரி குடித்தனப்பெண்டுகள் செய்யத் துவக்கிவிட்டார்களா? உங்கள் தொழிலை அவர்கள் செய்கிறார்கள் என்று சொல்லத் துணிந்து விட்டாயா’.

இதற்குள் மனோகரம் என்னை இடைமறித்தாள். அவள் சொன்னாள்:—‘மன்னியுங்கள். நீங்கள் தவறாக அர்த்தம் செய்து கொண்டு விட்டீர்கள். குடித்தனப் பெண்டுகள் எங்கள் தொழிலை மேற்கொண்டு விட்டார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. சொல்ல நினைக்கவும் இல்லை. புருஷர்களை நேர்த்தியாகவும் சூக்ஷமமாகவும் திருப்தி செய்யவேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்து, அதற்கான சாதனங்களை, இப்பொழுது கைக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன், பவுடர் பூசிக்கொண்டு,

மேனி மினுக்குகிறாள் தேவடியாள் என்று எங்களை கேவலமாகப் பேசினார்கள். இப்பொழுதோ, குடித்தன ஸ்திரீகளே—'

மனோகரம் குறிப்பிட வந்தது என்னைத் தூக்கி வாரிப்போட்டது. நீ சொன்னதை நான் தவறாக அர்த்தம் செய்து கொண்டேன் என்று நீ சொல்லுவது உண்மைதான் என்று அவளிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டேன். சொச்சத்தையும் கேளுங்கள் என்று மனோகரம் சொன்னதாவது :—'எங்களைப் பார்த்து, குடித்தனப் பெண்டுகள் பவுடர் பூசிக் கொள்ளுகிறார்கள். முடியை, கோணல் வகிடு வகிந்து கொள்ளுகிறார்கள். 'எஸ்' கட்டு கட்டிக் கொள்ளுகிறார்கள். எங்களைப் போலவே உடுக்கிறார்கள். நகைகளை அணிந்து, மேனியை அலங்காரம் செய்து கொள்ளுகிறார்கள்—'

"மனோகரம் சொல்லுவதைக் கேட்கக்கேட்க, நான் பிரமை தட்டிப் போனேன். இவ்வளவுதானா, அல்லது பாக்கி ஏதாவது இருக்கிறதா என்று கேட்டேன். அவள் சொன்னாள், 'நீங்கள் தான் அடிக்கொரு தரம் என்னை பேசவிடாமல், 'பிரேக்' போடுகிறீர்களே! நான் சொல்லுகிறதை முழுதும் கேட்டுக்கொண்டிருந்து, பிறகு இவ்வளவு தானா என்று கேட்கப்படாதா?'' என்று.

"என் தப்பிதத்தை உணர்ந்தேன். முடிந்துவிட்டது என்று நீ சொல்லும் வரையில், நான் வாய் திறக்கவில்லை. நீ இப்பொழுது சொல்லப் போவதைக் கேட்க ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறேன்'' என்றேன்.

அவள் சொன்னதாவது :—' எங்களைப் பார்த்து, அவர்கள் சங்கீதம் கற்றுக்கொள்ளுகிறார்கள். நடனம் பயிலுகிறார்கள். தங்கள் புருஷர்களுக்கு இன்பம் வரும் வகையில் அவர்கள் இப்பொழுது இங்கிதம் அறிந்து பேசுகிறார்கள். சந்தர்ப்பங்களில் புருஷனுடைய முகத்திலே

நாசூக்காக இடித்து, அழகாக அவரைப் பார்த்து, கவர்ச்சி பொருந்திய சிரிப்புச் சிரித்து, அவர்கள் கணவன் மார்களை மகிழ்விக்கின்றார்கள். இவைகள் எல்லாம் அவர்கள் எங்கள் மூலமாகக் கற்றுக்கொண்டு பழகிவரும் வித்தைகள் !

"மனோகரம் சொன்னது அப்படியே உண்மை. அதற்காக என்ன செய்கிறது? மனோகரம் ஒரு அழகான வேலை செய்து வருகிறாள். வீணை வாசித்து போகிறவர்களின் மனதை நல்வழியில் திருப்பிவிடுகிறாள்."

இவ்வாறு மைனர் கமலநாதன் சொல்லி முடித்தார்.

14. நாவலூர் நாகராஜன்

கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையைப்போல என்று வக்கணையாகப் பேசுவதை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன விசித்திரத்தை நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள். நானும் பார்த்ததில்லை. ஆனல், நாவலூர் நாகராஜன் வரலாறு மேலே சொன்ன விசித்திரத்தைப்போல இருக்குமோ என்று நான் சந்தேகப்படுகிறேன். என் சந்தேகம் சரிதானு என்று சொல்லுங்கள்.

நாகராஜன் 'பார்ப்பார் அகத்தில்' ஜனனம் எடுத் தான். பத்தோடு பதினென்று அத்தோடு அதுவொன்று என்று சொல்லும்படியாக அவன் ஜனனம் எடுக்கவில்லை. 'முந்தித் தவம் கிடந்து முந்நூறுநாள் சுமந்து, அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்து'வந்தபின், பிறந்தவன் நாக ராஜன். கோழியைக் காட்டி, கொக்கைக் காட்டி அவன் பாட்டியால் அவனுக்கு சாதம் ஊட்ட முடியவில்லை. ஒரே ஒரு ஊரிலே, ஒரு ராஜா என்று ராஜாக்கதை சொன்னல் தான் அவன் தொண்டை ஆகாரத்தை உட்கொள்ளும்.

நாகராஜன் தன் பெயருக்குப் பொருத்தமாக, எப் பொழுதும் ராஜாக் கதை வேண்டுமென்கிறுன் என்று பாட்டி, ஊரிலே பெருமையாகப் பேசிக்கொண்டு வந்தாள். ராஜாக் கதை நாகராஜன் ராஜா குடுமி ஆகாமல் இருக்க வேண்டுமே என்று ஊரில், அனுதாபத்தோடு பேசிக் கொண்டார்கள்.

சோற்றுக்குப் பசை இருந்த குடும்பத்தில் தோன் றிய நாகராஜனுக்கு படிப்பில் அவ்வளவாகக் கவனம் செல்லவில்லை. பள்ளிக்கூடத்தில் பையன்களைச் சேர்த்துக் கொண்டு கலாட்டா செய்வதும் வாத்திமார்களை இடக்கா கப் பேசுவதும்தான், அவன் பள்ளியில் பயின்ற வித்தை

கள். எழுகடல் என்று தமிழ்ப் பண்டிதர் சொன்னால், அதற்கு அப்பால் என்று கேட்பதைப்போல, நாகராஜன் முணுமுணுப்பான். 'அஞ்சு காசு கையில்இருந்தால், அகத்துக்கு ஒன்றும் குறைவு இருக்காது' என்று பாடம் சொல்லுவதைப்போல, பண்டிதர் இடைச்செருகலாகச் சொல்லுவார். காசில்லாத பண்டிதர்களும் அப்படித்தான் என்று நாகராஜன் வாய்க்குள்ளாகவே சொல்லுவான்.

புராணிகர்கள் சொல்லுவதுபோல, இப்படிவளர்ந்தான் நாகராஜன். வகுப்புப் பரீட்சையில் தேறவேண்டிய தேவையே, நாகராஜனுக்கு இருந்ததில்லை. கிரமப்படிக்கு, வகுப்பு மாறிக்கொண்டு வந்தான். 'ஆனால், பணம் கட்டி எழுதுகிற பரீட்சையில், உன்னைக் கண்டிப்பாக பிளக்கு பண்ணிவிடுவார்கள்'. என்று சாபம் கொடுப்பதைப்போல, தினமும் சொல்லிவந்த தமிழ்ப் பண்டிதரின் சொற்கள் அப்படியே சத்தியமாகிவிட்டன. நாகராஜன் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் வெற்றிபெறமுடியவில்லை.

தனது பையன் பரீட்சையில் தேறவில்லை என்ற காரணத்தால், மனம் உடைந்துபோனாரோ, என்னமோ, நாகராஜனுடைய தகப்பனார் சிவலோகப்ராப்தி அடைந்தார். ஊரிலே, அக்குட்டு ராஜா என்ற வடிக்கட்டின மக்கு சொன்னதுபோல, அதற்குப் பிறகு, நாகராஜன் 'வச்சது தான் சட்டம்'. தனக்கு மற்றவர்களைக்காட்டிலும் அதிகமாகச் சொத்து இருக்கிறது என்பதை நாகராஜன்,சின்ன காரியத்திலும் சரி, பெரிய காரியத்திலும் சரி, மறந்ததேயில்லை. கிராமத்திலே மோட்டார் எதற்கு என்று ஆரம்பத்தில் அவன் குதிரை வண்டியுடன் நின்றுகொண்டான். பள்ளியில் பழகின சேஷ்டைகளை அவன் மறக்கவில்லை.

வாத்திமார்களை இடக்காக பேசின நாக்கு சும்மா இருக்குமா? உத்தியோகஸ்தர்களையும் நாகராஜன் உதாசீனமாகப் பேசத் துவக்கினான். கூட்டம் நெரிசலாக இருக்கும் பஜாரில் தன் குதிரை வண்டியை நிறுத்துவான்.

போலீஸ்காரன் வந்து கேட்டால், "என்ன ஐயா! என் வண்டி நிற்கிறது உங்களுக்கு தோளிலே வலிக்கிறதா? ஏதோ வண்டியைத் தோளிலே சுமந்துகொண்டு நிற்கிறாப் பலே, பேசறயே" என்று பிரசங்கம் செய்வான். வருஷ மாமூலை நினைத்துக்கொண்டு, போலீஸ்காரன் வாயை மூடிக்கொண்டு போவான்.

இதேமாதிரி பெரிய உத்தியோகஸ்தவர்களிடம் பழக முடியுமா? விகடம் என்று நினைத்து நாகராஜன் வாய்த் துடுக்காகப் பேசினபொழுது, ஒரு உத்தியோகஸ்தருக்கு கோபம் பொங்கி வழிந்தது. அவர் நாகராஜனைக் கன்னா பின்னா என்று பேசிவிட்டார். நாகராஜன் சும்மா இருக்கிறவனா? அப்பொழுது பொறுத்துக்கொண்டான். மறு நாள், 'உண்மை விளம்பி' என்ற பத்திரிகைக்கு, 'ஸ்தல அதிகாரி சிறு கடவுளா' என்ற மகுடமிட்டு கட்டுரை ஒன்று அனுப்பினான்.

"இந்தக் கட்டுரை பிரசுரமாகும் 'உண்மை விளம்பி' யின் இதழின், நூறு பிரதிகளுக்கு இத்துடன் பணம் அனுப்பியிருக்கிறேன். அவசரம் எதுவுமில்லை; தங்கள் சௌகரியம்போல இதைப் பிரசுரிக்கலாம்" என்று நாக ராஜன் எழுதியனுப்பினதோடு, பிரஸ்தாப உத்தியோகஸ் தருக்கு ஒரு பிரதி அனுப்பும்படியாகவும் குறிப்பிட்டிருந் தான். நூறு பிரதி செலவழியும்பொழுது, உண்மை விளம்பியின் ஆசிரியர், அதை உடனே பிரசுரிக்காமல் இருப்பாரா? இந்தக் கட்டுரை பிரசுரமானதும் அதை உத்தியோகஸ்தர் படித்ததும், ஸ்தலத்தில் ஏகப்பட்ட பர பரப்பு உண்டாயிற்று. உத்தியோகஸ்தருக்கு ஆத்திரம். "நானா இவனை விடுகிற பேர்வழி? இவனை 'புக்' பண்ணி விட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று உத்தியோகஸ் தர் உறுமினார். சில தினங்களுக்குப் பிறகு, பொதுக் கூட்டம் ஒன்றில், நாகராஜன் தலைமை வகித்தார். இனி மேல், நாகராஜனை மரியாதையாகத்தானே பேசவேண்

டும்? அந்தக் கூட்டத்தில் நாகராஜன், 'ஸ்தல அதிகாரி சிறு கடவுளா' என்ற கட்டுரையைப் படித்துக் காண்பித்து, உண்மை விளம்பியின் தைரியத்தையும் கட்டுரை எழுதியவரின் தேச பக்தியையும் புகழ்ந்து பேசினர்.

அன்று முதல் நாகராஜன் தேச பக்தன் ஆனர். எந்தக் கூட்டத்திலும் அவர்தான் தலைமை வகிப்பார். ரோஜாப்பூ மாலை இல்லாத கூட்டம் இருக்காது. மாலை, விளக்கு, துண்டுப் பிரசுரம், தொண்டர்களுக்கு காபி சப்ளை எல்லாம், நாகராஜனுடைய செலவு என்று சொல்ல வேண்டுமா? பரமசிவனர் பூத கணங்களுக்கு மத்தியில் இருப்பார் என்று சொல்லுவதுண்டு. அது என்னமோ, நாகராஜன் 'லோட்டா'க்களான பக்த கணங்கள் புடை சூழ இருப்பார்.

சரியான சந்தர்ப்பத்துக்குக் காத்துக்கொண்டிருந்த உத்தியோகஸ்தர், நாகராஜனை ஒரு பெண் பிள்ளை கேஸில் மாட்டிவிட்டார். தன்னைப் பலவந்தப் படுத்தியதாக, அந்த ஸ்திரீ நாகராஜன் பேரில் கேஸ் போட்டாள். அப் பாவி நாகராஜன் அவளைப் பார்த்ததே இல்லை. வாய்த் துடுக்கு நாகராஜனுக்கு, வேறு எதிலும் துடுக்கு இருந்ததேயில்லை. இந்தக் கேஸிலிருந்து தப்பித்துக்கொண்டு, அவன் வெளியே வருவதற்குள், நாகராஜனுக்கு, பத்தாயிரம் ரூபாய் 'குளோஸ்'.

'இவனைப்போல, நூறு அதிகாரி கைவரிசையைக் காண்பித்தாலும் நாகராஜனை அசைக்க முடியாது' என்று நாகராஜன் படாடோபமாகப் பேசுவான். ஸ்தல உத்தியோகஸ்தர் வேறு ஊருக்கு மாற்றப்பட்டு, அவர் போய்ச் சேர்ந்தார். இனி, தான் தானிக்காட்டு ராஜா என்று நாகராஜன் எண்ணினன். ஆனல், உத்தியோகஸ்தர் போகுமுன், புதிதாக வந்த இரண்டொரு உத்தியோகஸ்தர்களிடம், 'நாகராஜன் பயந்தாங்கொள்ளி; அவனை நன்ருகக் கறந்துவிடலாம்' என்று ஜாடையாகக் காதைக்

கடித்து விட்டுப் போனார். உதைக்கிற மாட்டையே காலை அணைந்து கறப்பது உலக வழக்கம். கறக்கிற மாட்டை சும்மா விட்டுவிடுவார்களா?

புதிய உத்தியோகஸ்தர்கள் வந்ததும் வராததுமாகவே, நாகராஜன் பேரில் பாய்ந்தார்கள். பத்திரிகைகளில் எழுதி, அதிகாரிகளைப் பயமுறுத்தப் பார்க்கும் யுக்தி பயன்படாது என்று தெரிந்துகொண்ட நாகராஜன் பையைத் தளர்த்த ஆரம்பித்தான். சட்டியில் இருக்கிற வரையில்தான் அகப்பையில் வரும். பையைத் தளர்த்தி, பரிகாரம் தேடுவதிலும் பயன் இல்லை என்பது பை காலியாய்ப் போன பிறகு, நாகராஜன் தெரிந்துகொண்டான். வாழ்க்கையின் சோட்டை மாற்ற எண்ணினான்.

ஊருக்கு, கீதா வியாக்கியான நிபுணர் ஒருவர் வந்தார். கீதையைப்பற்றி, அவர் தொடர்ந்து ஒரு வாரம் உபந்நியாசம் செய்தார். அவர் கடைசியாக, கீதையை சாரமாகப் பிழிந்து சொன்னதாவது:—' வாழ்க்கையில் சண்டை என்ற எதிர்ப்பு கூடாது. ஒருக்கால், அது பரவாயில்லை என்று சொன்னாலும் அதைக்காட்டிலும் கர்மயோகம் உயர்ந்தது. அதாவது அன்னதானம், வஸ்திரதானம், சொர்ணதானம் முதலிய தானங்களைச் செய்து புண்ணியத்தை சம்பாதிப்பதுதான் கர்மயோகம்.

“கர்மயோகத்தைக் காட்டிலும் ஞானயோகம் உயர்ந்தது. குடும்பஸ்தர்களுக்கு, ஞானயோகம் கட்டி வராது. சன்னியாச ஆசிரமம் தான் ஞானயார்க்கத்துக்கு உகந்தது. ஆனால், எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தது சரணாகதி. இதைபாலர், விருத்தர், ஸ்திரீ, சன்னியாசி, கிருகஸ்தன் முதலியவர்களும் செய்யலாம். சரணாகதியே, சாலச்சிறந்த மார்க்கம். இதைத்தான், கீதையில், கண்ணன் திருவாய் மலர்ந்திருக்கிறார்.”

இவ்வாறு, கீதாநிபுணர் தமது உபந்நியாசத்தை முடித்தார். அவர் முடித்ததுதான் தாமதம். நாகராஜன்,

தனது உத்தரீயத்தை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, 'எனக்கு கண்திறந்து விட்ட மகானுபாவா' என்று சொல்லிக்கொண்டே அவரை நமஸ்காரம் செய்தான். சம்பாவனையாக, தாம்பூலத் தட்டில் ரூ. 50 வைத்து, அவருக்குக் கொடுத்தான். தன் வாழ்க்கையின் சோட்டை மாற்றிக் கொண்டான்.

அன்றுமுதல் அவன் சொல்லிக்கொண்டு வந்ததாவது :—'கீதை அற்புதமான, உபதேச நூல். நான் அறியாமலே, அதன் உபதேசப்படி நடந்து வந்திருக்கிறேன். அகம் பிடித்த அதிகாரிகளோடு சண்டை போட்டேன். என்னைச் சுற்றியிருந்த பரிஜனங்களுக்கு என்னாலியன்ற அளவு பொருள் உதவி செய்து கர்ம யோகம் செய்தேன். அந்த அயோக்ய ஸ்திரீயின் அக்கிரமமான அவதூறுக்குப் பின், ஞானோதயம் ஏற்பட்டது. அதற்கு அடுத்தபடி என்ன என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இந்த மகானுபவர் சரணாகதி வழியைக் கண்ணில் காண்பித்துவிட்டார். இனி என் ஜென்மத்தை வீணாக்கமாட்டேன்."

இதை நாகராஜன் நடவடிக்கையில் எவ்வாறு காண்பித்தான்? சர்க்கார் உத்தியோகஸ்தர் என்றால் சலாம் தான். அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் எந்த டீ, சங்கீதக் கச்சேரியிலும், நாகராஜன் இல்லாமல் இருக்க மாட்டான். தினசரி ஒரு தடவையாவது உத்தியோகஸ்தர்களைச் சுற்றி, நாகராஜன் ஒரு 'ரவுண்டு' வராமல் இருக்கமாட்டான். 'நாகராஜன் என்ன பதவிசாய்ப் போய்விட்டான்' என்று ஊரில் எல்லாரும் சொல்லிக் கொண்டார்கள்.

கழுதை கட்டெறும்பு ஆயிற்றா அல்லது கட்டெறும்பு கழுதையாயிற்றா? அல்லது எதுவும் வேறொன்றாக ஆகவில்லையா? தயை செய்து, உங்கள் முடிவைச் சொல்லுவீர்களா?

---

15. எம். சுண்டர்

நீங்கள், நிச்சயமாக எம். சுண்டரை பார்த்திருப்பீர்கள். சிறிது ஞாபகமூட்டினுல் போதும், உங்களுக்கு நினைவு வந்துவிடும். 'ஏதோ கேள்விப்பட்ட பெயர் மாதிரி இருக்கிறது; ஆனுல், வெள்ளைக்காரன் பெயர். ஏன்! ஸார்! மிஸ்டர் சுண்டர், ஏதாவது ஒரு மாகாண கவர்னருக்கு ஆலோசனையாளரோ? ராணுவ அதிகாரியாக இருக்கமுடியாது. என்ன ஸார்! திகைப்பிலே விட்டுக்கொண்டிருக்கிறீர்களே' என்று ஏன், அவசர அவசரமாக கேட்க வருகிறீர்கள்?

நான் உங்களை பதிலுக்கு ஒரு கேள்வி கேட்கிறேன். தினசரி நமது கண்முன்னே நடமாடிக் கொண்டிருக்கும் நபர்களையும், பிரச்னைகளையும் மறந்து போய், ஆகாசப் பந்தல் போடும் கவர்னரின் ஆலோசனையாளரின் பதவிக்கு, நீங்கள் வந்துவிட்டீர்களா? சுண்டரை, நீங்கள் மறந்துவிடுகிறது என்ருல், கண்டிப்பாக அந்த உத்தியோகம் உங்களுக்குக் கிடைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், இப்பேர்ப்பட்ட சகிக்கமுடியாத மறதியும் அலக்ஷியமும் உங்களுக்கு ஒருநாளும் வந்திருக்கமுடியாது.

"ஆகா! நீங்கள் சொல்லுவது மாதிரி. கண்மூடி ராஜ்யத்திலே எங்களுக்கு எதற்கு பதவியும் அந்தஸ்தும்? இருந்தாலும், இந்த சுண்டர் யார் என்று உங்களுக்கு எடுத்தவுடனேயே தெரிந்து போய் விட்டதா" என்று நீங்கள் என்னைக் கேட்டால், நான் தும்மட்டிக்காய் பட்டரை'ப்போல அகப்பட்டுக் கொண்டு விடுவேன்.

நடந்ததைச் சொல்லுகிறேன், கேளுங்கள். ரொம்ப அவசர வேலை. அதற்கு 'டாக்ஸி' இருந்தால் நல்லது என்று தோன்றிற்று. வாடகை மோட்டாரைத் தேடிக் கொண்டு, மவுண்டு ரோடு, பஸாட்டோ பக்கம் போனேன்.

ஒரு 'டாக்ஸி' ஜோராயிருந்தது. குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டும் என்று பெரியவர்கள் சொல்லுகிறார்களே, அதைப் போல டாக்ஸியில் போனாலும் நாசூக்கான டாக்ஸியில் ஏற வேண்டும் என்ற தீர்மானத்தோடு, அந்த வண்டியின் பக்கம் போனேன்.

'அடையாறு போய்வரவேண்டும்; என்ன அப்பா கேட்கிறாய்' என்று அந்த டாக்ஸியின்ட்ரைவரைப் பார்த்துக் கேட்டேன். வண்டியைப்போலவே, ட்ரைவரும் வெகு நாசுக்கான பேர்வழி. அசல் சட்டைக்காரனைப் போல இருந்தான். அவன் இங்கிலீஷில் பதில்சொன்னான். அதுவும் சட்டைக்காரன் இங்கிலீஷில் பதில் சொன்னான். சட்டைக்காரனிடமாவது, பேரம் படியவாவது என்று நினைத்து அப்பால் சென்றேன்.

'மாமா! என்ன அவசரமாய் போரகளே', என்ற குரல் கேட்டது. அந்தக் குரல். எனக்காகத்தான் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். திரும்பிப் பார்த்தேன். ஆனால், அவ்வாறு கூப்பிடக்கூடிய லாயக்குள்ளவர்கள், அங்கே யாரும் இல்லை என்று எண்ணினேன். ஏன் என்று கேட்கிறீர்களோ ?

'இந்த மாதிரி கூப்பிட்டுச் சொல்வது பிராமணர்களுக் குள்ளேதான் வழக்கம். அங்கே டாக்ஸி ட்ரைவர்களுக்குள் யாரும் பிராமணன் இல்லை என்பது என் முடிவு. சட்டைக்காரனைப் போல இருந்த பேர்வழிதான் இப்படிக் கூப்பிட்டானா என்று சந்தேகப்பட்டு, 'ஏன், அப்பா! நீயா, என்னைக் கூப்பிட்டாய்' என்று கேட்டேன். சந்தேகமில்லாத வகையில், 'நான்தான்; என்னை அடையாளம் தெரியவில்லையா' என்று கேட்டான்.

நான் திகைத்துப் போனேன். ஹிட்லர் மீசை, அமெரிக்கன் கிராப்பு, வெள்ளைக்காரன் உடை, சட்டைக்காரனைப்போல, உடைந்த இங்கிலீஷ், வெள்ளைக்காரனுக்கும் நம்மவர்களுக்கும் இல்லாத நிறம்—இத்தனை

லக்ஷணங்களோடு 'விளங்காநிற்கும்' இவனு, தமிழில் இப்படி என்னைக் கேட்டான் என்று நினைத்து தலையைச் சொரிந்து கொண்டு மௌனமாய் நின்றேன்.

அவன் மறுபடியும் பேச ஆரம்பித்தான். 'உங்களால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. நீங்கள் என்னை சிறு பிள்ளையில் பார்த்திருக்கிறீர்கள், நான்'—என்று அவன் விவரம் சொல்லுமுன், என் அப்பா! நீ மலட்டூர் தாசரதி சாஸ்திரிகளின் பேரன், கிட்டு இல்லே' என்று கேட்டேன். 'அவனே அவன்' என்றான். 'அப்படியானல், இந்த சாஸ்திரிகளாத்துக்கு இருக்கமுடியாத, வேஷமெல்லாம் எப்படி வந்தது' என்று கேட்டேன்.

பதில் சொல்ல, ஒரு நிமிஷங்கூட, அவன் தாமதிக்க வில்லே. 'காலசக்கரம்' என்றான். எனக்கு அது விடுகதையாக இருந்தது. கிட்டு என்று அவனை அழைத்து உறவு கொண்டாடிக்கொண்டு, 'அப்பா! விடுகதையைப் போல், பதில் சொல்லுகிறாயே? சற்று விளக்கமாக சொல்லு' என்று அவனை நான் கேட்டேன்.

கிட்டு சொல்லுகிறான் :—'எனக்கு இப்பொழுது வயது முப்பது, என்னை நீங்கள் பதினைந்தாவது வயதில் தான் பார்த்தீர்கள், எங்கள் தாத்தாவைத்தான். உங்களுக்கு நன்றாகத் தெரியுமே........''

''நன்னாச் சொன்னே! மலட்டூர் தாசரதி சாஸ்திரிகளை யாருக்குத்தான் தெரியாது? காந்தி எவ்வளவு சுவானுபூதியாக இருந்தாலும், குரு சிஷ்ய பாரம்பரியத்துக்குக் கட்டுப்படாத அவரது வித்தையை, சாஸ்திரத்தில் நம்பிக்கைகொண்ட ஆஸ்திகர்களால் ஒப்புக்கொள்ள முடியாது என்று மகாத்மாவினிடமே, உங்கள் தாத்தா, நேருக்கு நேராக சொல்லிவிடவில்லேயா? அவரை என்னமாய் மறக்கமுடியும்'' என்றேன்.

கிட்டு தலையை அசைத்துக்கொண்டு மறுபடியும் சொன்னதாவது:—'' மாமா, வாதத்துக்கு எதிர்வாதம்

செய்யமுடியும்? சாதுர்யமாயும் கெட்டிக்காரத்தன மாயும் எதிரியின் வாய் மூடும்படியாகப் பேசமுடியும். பசிக்கு ஆகாரம் தேடுவதும் ஆகாரம் கிடைக்காவிட்டால், புன்சிரிப்போடு பட்டினி கிடப்பதும் கஷ்டமான வேலைகள். ஆத்ம விசாரம் செய்துகொண்டிருந்ததாக, பிரக்கியாதி அடைந்த எங்கள் தாத்தாவும் (கிளிப்தமாக) இரண்டு வேளை சாப்பிட்டுக்கொண்டுதான் வந்தார். வேளை தவறுவதுமில்லை; குறிப்பிட்ட நேரம் தவறுவது மில்லை........"

"நீ வேஷம் மாறியிருக்கிற கதைக்கும் நீ சொல்லி வருகிற தத்துவத்துக்கும் என்ன சம்பந்தம்" என்று சிறு குரலில் கேட்டேன். உயிருள்ள சம்பந்தம் உண்டு என்று எனக்குத் தெரியும். கால சக்கரம் என்று அவன் பதில் சொன்னானே, அது இன்னதென்று எனக்கு இப்பொழுது தெளிவாகத் தெரிந்தது. இருந்தாலும், அவன் வாய்மொழியாக, எல்லாம் வரட்டுமே என்று அவனை அவ்வாறு கேட்டேன்.

கிட்டு, ஆத்திரப்படவில்லை. அவன் பதட்டமில்லாமல் சொன்னான் :—'சம்பந்தம் என்னவென்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் என்ன சொல்லுகிறேன் என்று என் வாயைக் கிண்டுகிறீர்கள். நீங்கள் பதினைந்து வருஷத்துக்குமுந்தி, எங்கள் தாத்தாவோடு, எதிர்க்கக்ஷி ஆடினது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. ஒரு வேளைச் சோற்றுக்கு வழி இல்லாதவர்கள், காலணா சம்பாதிக்க வகையறியாதவர்கள், ஒருவன் ஒரு அடி அடித்தால், அதை வட்டி முதலோடு திருப்பிக்கொடுக்க தைரியம் இல்லாதவர்கள், திக்கற்றவர்களைத் தீண்டாதவர்கள் என்று சொல்லும் வீணர்கள்—இவர்கள் எல்லோரும் இந்த தேசத்தில் பக்குவமடைந்த, ஆத்ம சொரூபம் தெரிந்த வேதாந்திகளாக மதிக்கப்படுகிறார்களே, என்ன அநியாயம் என்று மனவேதனையோடு, நீங்கள் அன்

றைக்குச் சொன்னீர்களே, அதுதான் இந்த வேஷத்துக்குக் காரணம்.

கிட்டு, என்னை நிந்தாஸ்துதி செய்து, அவனுடைய மாறுதலுக்கு என்னைக் குற்றவாளியாகப் பார்க்கும் வேலை விசித்திரமாக இருந்தது. நான் சிரித்தேன்.

கிட்டு சொன்னான்:—"நீங்கள்தான் சாக்ஷாத் காரணம். உங்கள் நகைச் சிரிப்பு 'டூலேட்' (காலத்துக்கு ரொம்பவும் பிற்பாடாக வருவது.) எங்கள் தாத்தா, தத்துவம் சொல்லிக் கொடுத்தார். நீங்கள் ஜீவனோபாயத்துக்குத் தைரியம் கொடுத்தீர்கள். அதனாலேதான் இன்றைக்கு உங்களைக் கண்டதும், நான் விரதபங்கம் செய்து தமிழில் பேசினேன். என் விரதம் பூர்த்தியாவதற்கு இன்னும் ஆறுமாத காலம் பாக்கியிருக்கிறது......."

கிட்டு சொன்னது எனக்கு அளவில்லாத சந்தோஷத்தைக் கொடுத்தது. 'கிட்டு! உன் கதையைச் சொல்லு. அவசர காரியமாக அடையாறு போக வந்தேன். என் அவசரத்தைக் காட்டிலும் உன் கதை உயர்ந்தது. நானும் நீ சொல்லிவந்த ஜீவனோபாய அலுவலாகத்தான் போக இருந்தேன். ஜீவனோபாயக் கதையைக் கேட்பது ரொம்ப சுவாரஸ்யமாய் இருக்கும்" என்று நான் சொன்னேன்.

கிட்டு சிரித்தான். "மாமா! நீங்கள் சாமான்ய மானவரல்ல. அன்றைக்கு எனக்கு பிழைக்கும் வழிக்குப் பாதை காட்டினீர்கள். இன்றைக்கு சிறு கதை எழுத எனக்கு நீங்கள் பழக்கிக் கொடுக்கிறீர்களாக்கும்" என்று சொல்லி மறுபடியும் சிரித்தான்.

கிட்டுவின் ஹாஸ்ய திறமையையும், சாகஸத்தையும் கண்டு, நான் உள்ளப் பூரிப்பு அடைந்தேன். "நீதான், எனக்கு தகுந்த சிஷன்" என்று சொல்லி நானும் சிரித்தேன். உங்கள் தங்க வாயால் அப்படிச் சொல்லுங்கள்.

பாக்கிக் கதையையும் கேட்டுவிடுங்கள்' என்று கிட்டு மீண்டும் அவனது சரிதையை துவக்கினன்.

அவன் சொன்னதை நான் கவனமாகக் கேட்டது போல நீங்களும் கேளுங்கள்.

அவன் சொன்னதாவது:—தாத்தா கரடியாகக் கத்திக்கொண்டிருந்த ஆத்ம விசார வேதாந்தத்தால், அவர் உள்ள வரையிலும் அவருக்கு சாப்பாட்டுக்கும் துணிக்கும் கிடைத்தது. உங்களோடு கக்ஷியாடின சிறிது காலத்துக்குள் அவர் காலமானர். எங்கள் குடும்பம் பட்டபாடு உங்களுக்குத் தெரியாது. நான் எஸ். எஸ். எல். ஸீ. தேறினேன். ஆனல் காலேஜில் சேர்ந்து படிக்க வக்கு இல்லை.

“ தினம் ஒரு ரூபாய் கூலி கிடைக்கும் உத்தியோகம் கூட கிடைக்க வழி இல்லை. ஒரு காலி உத்தியோகத்துக்கு, பீ.ஏ க்களும் எம்.ஏ க்களும் மனுப் பண்ணிக் கொள்ளுகிற பொழுது, எஸ். எஸ். எல். ஸி. (பாஸ் பண்ணின) பிராமணனுக்கு எப்படி உத்தியோகம் கிடைக்கும்? ஆடிக் காற்றிலே, அம்மி படுகிற பாட்டிலே, இலவம் பஞ்சைப்பற்றி என்ன சொல்லுகிறது?

“இந்தக்காலம் சரஸ்வதி பூஜை பண்ணுகிறவர்களுக்கு காலம் அல்ல. ஆயுத பூஜை செய்ய வேண்டும். பஞ்ச கச்ச உச்சிக் குடுமி, பட்டை நாமம், கட்டு விபூதிப் பேர்வழிகள் பெயர் சொல்ல முடியாது. கிராப், மீசை, ‘டிப்டாப் யூனிபாரம்’ இவைகளுக்குத்தான் செல்வாக்கு.

“ அழிகிற குடும்பம் அழிந்துதான் போகும் என்ற அசட்டுத் தலை விதியில் நம்பிக்கை வைத்து யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், வீட்டை விட்டு வெளியேறினேன். சென்னைக்கு வந்தேன். மோட்டார் ‘டிரைவிங்’ கற்றுக்கொண்டேன். மோட்டார் ஒட்டுகிறதற்கு என்று ‘டமிலில்’ சொல்ல வாய்வரமாட்டேன் என்கிறது'' பார்த்தீர்களா? இதுதான் கால சக்கரத்தின் பயன்.

"நம்மளவங்க கிட்ட வேலை பார்த்தால், பிண்டத் துக்கு லாட்டரி அடிக்க வேண்டி வரும். சூரியோதய முதல் சூரியாஸ்தமனமாகி பத்து நாழி வரையில் செக்கு மாடு போல உழைத்தால், தினம் முக்கால்ரூபா கூலியும் நாஸ்தாவுக்கு முக்கால் அணுவும் தான் கிடைக்கும். கல் கத்தா அல்லது டில்லிக்குப் போகணும் என்று ஆசை. மடியிலே கனம் இல்லை. மேலும் எனக்கு, ஹிந்தி தெரியாது.

"இரண்டையும் கொஞ்சம் சம்பாதித்துக் கொண் டேன். டில்லிக்கு நேரே புறப்பட்டேன். உஷாரான ட்ரைவர் தேவை என்று விளம்பரத்தைப் பார்த்தேன். விளம்பரம் செய்தவர் துரை. என்னைப்பார்த்தார். என் னைக் கண்டதும், அவர் என்னை சட்டைக்காரன் என்று எண்ணிக் கொண்டாரோ, என்னமோ, எதையும் விசா ரிக்காமல், வேலை கொடுத்து, மாதம் அறுபது ரூபாய் சம்பளம் என்றார். என் பார்வையால், அவரை வாழ்த் தினேன்.

"அவரிடம் பத்து வருஷம் வேலை பார்த்தேன். வீட் டுக்கு மாதம் முப்பது ரூபாய்க்குக் குறையாமல் அனுப்பி னேன். கிட்டு என்பது எனக்கு செல்லப்பெயர், எனக்கு மீனாக்ஷிசுந்தரம் என்று பெயர். அதைத்தான் எம். சுண் டர் என்று மாற்றிக்கொண்டேன். துரை, ரிடயர் ஆகி சீமைக்குப் போகிறதற்கு ஒரு வருஷம் முன்னாடி தான் இந்தக்காரை வாங்கினார். போகிறபொழுது அவர் இந்தக் காரையும் ஆயிர ரூபாய் பணத்தையும் இனாம் கொடுத்தார். இந்தக் காரின் புது விலை ரூ. 8375.

"இதை வைத்துக்கொண்டு, பம்பாயில் சில காலம் வாடகைக்கு விட்டேன். ஏழாயிரம் ரூபாய் மீத்தேன். பட்டணத்துக்குவந்து, ஒரு வருஷம் ஆச்சு. இங்கே நல்ல மிச்சம். இந்தக் காருக்கு ரொம்ப 'மௌஸு'. பத்தா யிரம் ரூபா சேர்த்த பிறகுதான் தமிழ் பேசறது என்று

விரதம் செய்து கொண்டேன். இன்னும் ஆறுமாத காலத்துக்குள் அந்த ஆசை பூர்த்தியாகியிருக்கும். அதற்குள் நீங்கள் வந்து, அதற்கு பங்கம் உண்டாக்கி விட்டீர்கள்.''

எம். சுண்டர் சொன்னது எப்படி இருக்கிறது? என்னமோ, நான் அதை உண்மையான கதை என்று தான் எண்ணுகிறேன்.

16. நர்ஸ் பவானி

எனது நண்பர் ராமதிலகத்தின் வீட்டுக்கு தினம் ஒரு தடவையாவது போவேன். ராமதிலகத்துக்கு பெரிய ஸர்க்கார் உத்தியோகம். மாதம் ரூ. 500 சம்பளம். அவருடைய உத்தியோகத்தைக் காட்டிலும் அவருடைய குடும்பம் பெரிது. இரண்டு வருஷத்துக்கொரு தரம், ஆபீஸில் அவருக்குச் சம்பள உயர்வு; வீட்டில் ஒரு குழந்தை வரவு.

கர்ப்பத்தடை செய்தால் நல்லது என்று சென்ற பதினைந்து வருஷங்களாக அவர் சொல்லிக்கொண்டே வருகிறார். யாருக்கு கர்ப்பத்தடை? ஊருக்கு, உலகத்துக்கு, அவருக்கல்ல. கர்ப்பத்தடை வேணும் என்று ராமதிலகம் என்றைக்குச் சொல்ல ஆரம்பித்தாரோ, அன்றிலிருந்து இந்நாளுக்குள், அவருக்கு இரட்டைக் குழந்தை பாக்கியம் இரண்டு தடவை ஏற்பட்டு விட்டது. எனவே, கர்ப்பத்தடைப் பேச்சுக்கு முன்னும் பின்னும் சேர்த்து எண்ணிக்கையில், பன்னிரண்டு குழந்தைகள் தேறுகின்றன.

பட்டணத்திலே பிறந்து வளர்ந்த குழந்தைகள் ஆதலின், புட்டிப்பாலும் நர்ஸூம் இல்லாமல் அவைகள் வளர்வதே இல்லை. ராமதிலகம், குழந்தை வைத்தியத்துக்கு டாக்டர் எவரையும் கூப்பிடுவதில்லை. தலைவலி முதல் வயிற்றுக்கடுப்பு வரையில், குழந்தைகளுக்கு எது வந்தாலும் பவானிக்கு சொல்லி அனுப்பு என்று ராமதிலகம் சொல்வார். பவானி அவருக்கு பந்துவல்ல. பவானி நர்ஸ். குழந்தை வைத்தியத்துக்கு நர்ஸைக் கூப்பிடவாவது, குழந்தை பிரசவத்துக்கல்லவா கூப்பிட வேண்டும் என்று கேலிசெய்வேன்.

"சுவாமிகளே! பவானி நர்ஸா? இல்லை. ஜால வித்தை செய்து, குழந்தைகளைக் குணப்படுத்தும் குட்டிச்

சாத்தான்! என்ன பொறுமை! என்ன திறமை! என்ன வாஞ்சை! என்ன கண்டிப்பு! டாக்டர்களே, அவளுடைய காலிலே கட்டி அடிக்கவேண்டும்'' என்று ராமதிலகம் சொல்லுவார். இந்தப் பேச்சை வளர்த்தால், நிச்சயமாய் டாக்டர்களே அவளுடைய காலிலே கட்டி அடித்து விடுவாரோ என்று பயந்து அவருடைய பதிலோடு, என் பேச்சை நிறுத்திக் கொள்ளுவேன்.

ராமதிலகத்தின் வீட்டில், நர்ஸ் பவானியை நான் அடிக்கடி பார்ப்பேன். எந்த வகையிலும் குறை காண முடியாத அவளுடைய நடையையும் பேச்சையும் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைவேன். அவள் அழகாகச் சிரிப்பாள். ஆனால், அந்த சிரிப்பில், துயரம் தோய்ந்து உறைந்திருப்பதுபோலத் தோன்றிற்று. சேவையையே குறியாகக் கொண்டிருக்கும் பவானிக்குச் சோகம் எங்கிருந்து வரமுடியும், வந்தது என்று நான் ஆச்சரியப்படுவேன். இதை அவளிடம் கேட்க, எனக்கு ஆசை; ஆனல், நமது நாட்டு சம்பிரதாயம் அதற்கு இடம் கொடுக்குமா?

பவானிக்கு வயது முப்பது இருக்கும். ஆனல், முப்பது இருபதாக முகத்தில் தோன்றும். பாதங்களில், கன்னிப் பருவத்துக்கு உரிய சதை இருக்கும். கண்களில், வசிகரம் தவழும் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கும். பேச்சின் தொனியோ கம்பீரம் கொண்டது. அதில் கூச்சத்தைக் காணமுடியாது. கூச்சமில்லாதபேச்சாச்சே என்று நெருக்கம் கொண்டாட முயலுபவர்களுக்கு இங்கிதப் படிப்பினை பரிசாக கிடைக்கும்.

இப்பேர்ப்பட்ட பேர்வழியிடம், 'உன் உள்ளத்தில் ஏதோ சாசுவதமான துயரம் குடிகொண்டிருக்கிறுப் போலே தோன்றுகிறதே. அது உண்மைதானு? உண்மையாயின், அந்தத் துயரம் எது சம்பந்தமானது' என்று எவ்வாறு துணிந்து கேட்க முடியும்? 'துயரம்தான்

மனித உள்ளத்தில் அஸ்திவாரமாக பரந்து கிடக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா' என்று பொதுப் படையாக சமாதானம் சொல்லிவிட்டு, உண்மையை மறைக்காமலும் அதைச் சொல்லாமலும் அவள் பேச்சை முடித்துவிட்டால் என்ன செய்கிறது?

பெண்களின் தோளிலே கையை வைத்துக்கொண்டு நடந்த ஜிதேந்திரியரான காந்தியின் பேரிலேயே அவதூறுப் பழியை அடுக்கி வைக்கப் பார்க்கும் உலகம் யுவதியான பவானியோடு நான் அந்தரங்கம் பேசுவதாயிருந்தால் அது என்னை லேசில் விட்டுவிடுமா? கன்னாப் பின்னாவென்று உளற ஆரம்பித்துவிடாதா? உலக சம்பிரதாயத்துக்குப் பயந்து, நான் வாயை மூடிக் கொண்டிருந்தேன். ஆனால், பவானி, என் உள்ளக் கிடக்கையை எப்படியோ தெரிந்துகொண்டாள்.

'ஸார்! நீங்கள் ராமதிலகம் அவர்களின் நண்பர் என்று தெரியும். ஆனால், நீங்கள் யார் என்று தெரியாது. ஆனால், உங்களைப்பார்த்தால், பல துறைகளிலும் கஷ்டப் பட்டு, உலகத்தை தெரிந்துகொண்டு, அதற்கு சேவை செய்ய சங்கற்பம் கொண்டவரைப்போலத் தோன்றுகிறது. என்னை எதையோ கேட்க, நீங்கள் அடிக்கடி வாயெடுக்கிறாப்போல, எனக்கு ஒரு தோற்றம். உண்மை தானே' என்று கேட்டாள். 'பின்பகுதி உண்மை; அதாவது உங்களை ஏதோ கேட்க ஆவல் கொண்டிருக்கிறேன் என்பது உண்மை. என்னைப்பற்றி நீங்கள் சொன்ன முன்பகுதி உண்மையோ என்னவோ! அது எனக்குத் தெரியாது' என்றேன்.

'நல்லது, கதையை வளர்த்தவேண்டாம். என்னை என்ன கேட்கவேண்டும் என்று நீங்கள் ஆவல் கொண்டிருக்கிறீர்கள்' என்று மேட்டிலிருந்து பள்ளத்தில் உருட்டிவிட்ட கூழாங்கல்லைப்போல, 'தட தட' வென்று பேசினாள். "வாழ்க்கையில் இனிப்பில்லாமல், நீங்கள் கட்

டாயத் தொண்டு செய்துவருகிறதாகத் தோன்றுகிறது. தீர்க்க முடியாத மனக் குறையொன்று உங்கள் உள்ளத்தில் ஒளிந்து கிடப்பதாக எனக்கு ஒரு எண்ணம் உண்டாயிருக்கிறது. அது உண்மையா? சொல்லுங்கள்' என்றேன்.

பவானியின் கண்கள் கலங்கின. அழுகை வருகிறாப் போல இருந்தது. ஆனால் வரவில்லை. 'என் வாழ்க்கை வரலாறு இன்னது என்று கேட்க விரும்புகிறீர்கள். சொல்லுகிறேன். தீர்க்க முடியாத மனக்குறை எனக்கு இருக்கிறது என்பது உண்மைதான். சொல்லட்டுமா' என்றாள். அதைக் கேட்கக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்றேன்.

பவானி இவ்வாறு சொன்னாள்:—"நான் பிராமண வகுப்பைச் சேர்ந்தவள்தான். பவானி என்ற பெயரைக் கேட்டு, மகாராஷ்டிரமோ என்று நினைத்துவிட வேண்டாம். அசல் தமிழ் நாடுதான். என் தகப்பனார் பெரிய உத்தியோகத்தில் இருந்தார். அவருக்கு நான் ஒரேபெண். நல்ல இடமாகப் பார்த்துக் கொடுக்கவேண்டும் என்று வரனுக்காக, சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்தார்.

"கடைசியாக, ஒரு இடத்தில் கொண்டுபோய்த் தள்ளினார். தள்ளினார் என்றுதான் சொல்லவேண்டும். என் புருஷனுக்கு தாயாரிடம் அளவில்லாத பக்தி. வாழா வெட்டியாக நாத்தனார் ஒருத்தி அந்த வீட்டில் இருந்தாள். அவளுக்கு உடம்பு முழுதும் விஷம்தான். நான் புக்ககத்துக்குப்போன புதிசிலே, அவள் சாதுவைப்போல இருந்தாள். பிறகு அவள் தன் சொரூபத்தைக் காண்பிக்க ஆரம்பித்தாள்."

"என்னைப்பற்றி, 'தொஸுக்கு' சொல்லாத நேரமே கிடையாது. எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டு பிடிப்பதுதான் அவளுடைய வேலை. நீ கிழக்கே நின்னே; மேற்கே பார்த்தே; உத்தியோகஸ்தன் வீட்டுப் பெண் என்றால் ஒங்காத்திலே இருக்கணும். மாமியார் வீட்டிலே,

பதுங்கிக் கிடக்கணும். புருஷன் சலுகையைக்கொண்டு, இந்த வீட்டிலே நீ இருக்கமுடியாது''.

"வேலை செய்ய முடியல்லேன்னு, அப்பாவாத்துக்குப் போ; இல்லாவிட்டா, பரிசாரகனுக்கு ஒங்க அப்பாவைப் பணம் அனுப்பச் சொல்லு. காலை நீட்டிக்கொண்டு, நாவல் படிக்கலாம்னு எண்ணிக் கொண்டிருந்தயோ!''

"இப்படியே அவள் ராமாயணம் மாதிரி தொடுத்துக் கொண்டேயிருப்பாள். அம்மாக்காரி முதலில் ஒன்றும் சொல்லவில்லை. பின்னாடி, அவளும் பெண்ணோடு சேர்ந்துகொண்டு, 'நமு நமு' என்று பிடுங்கினாள். புருஷனிடம் என் நிலைமையைச் சொன்னேன்''.

"ஒரு சமயம், நல்ல மனது இருந்தால், 'அந்த அசடுகள் வழிக்கு நீ போகவேண்டாம். உன் பாட்டுக்கு, உன் காரியத்தைப் பார்த்துக் கொண்டுபோ' என்பார். சில சமயங்களில், அவரும் சேர்ந்து 'மொசுடு' மாதிரி கொட்டிவிடுவார்''.

"உன் அகம்பாவம் யாருக்கு வரும்? ஒங்க அப்பன் பெரிய உத்தியோகஸ்தனா யிருந்தாப்பலே உனக்குப் பவிஷு வந்து விடுமோ? மாமியார் வீட்டுக்கு வந்த பெண் புருஷனுக்கு அடங்கி, செத்தநாய் மாதிரி கிடக்கணும். நாக்கு நீண்டுதோ, வந்த வழியைப் பார்த்துண்டு போகவேண்டியது தான்'' என்பார்.

"திட்டுகிற கட்டம்போய், அடிக்கிற கட்டம் வந்தது. முதலில் என்பேரில் கை வைத்தவள் அந்த மூதேவி நாத்தனார்தான். ஒருநாள் குடம் கைதவறி கீழே விழுந்து விட்டது. அந்தக் கூனி அதை பார்த்துக் கொண்டிருந்தாள். 'பொறந்தாத்திலிருந்து, குங்குமச் சிமிழ்கூட கொண்டு வருகிறதில்லை. புருஷனுக்கு ஆஸ்தி சேர்ந்துடப் போறதேன்னு உனக்கு தூர்எண்ணம்? குடத்தை மட்டும் கீழேபோட்டு உடை' என்று என்னை அந்தக் குடத்தினால், மொத்திவிட்டாள்.

"என்னால் தாங்கமுடியவில்லை. நானும் பதிலுக்கு அவளைக் குடத்தால் மொத்தினேன். உடனே, பிலாக்கணத்துக்கு ஆரம்பித்துவிட்டாள். அவள் என்னை மொத்தினதைச் சொல்லவே இல்லை. நேத்திக்கு வந்த மூதேவி என்னை குடத்தால் மொத்திப்படவாவது என்று கூக்குரல் போட்டாள். மாமியார் வந்தாள். அவள் பங்குக்கு, என்னை இரண்டு மொத்து மொத்தினாள். இதையெல்லாம் புருஷன் பார்த்துக் கொண்டிருந்தார்".

"இனிமேல் இந்த வீடு உனக்கு கட்டாது. நீ பிறந்த வீட்டுக்குப் போகலாம் என்று இரண்டு மூன்று நாள் கழித்து அவர் சொல்லிவிட்டார். பிராணத்தியாகத்துக்கு துணிந்து விட்டேன். அன்று ராத்திரி பக்கத்தில் ஓடுகிற ஆற்றில் விழுந்து உயிரை விட்டுவிடுகிறது என்று தீர்மானங்கொண்டேன். போயும் விழுந்தேன்".

இவ்வளவு வரையில் அசையாமல் கேட்டுக்கொண்டிருந்த நான் "அப்புறம்" என்று என்னை அறியாமலே சொல்லிவிட்டேன்.

பவானி சொன்னாள் :—'நான் சாகவில்லை என்பது தான் உங்களுக்குத் தெரிந்த விஷயமாச்சே! அன்றைக்கு நான் செத்திருந்தால், நான் நர்ஸ் ஆகி இருக்கமுடியுமா? உங்களுக்குத்தான் இப்பொழுது கதை சொல்லிக்கொண்டிருக்க முடியுமா?'

"என்னை ஒரு பெரியவர் காப்பாற்றினார். என் கதையைக் கேட்டார். நான் இனி யாரையும் நம்பி ஜீவனோபாயம் செய்ய முடியாது என்றும், நர்ஸுக்கு படிக்கலாம் என்றும் சொன்னார். அப்படியே படித்தேன். நர்ஸும் ஆனேன்."

"என் புருஷன் இரண்டாவது தரம் கலியாணம் செய்துகொண்டார். அவளுடைய பிரசவ காலத்தில், அவளுக்கும் நான் மருத்தவம் பார்த்தேன். பணம் கொடுக்க வந்தார். வேண்டாம் என்றேன். இரண்டா

வது பிரசவத்துக்கும் மருத்துவம் பார்த்தேன். அப் பொழுதும் பணம் வேண்டாம் என்றேன். அவர், என் முகத்தை உற்றுப் பார்த்தார்.''

''பவானியா என்றார். மூர்ச்சைபோட்டு விழும் தருவாயில் இருந்தார். நர்ஸ் சேவையில் எனக்கு நல்ல பெயரும் நிறைய பணமும் கிடைத்து வருகின்றன. வந்து என்ன? பெண்ணாய்ப் பிறந்த எனக்கு, இந்த ஜென்மத் தில் இல்வாழ்க்கை என்பதே இல்லாமல் போய்விட்டதே. ஊர்க் குழந்தைகள் தான் என் குழந்தைகள்.''

''இரண்டு கூனிகள் சேர்ந்து, என் 'தலை விதி'யை எழுதி விட்டார்கள். இதிலே, பிரம்மாவுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. இந்த கூனிகளுக்குத் தண்டனையும் எனக்கு நியாயமும் கிடைக்க முடியாதபடிக்கு, நமது ஜன சமுதாயம் நடந்து வருகிறது. என்ன கொடுமை! அந்த கூனிகளைக் கண்டிக்க, உலகத்தில் யாரும் இல்லை என்றால், இந்தமாதிரி அநியாயங்களை யாரால் தடுக்க முடி யும்? 'தலை விதி, தலை விதி' என்று அர்த்தமில்லாமல் சத்தம் போட, ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள்.''

''என் கதை கேட்பதற்கு ஒருவரும் இல்லை, கேட் டாலும் நம்பமாட்டார்கள், நம்பினாலும், எனக்கு நியாயம் கிடைக்கும்படி செய்ய அவர்களால் முடியாது. என்னைக் காட்டிலும் கேடுகெட்ட நிலைமையில் அவர்கள் இருக் கிறார்கள்.''

பவானி தனது தீர்க்க முடியாத மனக்குறையைச் சொல்லிவிட்டாள். நானும் கேட்டுத் தெரிந்துகொண் டாய் விட்டது. அவளுக்கு நியாயம் எப்படிச் செய்வது? அவளது கதையைக் கேட்பவர்கள், அவளைக் காட்டிலும் திக்கற்ற நிலையிமல் இருக்கிறார்கள் என்று பவானி சொன்னது லக்ஷத்தில் ஒரு வார்த்தை. அதை அசைக்க முடியாது.

17. வேலைக்கார குப்பன்

கண்ணன் பாட்டிலே, பாரதியார் வேலைக்கார கண்ணனை வெகு நேர்த்தியாக வர்ணிக்கிறார். 'எங்கிருந்தோ வந்தான்; இடைச்சாதி என்று உரைத்தான்' என்று வேலைக்கார கண்ணனைப் பற்றி ஆரம்பித்து, பின்னர் அவன் செய்யும் சூதுகளையெல்லாம் அடுக்கிக்கொண்டே போகிறார். பாட்டியை, தேள் பல்லால் கடித்துவிட்டது என்று கண்ணன் புளுகுவானாம்! அதாவது எளிதிலே பொய் என்று தெரிந்து கொள்ளக்கூடிய பொய்யை, மூட்டை மூட்டையாக அளப்பானாம்!

வேலைக்கார குப்பன், மேலே சொன்ன புளுகுக் கண்ணன் இனத்தைச் சேர்ந்தவன்தான். நிஜம் என்பது ஒரு பொழுதும் அவன் வாயினின்றும் வருவதே இல்லை. குப்பன், பொய்யைச் சொல்லி எளிதிலே அகப்பட்டுக் கொள்ளுவான். அகப்பட்டுக் கொண்டதும், அவன் விழிப்பான். பார்த்தால் பரிதாபமாயிருக்கும். ஆனால் இன்னொரு சந்தர்ப்பம் வாய்த்தால், கூசாமல் பொய் சொல்லுவான்.

குப்பன் எங்கிருந்தோ வந்தவன். அவனுக்கு பெற்றோர்கள் இல்லை. தனக்கு பெற்றோர்கள் இருந்ததாகவும் அவன் சொல்லிக் கொள்ளுவதில்லை. 'அத்தை வீட்டிலே வளர்ந்தேன். மாமன் வீட்டிலே இருந்தேன். தாத்தா எனக்கு சொல்லிக் கொடுத்தாரு' என்றெல்லாம் சொல்லுவானே யொழிய, பெற்றோர்களைப்பற்றி, அவன் பிரஸ்தாபம் செய்வதே இல்லை. தாய், தகப்பன் இல்லாமல் பிறந்த குழந்தை என்று அவன் தன்னைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறானே, என்னமோ!

குப்பனுக்கு எங்கள் வீட்டிலேயே சாப்பாடு. குப்பனுக்கு மாமிசம் வேண்டும்; ஆனால், அது எங்கள் வீட்

டில் கிடைக்காது. எப்பொழுது பார்த்தாலும் 'அம்மா வுக்கு நல்லா சமைக்கத் தெரியவில்லே; எந்த பதார்த்தத் துக்கும் அவுங்க காரம் போடமாட்டேன் என்கிறுங்க. அப்ப! சாப்பாடு எப்படி இருக்கும்' என்று முணுமுணுத் துக் கொண்டே இருப்பான்.

அரிசி பங்கிடு நாட்களில், விலாப் பழுத்த ஆளுக்குச் சாதம் போடுவதாயிருந்தால் மாதம் குறைந்தது பன் னிரண்டு ரூபாயாவது ஆகும் என்பதைக் குப்பன் கணக் குப் போட்டுப் பார்த்ததே இல்லே. அவன் எதற்காக கணக்குப் பார்க்கப் போகிறுன்? கையால் வேலே செய்ய முடியாத எஜமான் வீட்டிலே, கணக்குப் பார்த்து சம் பளம் கொடுக்கலாமா என்பது குப்பனுடைய சூக்ஷ்ம மான வாதம். அவன் அவ்வாறு நினேப்பதிலும் நியாயம் இருக்கிறது.

குப்பன் காலேயில் புதுமணிப் பிரகாரம் ஆறு மணிக்கு எழுந்திருப்பான். எழுந்திருந்தும், வீட்டுக்கு வெளியே, எங்கேயாவது போய்விடுவான். வருவதற்கு அரை மணியாவது பிடிக்கும். அதற்குள், குப்பா குப்பா என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கவேண் டியதுதான். அரைமணிக்குப் பிறகு மெதுவாக வந்து சந்தடி செய்யாமல், குப்பன் காலே தரிசனம் கொடுப்பான். 'நாசமாய்ப் போகிறவனே! எங்கேடா, இவ்வளவு நேரம் தொலேந்திருந்தாய்' என்று கோபத்தோடு கேட்டால், நிதானமாக, வெளியே போயிருந்தேன் என்பான்.

அதற்கு இவ்வளவு நேரமா என்று கேட்டால், 'போய்ட்டு வாரதுக்கு அம்புட்டு நேரம் பிடிக்காதுங்களா' என்று பதட்டமில்லாமல் சொல்லுவான். நமக்கு ஆத் திரம் பொங்கலாம்; ஆனுல் அவன் சிரித்துக் கொண்டே யிருப்பான். 'என்னடா அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருக்கிறுய்? என் முன்னே நிற்காதே, போ' என்

றால் 'நீங்க கூப்பிட்டீங்களே! வந்தேன்' என்று சொல்லி, வாய்க்குள்ளாகவே சிரித்துக் கொள்ளுவான்.

'இரண்டு நாளா ஏன் கனகாம்பரத்துக்கு தண்ணி ஊத்த வில்லை' என்றால், 'அதிகமா தண்ணி ஊத்தின, அது பூக்காதுங்களாம்' என்பான். என்னமாய் உனக்குத் தெரியும் என்று நாம் கேட்பது தான் தாமதம். உடனே 'துரை தோட்டக்காரர், சாயபு தோட்டக்காரர், ஜமீன்தார் தோட்டக்காரர் என்று வரிசைக் கிரமமாக, பல வகை தோட்டக்காரர்களை நமது கற்பனைக் கண்ணுக்கு முன், அவன் கொண்டுவந்து நிறுத்தி, அவுங்க எல்லாரும் அப்படித்தான் சொன்னுங்க' என்பான். தான் சொன்னதை ருசுப்படுத்த எத்தனிப்பதைப்போல், 'துரை பங்களா தோட்டக்காரரைக் கூட்டியாரட்டுமா' என்று கூசாமல் கேட்பான்.

'வீட்டு வேலையெல்லாம் சரியாய்ப் பார்க்கிறதில்லை; சோதா மாதிரி இருக்கிறாய். நீ வேலைக்கு வேண்டாம், போ என்று ஆத்திரம்பொங்கி சொல்லும்படியான நிலைக்கு நம்மை குப்பன் கொண்டு வைத்து விடுவான். 'தாத்தா வரச் சொல்லி, கடுதாசி போட்டிருக்காங்க. கடுதாசி நேத்திக்கு வந்திச்சு. நல்ல வேளையா நீங்க இன்னிக்கு போ சொல்லுரீங்க. நான் போய்ட்டு வரேனுங்க' என்பான்.

குப்பனுக்கு என் பலவீனம் நன்றாய்த்தெரியும். என் பலவீன மட்டுமா? என் வர்க்கத்தார் அனைவரின் பலவீனமும் அவனுக்குத் தெரியும். அவன் இல்லாமல், எங்கள் வீட்டில், யாருக்கும் எந்த வேலையும் ஓடாது என்பதை அவன் எப்படியோ கண்டுகொண்டு விட்டான். எவ்வளவு காரமாகப் பேசினாலும் அவனை நாங்கள் விடமாட்டோம் என்பதும் அவனுக்கு நன்றாகத் தெரியும்.

அவனிடம் எனக்குப் பிரியம்; என் சம்சாரத்துக்கு பிரியம்; எங்கள் கடைசிக் குழந்தை சரோஜாவை, அவன் தான் எப்பொழுதும் தூக்கி வைத்துக்கொண்டிருக்க

வேண்டும். அவளுக்கு குப்பா என்று கூப்பிட வராது 'ப்பா, ப்பா' என்று தான் சொல்லுவாள். குப்பனுடைய தோளில் சரோஜா இருந்தால், அவளுடைய கொம்மாளத்தை பார்க்கவேண்டுமே!' அவள் அவனோடு, உருப் பிரியாத பாஷையில் என்னென்னமோ பேசுவாள். அவ்வளவும் தெரிந்து கொண்டது போல, குப்பன் பதிலுக்கு ஏதோ பேசுவான். சரோஜா சிரிப்பாள்.

எங்களிடம் சரோஜா சிரித்து விளையாடுவதில்லை. குப்பனைக்கண்டால் மட்டும், ஏன் அவ்வளவு பிரம்மானந்தப்பட வேண்டும்? சரோஜாவுக்கு இன்னும் இரண்டு வயதாக வில்லை. குப்பனைக் கண்டால், சரோஜாவுக்கு மட்டும் தான் சந்தோஷம் என்பதில்லை. தெருக்குழந்தை அத்தனை பேர்களும், குப்பனைக் கண்டால், அம்மாவின் இடுப்பில் இருந்தாலும் தள்ளிக் குதிப்பார்கள். ஏகப்பட்ட ஆர்ப்பாட்டம் செய்வார்கள். 'அம்மா கிட்ட இருக்கபா? இரு இரு. நான் மார்க்கெட்டுக்கு போய்வாரேன்' என்று சொல்லிக் கொண்டே குப்பன் போவான். தாய்மார்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும், குழந்தைகள் குப்பனையே பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

பாலூட்டி வளர்க்கும் பெற்ற தாய்மார்கள் பொருமைப் படும்படியாக, குழந்தைகள் குப்பனை நத்திக்கொண்டிருக்குமாகில், அவன் ரகசியம்தான் என்ன? நாம் எவ்வளவு ஆத்திரத்தோடு பேசினாலும், பதட்டமில்லாமல், குப்பன் பதில் சொல்லும் மர்மம் என்ன? குப்பன் குறும்புக்காரனா? குப்பனுக்கு பிழைக்க வழி தெரியாதா? குப்பனுக்கு, பணம் சம்பாதித்து சேமிப்பதில் ஆசை கிடையாதா? குப்பன் விருப்பு வெறுப்பு இல்லாத யோகியா? குப்பனைப் பற்றிய வரையில், இவைகள் எல்லாம் ஓரளவில் உண்மை என்றே சொல்லவேண்டும்.

நான் சொன்ன வேலையை, நாம் குறிப்பிடும் காலத்தில், குப்பன் செய்யவே மாட்டான். தோட்டத்துக்கு

தண்ணீர் கொட்டு என்றால் தொட்டிக்கு தண்ணீர் நிரப்புவான். மார்க்கெட்டுக்கு போ என்றால் சரோஜாவை தூக்கி வைத்துக்கொண்டு, நம் எதிரிலேயே நின்றுகொண்டு, நமக்கு காக்ஷி அளித்துக்கொண்டேயிருப்பான். யாராவது வந்து 'அய்யா எங்கே' என்றால், என்னிடம் வருவான். 'என்ன சொல்கிறது' என்று கேட்பான். 'தூங்குகிறார் என்று சொல்லு' என்று சொன்னால், 'தூங்குகிறார் என்று சொல்லச் சொன்னாங்க என்று நம்முடைய மானத்தைச் சந்தையிலே விற்றுவிடுவான். 'ஏண்டா! அப்படிச் சொன்னாய்' என்று கேட்டால், நீங்கதான் பொய் சொல்லப்படாது என்று சொன்னீங்களே என்று சாதுத்தனம் கலந்த குறும்போடு பதில் சொல்லுவான்.

இப்பேர்ப்பட்ட குப்பனோடு என்ன பண்ணித் தொலைகிறது என்று நொந்து கொள்வதிலும் பயனில்லை. என்ன திட்டினாலும், அவன் எங்கள் வீட்டை விட்டுப் போகிறவன் அல்ல. குப்பனில்லாமல போனால் எங்களுக்குத்தான் பொழுது போகுமா? சரோஜாவை யார் சமாளிக்கிறது? சரோஜாவின் காது கேட்கும்படியாகக் குப்பனைத் திட்டினால், குப்பனுக்கு அவள் பரிந்து பேசுவதைப்போல, அழுகைக்கு சுவரம் பூட்டிவிடுவாள்.

பார்வைக்கு குப்பன் மக்கைப்போல இருப்பான். ஆனால், அவன் நமது உள்ளங்களைப் புகுந்து பார்க்கும் பெருச்சாளி. அன்பு இருக்கிற இடத்தில், அவன் அடிமை. அதிகாரம் செய்கிற இடத்தில் அவன், 'பகதூர்.' எல்லா வேலைகளையும் அவன் செய்து விடுவான். ஒன்றையும் பாக்கி வைக்கமாட்டான். எங்கள் வீட்டு சங்கதிகளை அயல் வீட்டில் சொல்லமாட்டான். ஆனால், அவனுடைய வக்கிரபுத்தியின் விசித்திரத்தை என்னால் வர்ணிக்க முடியாது. எப்படி சேஷ்டை செய்தாலும், குப்பன் 'பத்தரை மாத்து தங்கம்.' சந்தேகமே இல்லை.

---

18. அரசடிப் பிள்ளையார்

குழந்தை திடீர் என்று அழுதது. இவ்வளவு சத்தம் அது ஒரு நாளும் செய்ததே இல்லை. ஆகவே எனக்கு ரொம்பவும் திகைப்பு ஏற்பட்டது. ஓடினேன். கதவு மூடியிருந்தது கூடத் தெரியவில்லை. கதவின் பேரில், என்னுடைய வலது கையை மோதிக்கொண்டேன். மோதினது தான், உடனே படீர் என்ற சத்தம் கேட்டது, கை அப்படியே தொங்கி ஆட்டம் கொடுத்தது.

உடனே எலும்பு முறிந்து போயிற்று என்ற உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. ஆமாம்; எலும்பு தான் இரண்டாக முறிந்து விட்டது. அன்றிரவு எனக்கு தூக்கமேயில்லை. சொப்பனமும் இல்லை. இருந்தாலும் விழிப்பும் இல்லை. இந்த விநோதமான நிலைமையில் என்னென்னமோ மனதுக்குள் வந்து போய்க்கொண்டிருந்தது. சர்ச்சில் படுத்த படுக்கையாகக் காட்சி யளித்தார். பாலக்காடு மணியின் மிருதங்க நாதம் காதில் கேட்டது. 'எப்படி சார் எலும்பு முறிந்தது' என்று பக்கத்து வீட்டு அன்பர் ராமனுதன் கேட்டதுபோல தோன்றிற்று. பூனுவில் ஆகாகான் மாளிகை எப்பொழுதோ பல வருஷங்களுக்குமுன் பார்த்திருக்கிறேன். அந்த மாளிகை என் கண் முன்னே வந்து நின்றது. வைஷ்ணவ ஜனதோ என்ற பிரார்த்தனைப் பாட்டை, காந்தி வாய்க்குள்ளாகவே பாடிக்கொண்டிருந்ததாக ஒரு காட்சி.

இப்படி யெல்லாம் காட்சிகளும் கருத்துகளும் என்னை மீறியே என் மனதில் தோன்றிக்கொண்டிருந்தன. அவைகள் வேண்டாமென்று தடுக்க என்னுல் முடியவில்லை. எனவே அவைகள் எதிர் பாராதபடி வந்தும் போயும் இருந்தும் கொண்டிருக்கிற சமயத்தில், எங்கள் ஊர் 'அரசடிப்பிள்ளையார்' எனக்கு காட்சியளித்தார்.

'என்னப்பா! இன்றைக்கு காலமே முட்டாள் தனமான வேலை செய்தாய்' என்று பிள்ளையார் என்னை கேட்டார். நான் பதில் சொல்லு முன், அவர் பேச ஆரம்பித்து விட்டார்.

'கேளு. நேத்திக்கு ஒரு பையன் இந்த வழியாக போனான். அவனுக்கு பரீக்ஷையாம். பரீக்ஷயில் அவன் தேறணுமாம். அதற்காக அவன் என் முன்னே வந்து, தோப்புக்கரணம் போடுவது மாதிரி பாசாங்கு செய்தான். அந்த மாதிரி பாசாங்கு முடிந்தவுடன், 'பிள்ளையாரே எனக்கு பரீக்ஷ தேறும்படி செய்யணும்' என்றான். அவன் பாடங்களை சரியாகப் படிக்காவிட்டாலும், நான் அவனை பரீக்ஷயில் தேறப் பண்ணணுமாம்.'

இதோடே அவன் போகவில்லை. பரீக்ஷ தேறப் பண்ணுகிற என்னைப் பார்த்துக் கேலி செய்கிறான். பிள்ளையாரே! உனக்கு ஏன் கோவிலில்லே? உனக்கு ஏன் கலியாணமில்லே? உன் தொந்தி ஏன் பெருத்திருக்கு? உனக்குத்தான் ஒத்தரும் குழக்கட்டை நைவேத்தியம் செய்கிறதில்லையே, அப்படியிருந்தும் உன் தொந்தி ஏன் வாடவில்லை? இந்த மாதிரி அவன் கேலியாக பேசிக் கொண்டேயிருந்தான். கடைசியாக அவனுடைய அப்பா அந்தப் பையன் பக்கம் வந்தார். அவர் தலையைக் கண்டவுடனே, ஓட்டமெடுத்தான். அவனுடைய அப்பா அப்பொழுது வராவிட்டால், அவன் என்னைக் கேலி செய்து கொண்டே இருப்பான்.

அது போகட்டும். பையன்தான் போய்விட்டானே, நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அந்தமாதிரி நடக்கவில்லை. யாரோ ஒரு ஏழைப்பெண் தலைவிரிகோலமாக என் முன்னே வந்து என்னை நமஸ்கரித்துவிட்டு, அப்படியே தரையில் படுத்துக் கொண்டபடி விம்மி விம்மி அழுதாள்!

என் அழுகிறாய் என்று அவளைக்கேட்க எனக்கு ஆசைதான். அதைக்கேட்க நான் வாயெடுக்குமுன், அவள் பின் வருமாறு புலம்பினாள்: 'பிள்ளையாரே! என் புருஷன் இந்தமாதிரி செய்யணுமா? முந்தாநாள், குழம் பிலே, கொஞ்சம் உப்பு அதிகமாக போய்விட்டது. எந்த வீட்டிலும் இந்தமாதிரி ஒரு தடவைகூட நேராதா? ஆனால், என் புருஷனோ என்னென்னமோ சொல்லி, என்னைத் திட்டினார். 'ஒன்னோடே குடித்தனம் பண்ணு வதைக் காட்டிலும் பட்டாளத்திலே சேர்ந்து பிராணனை விடறது ஒசத்தி என்றார். என்னை அவருடைய கை வலிக்கிற வரையிலும் அடித்தார். எங்கேயோ போய் விட்டார். இரண்டு நாளாய் அவரைக் காணோம். பிள்ளை யாரே! நான் என்ன செய்வேன்? என் புருஷன் வீட் டுக்கு வரும்படியாக நீ செய்யப்படாதா' என்று அவள் புலம்பினாள்.

எனக்கு மனசிலே ரொம்ப வருத்தம். ஆனால் வருத்தப்பட்டு நான் என்ன செய்கிறது? எல்லாரும் தங்கள் தங்கள் மனக்குறைகளை என்னிடம் சொல்லிக் கொண்டு புலம்புகிறார்களேயல்லாமல், சந்தோஷமாக எதையும் என்னிடம் சொல்லுவதேயில்லை.

என்னை என் இந்த அரசமரத்தடியில் கொண்டுவந்து வைத்து, இப்படியெல்லாம் கேலி செய்யவேண்டும்? என்று மனதுக்குள்ளே எண்ணிக்கொண்டிருந்தேன்.

அந்த சமயத்தில், அரசமரத்தடிக்கு, ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. ஒருவர் முன்னே வந்து கொண் டிருந்தார். மற்றவர்கள் மரியாதையாக பின்னே வந்து கொண்டிருந்தார்கள். முன்னே வந்து கொண்டிருந்தவர் தாசில்தாராம். அவர் கிராம கணக்கனைப் பார்த்து சொன் னது என்மனதைத் துன்புறுத்திக் கொண்டேயிருக்கிறது. அதை உன்னிடம் சொல்லலாமா, சொல்ல வேண்டாமா

என்று தெரியவில்லை. இருந்தாலும் சொல்லுகிறேன் கேள் என்றார் பிள்ளையார்.

அவர் பின்வருமாறு சொன்னார்:—'தாசில்தார் என் பக்கம் வந்தார். என்னை ஏற இறங்கப் பார்த்தார். உடனே கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டார். என்னைப் பற்றித்தான் தாசில்தார் கணக்கரிடம் ஏதேதோ சொல்லப் போகிறார் என்று எனக்கு தெரியும். தாசில்தார் வாயில் இருந்து என்ன வரப்போகிறதோ என்று நான் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தேன். 'கணக்கப் பிள்ளே! இந்த ஊர் இவ்வளவு ஏழையா? ஒரு பிள்ளையாருக்கு நாலு சுவர் எழுப்பி, கோவில் கட்ட முடியவில்லை என்றால், பிள்ளையாரைக் குளத்தின் நடுவில் தூக்கி போட்டுவிடுகிறது தானே? அரமரத்தடியிலே பிள்ளையாரை வைக்கிறது நியூஸன்ஸ். பிள்ளையார் குளத்துக்குள் இருந்தால் எப்பொழுதும் அபிஷேகம் ஆகிறது மாதிரி' என்று சொல்லி தாசில்தார் என்னை குளத்தில் தூக்கி எறியும்படியாகக் கட்டளையிட்டார்.

அன்று முதல், நான் குளத்துக்குள்ளேயே அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருக்கிறேன் என்று பிள்ளையார் கதையை முடித்தார்.

இந்தக் கதையை கேட்டதும் எனக்கு அடங்காத கோபம் வந்தது. 'எலும்பு முறிந்து, தூக்கம் வராமல் படுத்துக் கொண்டிருக்கிற பொழுது, உன்னுடைய கஷ்டங்களையெல்லாம் சொல்லுகிறாயே, எனக்கு எதற்காக? உன்னிடம் மற்றவர்கள் முறையிட்டுக் கொள்வதைப் போல, நீ ஏன் என்னிடம் முறையிட்டுக் கொள்கிறாய்? சந்தோஷமாக ஏதேனும் நீ சொல்லக் கூடாதா? உன்னுடைய அசட்டுக் கதை இனிமேல் எனக்குத் தேவையில்லை என்று கோபத்தோடு சொன்னேன்.

பிள்ளையார் சிரித்தார். 'அப்பா! கேளு. சந்தோஷம் எளிதிலே கிடைக்கிற பொருளல்ல. உலகத்தில் எங்கும்

பரந்து நிறைந்திருப்பது பலவீனம். பலவீனம் துயரத்தைத் தான் கொடுக்கும். நீ ஏன் கண்மூடித் தனமாக, கதவில் மோதிக்கொண்டு, எலும்பை முறித்துக் கொண்டாய்? பதறினால் எந்தக் காரியமும் சிதறிப்போகும். பதறுவதைக் காட்டிலும் பொறுமையோடிருப்பது தான் உயர்ந்தது' என்று பிள்ளையார் உபதேசம் செய்தார்.

எனக்கு ஆத்திரம். அந்த ஆத்திரத்திலேயே தூங்கிப் போய் விட்டேன். என்னைப்போல் அவஸ்தைப் படுகிறவர்களுக்கு, அரசடிப்பிள்ளையார் தரிசனம் கொடுத்து அவர்களைத் தூங்கவைக்கப்படாதா?

19. ஆசிரியர் விக்ரமன்

பொழுது விடிந்தது, ஆனால் ஆசிரியர் விக்ரமனுடைய முகத்தில் கவலையொன்றே காணப்பட்டது. ஏதோ யோசனையில் அவர் ஆழ்ந்து கிடந்தார். இதே சமயத்திலா அவருடைய மனைவி அங்கே வர வேண்டும்? வந்ததும் வராததுமாக, 'ராத்திரி உங்களிடம் சொன்னதெல்லாம் மறந்து போச்சா' என்று மனைவி கண்டிப்பான குரலோடு கேட்டாள். அதைப்பற்றித்தான் யோசனை என்றார் ஆசிரியர். 'யோசித்துக்கொண்டேயிருங்கள். நம்ம ஜன்மமும் முடிந்து போய்விடும். அதற்குமேல் ஒன்றும் செய்ய வேண்டாமோன்ன' என்று மனைவி தன்னுடைய ஆத்திரத்தை காண்பித்தாள்.

ஆசிரியருடைய மனைவி, ராத்திரியில் சொன்னதுதான் என்ன? வேறொன்றுமில்லை. அரிசியில்லையாம். விறகு இல்லையாம். மளிகை சாமான்கள் பல இல்லையாம். பால்காரனுக்குக் கொடுக்க கையில் பணமில்லையாம். அடுத்த வீட்டில் வாங்கின துவரம்பருப்பைக் கேட்கிறார்களாம். இது எல்லாம் போதாதோ என்று சொல்லும்படியாக, அந்த அம்மாள் அந்த வாரம் எந்த சினிமா படம் பார்ப்பதற்குப் போக முடியவில்லையாம்.

ஆசிரியருக்கு இவைகளைக் காட்டிலும் பயங்கரமான வேறு சேதிகள் வேண்டுமா? எனவே, முகவாட்டத்தோடு அவர் உட்கார்ந்து கொண்டிருந்ததற்கு இதுதான் காரணம். திடீரென்று ஆவேசம் வந்தது போல அவர் பேச ஆரம்பித்தார். 'நான் பக்த குசேலன். நீ என்னை குபேர குசேலனாக்கப் பார்க்கிறாய். நான் என்ன செய்வேன்? நான் எழுதுகிறதெல்லாம் முதல்தரமான எழுத்து என்பது என் நம்பிக்கை. ஆனால் அது மார்க்கட்டில் எடுபடுகிறதில்லையே! மட்டமான எழுத்தை யெல்லாம்

ஆயிரமாயிரமாகக்கொடுத்து வாங்குகிறார்கள். என் எழுத்துக்கு பத்து ரூபாய் கூட கிடைக்க மாட்டேன் என்கிறதே! அந்தப் பத்து ரூபாய்க்குக்கூட எத்தனை தடவை கால்கடுக்க நடக்க வேண்டியிருக்கிறது' என்று விக்ரமன் தனது ஆவேசத்தை ஒருவாறு முடித்துக் கொண்டார்.

ஆசிரியருடைய ஆவேசம் அவருடைய மனைவிக்கு மனதில் அமைதியை உண்டாக்கவில்லை. 'ரொம்ப கஷ்டமான நிலைமையில் குத்திக் காண்பிப்பது கூடாது. இருந்தாலும் நீங்கள் சொல்லுகிற நொண்டி சமாதானம் யாருக்குப் பிடிக்கும்? மட்டமான எழுத்துக்கு யாரும் ஆயிரமாயிரமாக கொடுக்கமாட்டார்கள். உங்களுக்கு ஸ்வாரஸ்யமாக எழுதத் தெரியவில்லை. அதை ஏன் மூடி-மூடி வைத்து மழுப்புகிறீர்கள்' என்று மனைவி நாக்கில் நரம்பில்லாமல் சொல்லிவிட்டாள்.

ஆசிரியருக்கு உண்டான வருத்தத்துக்கு எல்லையில்லை. 'பைத்தியமே! கேள். உனக்கு மகாபாரதம் தெரியுமா' என்று ஆசிரியர் ஆத்திரத்தோடு கேட்டார்.

'மகாபாரதக் கதை வேறே தெரியவேண்டுமா? தினந் தினம் நம்ம வீட்டிலேதான், மகாபாரதம் நடந்து கொண்டே யிருக்கிறதே! அப்புறம் கதை எதற்காக' என்றாள். ஆசிரியருக்குக் கோபம். சொல்லுவதைக் கேட்கிறாயா இல்லையா? என்று அவர் மனைவியை அதட்டினார்.

'நீங்கள் சொல்லுகிறதைக் கேட்டால், நான் கேட்டதெல்லாம் வந்து விடுமா? அரிசி வருமா? விறகு வருமா? சினிமா போகலாமா? பணங்கிடைக்குமா?' என்று சிரிப்பை வாய்க்குள் அடக்கிக்கொண்டே கேட்டாள்.

'ராமாயணம் புண்ய கதை. அதைக் கேட்கக்கேட்க மனிதர்கள் புனிதர்களாக ஆவார்கள். ஆனால் பாரதக் கதை அப்படியல்ல. அதைக் கேட்டால் மனிதர்கள் புத்திசாலிகளாக ஆவார்கள். நீ புத்திசாலியாக ஆக

ஆசைப்படுகிறாயா இல்லையா?' என்று ஆசிரியர் சிரித்துக் கொண்டு கேட்டார்.

'உங்கள் புத்திசாலித்தனமே விலை போகவில்லையே! அப்படியிருக்க, நான் ஏன் புத்திசாலி ஆகவேண்டும்' என்று மனைவி கிண்டலாகப் பேசினாள். 'எனக்கு எதற்கு புத்திசாலித்தனம் என்று நீ சொல்லுகிறாயே அதுதான் புத்திசாலித்தனம். பார்த்தாயா? மகாபாரதக் கதையைக் கேட்பதற்கு முன்னாலேயே நீ புத்திசாலியாகி விட்டாய். அதுதான் மகாபாரதத்தைப் பற்றிய மகிமை' என்று ஆசிரியர் கிண்டல் செய்தார்.

'கதை சொல்லவேண்டும் போல, உங்களுக்கு இப் பொழுது இருக்கிறதாக்கும். சரி, கதைசொல்லுங்கள் நான் கேட்கிறேன். கதை கேட்டுக்கொண்டிருந்தால் சமையல் முடியாது. அது தெரியுமோல்லியோ! என்றாள் மனைவி. 'நீ ராத்திரி என்னிடம் சொன்னதைப் பார்த்தால், வீட்டில் சமையலுக்கு ஒன்றுமே இல்லை போ லல்லவா இருந்தது? இப்பொழுது சமையலைப்பற்றி பேசுகிறாயே?' என்று ஆசிரியர் திகைப்போடு கேட்டார்.

'பெண்களாகிய நாங்கள், அசடு வழிகிற ஆண்பிள்ளை கள் அல்ல. அர்த்தமில்லாமல் எழுதுகிற ஆசிரியர்களு மல்ல. நாளைக்கு சமையலுக்கு ஒன்றுமில்லை என்று சொல் லும்பொழுது, நாலு நாளைக்காவது வேண்டிய சாமான் கள் கையிருப்பு எங்களிடம் இருக்கும். மேலும் உங்களைப் போல ஆண்பிள்ளைகள் காரியத்தை உடனே செய்துவிடு வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குக் கிடையாது' என்று மனைவி சிரித்துக்கொண்டு சொன்னாள்.

'அப்படியா கதை? சரி. அப்படியானால் கதை வேண்டாம். நீ சமயலைப் போய்ப் பாரு. நீ ராத்திரி செய்த பிரசங்கம் ஜீரணகாரி லேகியமாக மாறி, ஊர்ப் பட்ட பசியைக்கிளப்பி விட்டிருக்கு. சமையல் செய்தால், சம்பிரமமாகச் சாப்பிடலாம்' என்றார் ஆசிரியர். நாக்கை

நொட்டை விட்டுக்கொண்டு. 'நீங்கள் ஆரம்பித்த ஜோரிலே, மகாபாரதக் கதையைக் கேட்டால்தான் வேலை ஓடும் போலிருக்கிறது. ஆகையினாலே கதையைச் சொல்லுங்கள் கேட்கிறேன்' என்றாள் சகதர்மிணி மிக்க விநயத்தோடு.

ஆசிரியர் பிரமித்துப் போனார். கிணறு வெட்டப் போய், பூதம் புறப்பட்ட கதையாகி விட்டதே என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டார். இந்த தர்ம சங்கட நிலைமைக்கு மாற்றுத்தேட அவருக்குத் தெரியவில்லை. அவருடைய மனைவி இதற்கும் வழி காண்பித்தாள்.

'நீங்கள் பட்டினியோடு கதை சொல்லவேண்டாம். ஒரு நாழிகைக்குமுன் எங்கள் அம்மா ஊரிலிருந்து வந்தார்கள். அது உங்களுக்குத் தெரியாது. உப்புமா அவசரடி ஆகாரமல்லவா? அது நடந்துகொண்டிருக்கிறது. வயிற்றை நிரப்புவதற்கு அதுவும் தொண்டையை நனைப்பதற்குக் காப்பியும் இதோ வரும். இரண்டையும் அருந்திய பிறகு நீங்கள் கதை சொல்லலாம்' என்று மனைவி சந்தோஷத்தோடு சொன்னாள்.

'அதிருக்கட்டும். உங்கள் அம்மா வந்தது சந்தோஷம். உப்புமா வருகிறது அதைவிட சந்தோஷம். நீ இலக்கண வக்கணையாகப் பேசுகிறது. அதைக் காட்டிலும் சந்தோஷம்' என்று சொல்லி ஆசிரியர் சிரித்தார்.

'நீங்கள் இலக்கணம் என்று சொல்லுவது, லக்ஷணம் என்ற வார்த்தைதானே? லக்ஷணத்திலே, பெண்கள் ஆண்களைவிட ஆயிரமடங்கு உயர்ந்தவர்கள். ஆண்கள் பெண்களுக்கு இலக்கணத்தைப்பற்றி உபதேசம் செய்யப் பார்ப்பது, கொல்லத் தெருவில் ஊசி விற்பதைப்போல இருக்கிறது' என்று மனைவி வெகு குதூகலத்துடன் சொன்னாள்.

'சரி, கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன் கேளு. துரியோதனனுக்குத் துர்மந்திரி மாமா

சகுனி. சகுனியின் சொல்தான் துரியோதனனுடைய காதுக்கு இனிப்பாய் இருந்தது. சகுனியினுடைய சொல்தான் துரியோதனனுடைய சபையில் எடுபட்டது. சூதுக் களஞ்சியமான சகுனியின் சொல்லுக்கு ஏற்றமும், சாதுக் களஞ்சியமான விதுரனுடைய சொல்லுக்கு ஏமாற்றமும், அவமதிப்பும் ஏற்படலாமா? 'ஏ! துரியோதனா! நீ சகுனியின் துர்ப்போதனையைக் கேட்டால், அழிந்து போய்விடுவாய். துரியோதனாதிகளின் கூட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னுடையது. சகுனியின் பேச்சைக் கேட்காதே. பாண்டவர்கள் கேட்பதைக் கொடுத்துவிட்டு அவர்களுடைய நல்லுறவைச் சம்பாதித்துக்கொள். கெடுபுத்திகொண்டு அழிந்து போகாதே' என்று மகாத்மா விதுரன் சொன்னது துரியோதனாதிகளின் சபையில் எடுபட்டதா? எனக்கு ஸ்வாரஸ்யமாக எழுத தெரியாமலிருக்கலாம். ஆனல் உண்மையைப் புரட்டிச் சொல்ல என்னாலே முடியாது. என் எழுத்துக்கு மார்க்கட்டு இல்லாமல் போனால் என்ன' என்று ஆசிரியர் ஆவேசத்தோடு முடித்தார்.

கதா காலட்சேபத்துக்குச் சன்மானத்தைப் போல, உப்புமாவையும் காப்பியையும், அவருடைய மனைவி அவருக்கு எதிரிலே நொடிப் பொழுதில் கொண்டு வந்து வைத்தாள்.

---

20. துர்மந்திரி

முன் காலத்திலே அரசனுக்கு, ஒரு விதூஷகன் இருப்பான். பொழுது போக்குக்காக ராஜ்யபாரம் நடத்தும் அரசனுக்கு, எப்படி பொழுது போகாமல் இருக்க முடியும் என்று கேட்கப்படாது. பொறுப்பும் புத்தியும் இல்லாத அரசனுக்கு எப்படி பொழுது போகும்? பொழுதை அலட்சியம் செய்யும் விகடகவியும் பொழுதைக் கொல்லும் அரசனும் ஒன்று சேருவது இயல்பானதுதான்.

இதைப்போலவே, பலவானிடத்தில் துர்மந்திரி ஒட்டிக்கொள்வது இயல்பு. துரியோதனனுக்கு துர்போதனை செய்ய துர்மந்திரியாய் வாய்த்தவன் சகுனிமாமா. ராவணனுக்கு மகோதரன் அவ்வாறு வாய்த்தான். சொல்லப் போனால் தங்கை சூர்ப்பனகைகூட அண்ணன் ராவணனுக்கு துர்மந்திரியாகத் தோன்றினள். சூர்ப்பனகையின் துர்போதனை இல்லாமல் போனால், ராவணன் சீதாபிராட்டியை தூக்கிக்கொண்டு போயிருக்கமாட்டான். ராமன் பேரில் வெறிகொண்ட சூர்ப்பனகையின் மனோரதம் பூர்த்தியாகாததால், அவள் விஷமம் செய்துவிட்டாள்.

தசரதருக்கு வீர சாரத்தியம் செய்த கைகேயி லேசான ஸ்திரீ அல்ல. பலிஷ்டை என்றே சொல்ல வேண்டும். அவளுக்கு துர்மந்திரியாக வாய்த்தாள் கூனி. தன் மகன் பரதனுக்குச் சமமாகவும் அதற்கு மேலாகவும்கூட ராமனைப் பாவித்து வந்த கைகேயியின் மனதை மாயக்கார கூனி சன்னம் சன்னமாக அடியோடு மாற்றிவிட்டாள்.

சர்ச்சிலுக்கு இப்பொழுது துர்மந்திரியாக வாய்த்திருப்பவர் அமெரி. சகுனி முதல் அமெரி வரையில்

உள்ள துர்மந்திரிகள் தன்மையில் மிகச் சிறியவர்கள். அப்படி இருந்தும் அவர்கள் சரித்திரத்திலும், புராணத்திலும் இடம் பெற்று விடுகிறார்கள். மகா பாரதப் போரை உண்டாக்கியவன் சகுனி. ராமாயணத்தின் போக்கை மாற்றியவள் கூனி. ரஷ்யப் புரட்சிக்கு முக்கிய காரணமாய் நின்று, அதைத் தூண்டியவன் ராஸ்புடீன் என்ற பாதிரி.

ராஸ்புடீன் தன்மையில் மிகச் சிறிய மனிதன் பயமுறுத்தும் வேலையில் அவன் நிபுணன். அவன் ரஷ்ய ஜார் குடும்பத்தாரைப்பயமுறுத்தித் தன் கைக்குள் போட்டுக்கொண்டான். ஜனங்களை நசுக்க, ஜாருக்கு துர்போதனை செய்தான். பயத்தைக் கையாண்டு, பிரஜைகளை ஆளலாம் என்று யோசனை சொன்னான். இதன் பலன் என்ன? அவன் சுட்டுக்கொல்லப்பட்டான். ஜார் குடும்பம் நாசமாய்ப் போயிற்று. ரஷ்யப் புரட்சி பலித்து விட்டது.

ராஸ்புடீனைப் போன்றவர்கள் சிறிய பேர்வழிகளாய் இருந்த போதிலும், அவர்கள். உலகத்தின் போக்கையே மாற்றிவிடுகிறார்கள். காரணம் என்ன? பார்வைக்குப் பலசாலிகளாகத் தோன்றுபவர்கள் இந்த சிறிய மனிதர்களிடம் சிக்கிக்கொள்ளுகிறார்கள். சிக்கிக்கொண்டதும், சிறிது பெரிது என்ற வித்தியாசம் இல்லாமல் போய்விடுகிறது.

சகுனியைப் போன்றவர்கள் ஏன் துர்போதனை செய்ய வேண்டும்? துர்போதனை செய்வது அவர்களுடைய சுபாவமா? சுபாவம் என்றுதான் தோன்றுகின்றது. ராம பட்டாபிஷேகத்தை நடக்காமல் கூனி செய்தாளே, அவள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? ராமன் எப்பொழுதாவது கூனியை அவமானப்படுத்தினரா? அவமானப்படுத்தினதே இல்லை. அப்படியிருந்தும்

ராமன் பேரில் பழி வாங்குவதைப் போல, கூனி காரியம் செய்துவிட்டாள்.

துர்மந்திரிகளின் சுபாவமே விநோதமானது. அவர்களுடைய புத்தி கோணல்புத்தி. எனவே உலகம் நேராகவே சென்று கொண்டிருந்தால், அதைக் கோணல் பாதையில் போகச் செய்யப்பார்ப்பது அவர்களுடைய சுபாவமாகும். தேள் கொட்டுவது அதனுடைய சுபாவமாகும். அதைப்போல துர்மந்திரிகளின் துர்போதனையும் அவர்களுடைய சுபாவமாகும். ஊரெல்லாம் ஒரு வழி நடக்க, துர்மந்திரி தனிவழி நடப்பதுதான் அவனுடைய சுபாவமாகும்.

சாதாரணமாக, சுகத்தைக் கண்டு சந்தோஷப்படுவது மனித இயற்கை. ஆனால் புலியின் தன்மை வேறுவிதமானது என்று சொல்லுகிறார்கள். தான் பாய்ந்த மிருகத்தைத் துன்புறுத்தி அது அலறுவதைப் பார்த்தால் புலி சந்தோஷப்படுமாம்.

உலகத்தில் புலியைப் போன்ற மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உலகத்தின் சந்தோஷமும், சுபிட்சமும் பிடிப்பதில்லை. உலகம் துர்பிட்ச நிலைமையில் இருந்து துக்கப்படுவதைப் பார்ப்பதிலேதான் இவர்களுக்குச் சந்தோஷம். ஆகையினால் துர்மந்திரிகள் கொள்கை உடையவர்கள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் அதிகார ஆசையினாலோ அல்லது சொந்த சுகத்தைக் கருதியோ, துர்போதனைப் பாடம் படிப்பதில்லை. கூனி, கூனியாகத்தான் இருந்தாள். சகுனி சக்கரவர்த்தியாகிவிடவில்லை. மகோதரன் பெரிய ராஜ்யாதிபதியாக ஆகிவிடவில்லை. சூர்ப்பனகைக்குப் பட்டமகிஷிப் பட்டமும் கிட்டவில்லை.

எனவே, துர்மந்திரிகள் துர்போதனை செய்து உலகத்தை பாழாக்கப் பார்ப்பது அவர்களுடைய சுபா

வத்தினுல்தான். நாரதருக்குக் கலகத்தில் பிரியம் என்கிருர்கள். கலகம் செய்வது அவருடைய சுபாவம் என்றுதான் கொள்ளவேண்டும்.

துர்மந்திரிகளை நாம் ஏசலாகாது. ஒருவன் தனக்கு இயல்பாயுள்ள சுபாவத்தை வெளிக்காண்பித்தானுகில், அவன் உண்மையை மறைக்கவில்லை என்று நாம் சந்தோஷப்படவேண்டும். அதற்காக அவனை ஏசவும் பேசவும் கூடாது; மேலும் துர்மந்திரி உலகத்தில் இருப்பதாலேதான், நல்ல முறைகளுக்கு, நேர்மையான வழிகளுக்கு, அர்த்தமும், தேவையும், மதிப்பும் உண்டாகின்றன.

வெயில் கடுமையாகக் காயாமல் போனுல், நிழலுக்கு மதிப்பும், தேவையும் ஏற்படமாட்டா. மழைவிடாமல் பெய்தால்தான் வீட்டுக்கு அவசியம் உண்டாகின்றது. இரவு இல்லாமல் போனுல் பகலுக்கு மதிப்பிருக்காது. இருட்டு இல்லாமல் போனுல் வெளிச்சத்தை யாரும் கொண்டாட மாட்டார்கள். உள்ளே இருந்து வில்முடுக்கும் துர்மந்திரிதான் உலகத்தின் முற்போக்குக்குச் சூட்சுமமான காரணமாய் விளங்குகிருர். தேசத் துரோகியின் ஈனச் செயலினுல் தேச பக்தி வீறிட்டெழுகின்றது.

அமெரியைப்போன்ற துர்மந்திரியின் துர்போதனையால்தான் இந்தியா ஒற்றுமைபட்டு முன்னேறப் போகின்றது.

துர்மந்திரிகள் விரல் வைத்து அழுக்கும் சுரங்கள் மூன்று. கூனி கைகேயியின் மனதை எப்படி மாற்றினுள்? முதலில் பொருமை என்ற சுரத்தில் கை வைத்து அழுத்தினுள். பிறகு கைகேயியின் சுயநலத்தை தொட்டாள். பின்னர் கைகேயியின் பயத்தின்பேரில் பாய்ந்தாள். மூன்றும் சேர்ந்து கைகேயின் மனதை மாற்றிவிட்டன.

ராமனுக்கு பட்டாபிஷேகமானுல், பரதன் பவிஷு இல்லாமல் போய்விடுவான் என்று முதலில் பொருமைக்

கனலை மூட்டினாள். பரதனுக்குப் பட்டம் சூட்டினால், தாயாகிய கைகேயிக்குப் பெருமை என்று சுயநலத்தை கூனி குறிப்பிட்டாள். ஒன்றுமில்லாமல் போனால் கைகேயின் நிலைமை என்னவாகும் என்ற பயத்தை எழுப்பிவிட்டாள். மூன்றும் தக்க சேர்மானங்களல்லவா?

மனித சமாஜத்தில் கீழ்மையான தன்மைகள் வெகுவாக லீலைகள் செய்யும். சந்தர்ப்பங்களிலேதான், மேன்மைக் குணங்கள் தோன்றுவதற்குத் தூண்டுதல் ஏற்படுகின்றன. இது வெறும் தத்துவமல்ல என்று கீதை சொல்லுகின்றது. அதர்மம் நிறைந்து, தர்மம் மறையுங் காலையில் நான் அவதரிப்பேன்' என்று கண்ணன் சொன்ன வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம்?

தீய சக்திகளினால் உலகம் பாழாய்ப்போகும். ஆனால் உலகம் பாழாய்ப் போகும்படியாக இயற்கை விடுவதில்லை. எனவே தீய சக்திகளைவெருட்டி அடித்து வெற்றி பெறுவதற்காக, நல்ல சக்திகளைத் தோற்றுவிப்பது இயற்கை செய்யும் வேலையாகும். ஆகவே எந்த சமயத்தில் கெட்ட தன்மைகள் அதிகமாக இருக்கின்றனவோ, அதே சமயத்தில் மேன்மையான தன்மைகளையும் காணலாம். உலகம் கொலைக்களமாக இருக்கும் இந்த சமயத்திலே தான், உயிர் வாங்கும் வித்தையை அடியோடு வெறுக்கும் கருணைக்கடலான காந்தி அவதரித்திருக்கிறார் என்பது இயற்கையின் சட்டத்துக்கு மிகவும் பொருத்தமானது.

அசுரர்கள் தோன்றாவிடின் அவதாரங்களும் தோன்ற மாட்டார்கள். துர்மந்திரி இல்லாவிடில், தர்ம வழியும் கண்ணில் தென்படாது. எனவே துர்மந்திரிகளும் உலகத்துக்கு ஒரு வகையில் தொண்டு செய்கிறார்கள் என்பது கற்பனையல்ல. அது அடிப்படையான உண்மையாகும்.

PRINTED AT THE B. N. K. PRESS, 37, ACHARAPPAN ST., MADRAS - 1